# முடியரசன்
# கவிதைகள்

# முடியரசன் கவிதைகள்

முடியரசன்

தொகுப்பாசிரியர்

**தமிழண்ணல்**

(இராம. பெரியகருப்பன் M. A)

பாரி நிலையம்
59.பிராட்வே · சென்னை-1.

இரண்டாம் பதிப்பு
வள்ளுவர் ஆண்டு 1992
மே-1961

உரிமை ©
து. கலைச்செல்வி அவர்கட்கு

இந்நூலில் உள்ள பாடல்களையோ வரிகளையோ எடுத்தாள விரும்புவோர் கவிஞரின் இசைவைப் பெறுதல் வேண்டும்.

விலை ரூபாய் நான்கு.

முத்தையா அச்சகம். 202, ஜானி ஜான் தெரு, சென்னை-14.

முடியரசன்

## படைப்பு

செயல்புரிந்து நாடோறும்
செந்தமிழ்க்குத் தொண்டுசெயும்
மயிலைசிவ முத்துக்கு
மலர்க்கவிதை படைக்கின்றேன்

# வாழையடி வாழை

I

தமிழ் ஒரு கவிதைப் பண்புள்ள மொழி; பாவலர்தம் நாவிலே பண்வளர்த்த மொழி. உலகிலே கவிதை பாடுவதற்கு மிக எளிதில் வரும் மொழி தமிழ் ஒன்றுதான்!

ஆனால் அ, ஆ அறிந்தவரெல்லாம் அறிஞர்களாகவும், க, கா தெரிந்தவர்களெல்லாம் கவிஞர்களாகவும் ஆக முடியுமா? உயர்ந்த கருத்துக்களின் ஊற்ருகி, மொழிப் புலமையின் கரைகண்டு, கவிதை அருவி பாய்வதன்ருே கவிஞன் உள்ளம்! சுருங்கச் சொன்னல் கவிதை பாடுவது குழந்தை பெறுவது போல. கருச் சிதையாமல் பிறக்க வேண்டும்; பிறந்த பிள்ளை கூன் குருடு நீங்கியதாக இருக்க வேண்டும்; 'இவன் தந்தை என்னோற்ருன் கொல்' என வையகம் வாழ்த்தவும் வேண்டும்.

நாட்டன்பை அடகுவைத்து, மொழிப் புலமைக்கு முற்றுப் புள்ளி வைத்து, எண்ணியதெல்லாம் கருத்து, எழுதியதெல்லாம் கவிதையென்று கூறி, விலைபோகாக் கைச் சரக்கை வீதி வலம் வந்து விற்பதற்குப் பேரம் பேசுகிருர்கள் சில 'புதுமைக்' கவிஞர்கள். புதுமைப் பித்தன் சொன்னதுபோல் மனைவி சோரம் போய்ப் பெற்ற பிள்ளையைச் சொந்தப் பிள்ளையென்று கொண்டாடுபவர்கள் கவிதை உலகிற் பெருகிவிட்டார்கள். பிறர் கருத்தைத்

திருடியும் பழங்கருத்தைத் திருப்பியும் எழுதிப் பிழைக்கிறார்கள் இந்தக் 'கவிதா மேதை'கள்! பாரதியும், பாரதிதாசனும், கவிமணியும் பிறந்த நூற்றாண்டிலே இத்தகைய 'கவிதா விற்பன்னர்'களும் பிறந்து தருக்கித் திரிவது கண்டு வியப்பன்று, வேதனை உண்டாகிறது மக்களுக்கு.

இத்தகைய சூழலுக்கிடையேதான் கவிஞர் முடியரசனின் கவிதைகளும் வெளிவருகின்றன. அவை மக்கள் மன்றத்திலே மதிப்பும், பரிசும்,மட்டற்ற வரவேற்பும் பெற்ற பிறகே வெளிவருகின்றன என்பதில் நமக்கு மகிழ்ச்சி பிறக்கிறது. வளர்ந்து வரும் வாழைத் தோட்டத்தில் ஒரு செவ்வாழையாக, வான்புகழ்சேர் தமிழ் இலக்கியப் பேரேட்டில் வரவுகலமாக, வையகமே எதிர்நோக்கும் தமிழ்த்தாயின் தண்ணளியில் முன்னணியில் இடம் பெற்று விட்டார் முடியரசன் என உணரும்போது நாம் பூரிப்படைகிறோம், வாழ்த்துகிறோம்!

நிமிர்ந்த தோற்றம், மலரும் முகம், கவர்ச்சி தரும் மீசை, துருவும் கண்கள், சுருண்ட முடி இவற்றுடன் திறந்த நெஞ்சம், சிந்திக்கும் பழக்கம், சிரிக்க வைக்கும் பேச்சு, பழகும் பண்பாடு—இவர்தான் முடியரசன். அவர் தோற்றத்தை அப்படியே அவர் கவிதைகளிலும் காணும் போது அன்று முடியரசர் நாட்டிலே தமிழ் வளர்ந்தது, இன்று முடியரசன் நாவிலே தமிழ் வளர்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது.

'இலக்கணம், சீர், தளைகட்குக் கட்டுப்படாதவனே கவிஞன்' என வால்ட்விட்மன் கூறியதாக, தமிழ் இலக்கணத்தைத் தாறுமாறாக்கிக் கொண்டு வளர்ந்து வருகிறது

ஒரு காக்கை பிடிக்கும் 'கவிஞர்' கூட்டம். செல்வாக்குள்ள வர்களின் சிறுமைக்குக் கட்டுப் படலாம்; பத்திரிகை ஆசிரியர்களின் விளம்பரப் பகட்டுக்குக் கட்டுப் படலாம்: இலக்கணத்திற்குமட்டும் கட்டுப்படக் கூடாதாம்! வால்ட் விட்மன் கூறியதிலே உள்ள உண்மையை இவர்கள் உணர வேண்டும். கவிஞன்தான் இலக்கணத்திற்குக் கட்டுப்படக் கூடாதே தவிர, கவிஞனுக்கு இலக்கணம் கட்டுப்படாமல் போய்விடக் கூடாது. இத் தகைய புது மைக் 'கவிஞர்'களைப் பார்த்து முடியரசன் பாடுகிறார்,

> ''இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
> கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெடுத்து''

என்று. இலக்கணத்தைக் கொன்றதோடு விடவில்லையாம் இவர்கள்; புதைத்து விட்டுப் பக்கத்திலேயே உட்கார்ந்து ஒப்பாரியும் வைக்கிறார்களாம் 'கவிதை' என்று! எவ்வளவு நயமான கண்டனம்! முடியரசன் பாடல்களை 'வெள்ளைக் கவிகளென' நினைத்து, உள்ளத்தை மூடி வைத்து விட்டுப் புத்தகத்தைத் திறக்காதீர்கள். வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் நயம் உண்டு, கேலியும் கிண்டலும் உண்டு, உட் பொருளும் உண்டு. எனவே உணர்ந்து, நிறுத்தி, நின்று படிக்க வேண்டும்.

முடியரசன் தாமே தம் பாடல்களைப் படித்துக் காட் டும் போது குரலிலும், கவிதையிலும், உச்சரிப்பிலும் கம் பீரம் தவழும். அவர் தம் பாடற் கருத்தை விளக்கும் போது நயங்கூறுவார், சுவை கொள்வார். கவிஞன் முதல் தரச் சுவையறிஞனாகவும் இருத்தல் வேண்டும். தம் பாடல் களைத் தாமே திரும்பிப் பார்க்கக் கூசுவோரும் உண்டு, 'விசு வாமித்திரர் பரம்பரை' போல!

துன்பத்திலும் சுவைகண்ட தென்றல் உள்ளம், தாய் நாட்டு நிலை நினைத்தால் புயலாகி விடுகிறது.

"நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில்
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெறிந்த
திருத்தாலிக் கயிற்றில்நான் எழிலைக் கண்டேன்"

ஆம்; அது கணவனை இழந்த காரிகை கண்ணகிக்குச் சிலை எடுக்க நினைத்த சேரன் செங்குட்டுவனின் எழில்; அவன் புலியெனக் கிளம்பிப் போர் தொடங்கிப் புல்லர்களைப் புறங்காட்டவைத்த எழில், வீர எழில்!

வானத்து முழுமதியாள் வார்க்கின்ற நிலவொளியை, வையகத்துப் பொற்கொடியார் முக மலர்க்குப் பிறரெல்லாம் ஒப்பிட்டார். கவிஞர் முடியரசன் காண்பதோ,

"பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்றமுழுமதியே......

என்பது கவிஞருக்குப் பொதுவுடைமை ஆட்சியிலே உள்ள விருப்பத்தை அன்று நாம் சுட்டிக் காட்ட விரும்புவது, கருத்திலே உள்ள புதுமையை!

முடியரசனின் 'ஆறு' மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு. தனிக் கவிதைகளிலே இரண்டாயிரம் ஆண்டுகளாக உயிர் பெற்று வாழும் சங்க இலக்கியம் போல் அது திகழ்கிறது.

ஆறு ஓடுகிறது, வேகமாக ஓடுகிறது. சிலம்பு தந்த இளங்கோவடிகள் காவிரியின் சிலம்பொலியைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். முடியரசனும் ஆற்றைப் பெண்ணாக்கி, அழகானதோர் கற்பனை செய்கிறார். அவளின் ஓட்டத்தைக் கண்டு கற்பனையாகச் சொல்கிறார் ஆசிரியர்,

துன்பத்திலும் சுவைகண்ட தென்றல் உள்ளம், தாய் நாட்டு நிலை நினைத்தால் புயலாகி விடுகிறது.

"நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில்
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெறிந்த
திருத்தாலிக் கயிற்றில்நான் எழிலைக் கண்டேன்"

ஆம்; அது கணவனை இழந்த காரிகை கண்ணகிக்குச் சிலை எடுக்க நினைத்த சேரன் செங்குட்டுவனின் எழில்; அவன் புலியெனக் கிளம்பிப் போர் தொடங்கிப் புல்லர்களைப் புறங்காட்டவைத்த எழில், வீர எழில்!

வானத்து முழுமதியாள் வார்க்கின்ற நிலவொளியை, வையகத்துப் பொற்கொடியார் முக மலர்க்குப் பிறரெல்லாம் ஒப்பிட்டார். கவிஞர் முடியரசன் காண்பதோ,

"பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்றமுழுமதியே......

என்பது கவிஞருக்குப் பொதுவுடைமை ஆட்சியிலே உள்ள விருப்பத்தை அன்று நாம் சுட்டிக் காட்ட விரும்புவது, கருத்திலே உள்ள புதுமையை!

முடியரசனின் 'ஆறு' மிகச் சிறந்த இலக்கியப் படைப்பு. தனிக் கவிதைகளிலே இரண்டாயிரம் ஆண்டுகளாக உயிர் பெற்று வாழும் சங்க இலக்கியம் போல் அது திகழ்கிறது.

ஆறு ஓடுகிறது, வேகமாக ஓடுகிறது. சிலம்பு தந்த இளங்கோவடிகள் காவிரியின் சிலம்பொலியைச் சித்திரித்துக் காட்டியுள்ளார். முடியரசனும் ஆற்றைப் பெண்ணாக்கி, அழகானதோர் கற்பனை செய்கிறார். அவளின் ஓட்டத்தைக் கண்டு கற்பனையாகச் சொல்கிறார் ஆசிரியர்,

"..................தன்பால் செந்தா
மரையின்றி முகங்காட்ட முடியா ஆறு
மாள்வதற்குக் கடல்நோக்கி ஓடு தல்பார்"

என்று. ஓடும் நீரிலே தாமரை பூக்காது என்ற உண்மையை எவ்வளவு அழகான கற்பனையின் கருவாக்கிக் கொண்டார் ஆசிரியர்! கம்பனையும், பாரதியையும், பாரதிதாசனையும் வைத்துக் கொண்டு, பார்த்துப் பார்த்துக் கவிதை பாடி, அவர்களின் கருத்தையும் வரிகளையும் சேர்த்துச் சேர்த்துச் செய்யுள் எழுதும் சில 'கரும வீரர்'களும் இந்த ஆற்றைப் போல் முகங்காட்ட முடியாமல் ஓடுவதைத் தான் நாம் காண்கிறோம்!

"கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்
காட்சிதரும் குஞ்சுகள்"

கோழிக்குஞ்சுகளின் உருவத்திலே மட்டுமன்று, கவிதையிலும் தெளிவு, உவமையிலும் புதுமை! ஆம், ஒவ்வொன்றும் ஒப்பற்ற கவிதை. 'இயற்கைத் தாய்' அற்புதமான படைப்பு; யாரும் கற்பனை செய்யாத கவிதை.

வாழும் நாட்டிலே பிறந்த கவிஞன், நாட்டின் வளத்தையும் நலத்தையும் பாடுவான். சங்க இலக்கியம் அதற்குச் சான்று. அல்லற்பட்டு அவதியுறும் நாட்டிலே வாழும் கவிஞன் ஆனந்தப்பண்பாட மாட்டான். குமுறும் நெஞ்சம் எரிமலையாக, கொதிக்கும் குருதி கொடுவாளாக, பெருமை குறைவது கண்டு பெருமூச்சுவிட்டுக் கருத்தற்ற மக்களைக் கண்டு கண்ணீர்விட்டுப் பாடுவான். அவன் குரலிலே சோகம் இருக்கும்; கவிதையிலே கனலிருக்கும்; கருத்திலே

எழுச்சி யிருக்கும். ஏன்? கவிஞன் காலங் காட்டும் கண்ணுடி என்கிருர்கள் அந்தக் கண்ணுடியிலே உண்மை உருவம் கண்டால், தங்கள் உருவம் தெரிந்தால் 'பிரச் சாரம், அரசியல்' என்று மழுப்பிக் கவிஞனைக் குறைத்து மதிப்பிடவும் துணிகிருர்கள். இத் திருஞய்வுப் பெரியோர் கள் நல்லது செய்யத் தெரியாவிட்டாலும், அல்லது செய் யாமல் அடங்கியிருக்கலாம்.

'சங்க இலக்கியம் ஒரு வாழைத் தோட்டம்' என்கிருர் டாக்டர். மு. வ. அத் தோட்டத்தில் வாழையடி வாழை யெனப் பாரதியைப் போல, பாரதிதாசனைப் போல முடி யரசன் தோன்றியுள்ளார். இளம் வாழை, இனிக்கும் வாழை, ஈனும் வாழை இந்த வாழை! நல்ல எண்ணமும் நாட்டன்பும் கொண்டவர்க்கு நல் விருந்து, குடிகெடுக்கும் சூது மதியினர்க்கு நல்ல மருந்து இவ் வாழை! அருந்துக என நாம் சிபாரிசு செய்ய வரவில்லை. ஏன்? வண்ண நிலவை, வளர் கரும்பை, தெவிட்டாத தேனை, தித்திக்கும் கற் கண்டை, நலம் வளர்க்கும் மலை வாழையை, தீந்தமிழை உண்ண வருக என்று இதுவரை யாரும் சிபாரிசு செய்த தில்லை, அதனல்.*

II

மொழி அறிவு வாய்க்கப் பெற்று, தமது ஆழ்ந்த உணர்ச்சிகளைப் பிறர் மனத்தில் நிகழ வைக்கும் ஆற்றலும் வாய்த்திருந்தால் ஒருவர் கவிஞராகத் திகழுதல் கூடும்.

---

*இதுவரை முதற் பதிப்பின் மதிப்புரையாக 1954-ல் வெளிவந்தது. பின் வரும் பகுதிகள் இரண்டாம் பதிப்பிற்கு எழுதியன.

இவ்விரண்டினுள் ஏதேனும் ஒன்று மட்டும் இருந்து விட்டால் போதாதா என்று துடிதுடிப்பவர்கள் உளர்; அவர்கள் 'குழந்தை பெறுவதற்கு மனைவிதானே இன்றி யமையாதவள், கணவன் எதற்கு?' என்று கேட்பவர்கள். கவிஞர் முடியரசன் தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகப் பயின்றவர்; தம் வாழ்வை ஆழ்ந்த உணர்ச்சி களின் கோவையாக்கி, அதனால் தமது மனத்தை மிக்க மென்மையும் நுண்மையும் உடையதாக்கிக் கொண்டவர். பிறருடைய உள்ளத்தில் தம்முடைய உணர்ச்சிகளை எதி ரொலிக்க வைக்கும் இணையற்ற ஆற்றலும் வாய்த்தவர்; இதனால்தான் இவரைப் 'புதுமைக் கவிஞர்' என மக்கள் போற்றுகிறார்கள்; இவரது கவிதைகளைத் தமிழ்க் கருவூ லத்திற்கு முடியரசர் தந்த காணிக்கை எனப் புகழ் கிறார்கள்!

III

'எம்மைப் போலக் கவிஞரும் உளரோ?' எனச் சிலர், எழுதப் புறப்படும் போதே கேட்கிறார்கள். அவர்கள் கேள்வியில் உண்மையும் இருக்கிறது.

பொதுவாக, கவிஞனுக்கு 'இலக்கியப் பரம்பரை உணர்வு' ஒன்று வேண்டும். எத்தனை எத்தனையோ நூற் றாண்டுகளாக வருகின்ற கவிஞர் பரம்பரையிலே தானும் ஒருவன் என்ற எண்ணம் வேண்டும். பழைய 'மரபுகளை' வெட்டிச் சாய்க்கப் புறப்படாமல் ஒட்டிக் காக்க முற்படு கிற பழக்கமும் வேண்டும்.

பழங்காலக் கவிஞர்களையெல்லாம் இழித்துப் பேசி விடுவதாலும், தம் காலக் கவிஞர்களையெல்லாம் பழித்து

நகைத்து விடுவதாலும் தாம் மட்டும் கவிஞராகிவிடுவதாகச் சிலர் நினைப்பு. இவர்கள் கவிஞர்கள் அல்லர்; தாம் அமர்ந் திருக்கும் 'கோடு குறைக்கும்' அறிஞர்கள்! பழைய இலக் கியங்களின் அமைப்பு, போக்கு, நடை முதலிய சிறப்புக் களை இவர்கள் திரும்பியும் பார்ப்பதில்லை; இதனால் இவர் கட்குப் பரம்பரை உணர்வும் வாய்ப்பதில்லை.

பாரதிதாசனைத் தந்தை என்றும் பாரதியைப் பாட் டன் என்றும் உரிமையோடு கூறிக்கொள்ளும் முடியரசன், அவர்களைப் போலப் பரம்பரையுணர்வு மிக்கவர். பழைய தமிழ் இலக்கிய மரபுகளைக் கற்றுப் போற்றுபவர். இத னால்தான் 'வாழையடி வாழை என' வந்த கவிஞர் கூட்டத்தில் சிறப்புடைய ஒருவராக இவர் திகழ்கிறார்.

IV

சில கவிஞர்களிடையே மற்றுமொரு குறை உளது. இந் நாட்டுக் கவிஞராகத் திகழ ஆசைப்படும் இவர்கள் தமிழைப் புறக்கணிக்கின்றனர்; தமிழ் இலக்கிய, இலக் கண அறிவை இழித்துரைக்கின்றனர்; தமிழ், தமிழினம், தமிழ் நாடு என்பதெல்லாம் குறுகிய மனம் எனக் குறை கூறுகின்றனர். மேனாட்டுக் கவிதைகள் பற்றித் தாம் கேட் டதையும் ஒரு சில பார்த்ததையும் வைத்துக் கொண்டு அந் நாட்டு மரபுகளையே பின்பற்றுகின்றனர். அவற்றையே புகழ்ந்து திரிகின்றனர். இதற்குச் சார்பாக 'யாம் இந் நாட்டிற்கு மட்டும் உரிய, குறுகிய மனம் படைத்த கவிஞர் அல்லேம், உலகக் கவிஞராவேம்' என்று இறு மாந்து பேசுகின்றனர்.

பாரதியையும் தாகூரையும் அறிந்தால் இவர்கட்கு உண்மை விளங்கும். அவர்கள் தங்கள் தங்கள் நாட்டுக்கு முழு உரிமையுடைய கவிஞர்களாகத் திகழ்ந்துதானே உலகக் கவிஞர்களாக உயர்ந்துள்ளார்கள்! அவ்வாறன்றி 'உடனே உலகக் கவிஞராகும் போக்கு,' காலூன்றி நடக்கப் படிக்காத குழந்தை, தாவப் படித்த கதையாகும். மேலும் இத்தகையவர்கள் நிலை, காலம் மாறி விதைக்கப் பட்ட பயிர் போலவும் இடம் மாறி நடப்பட்ட செடி போலவும் இரங்கத் தக்கதாக முடியும்!

பாரதியைப் பாருங்கள்; தமிழ் என்ருல் தேனூறும் நன்னெஞ்சம் அவன் நெஞ்சம்! தமிழ் நாட்டுப் பெயர் கேட்டால் தேன் பாயும் இரு செவிகள் அவன் செவிகள்! தமிழினத்தைப் பாடுங்கால் பூரிக்கும் இருதோள்கள் அவன் தோள்கள்! இத்தகையான் குறுகிய மனத்தவனு? கூறுங்கள்! கவிஞன் என்பவன் நுண்மை மிக்க உணர்வுடையவன். நாட்டுப் பற்றின் உயர்ந்த எல்லையையும், மொழிப் பற்றின் ஆழ்ந்த எல்லையையும், இனப் பற்றின் விரிந்த எல்லையையும் கவிஞன் ஒருவனிடந்தான் காண முடியும். கவிஞனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய இவ்வுணர்வுகளையே குறுகிய மனம் என்று குறை கூறுவது முறையாகுமா?

பிறந்த மண்ணில் காலூன்ருமல், உண்ட சோற்றுக்கு நன்றி காட்டாமல், உணர்வூட்டிய மொழிக்குத் துணையாகாமல் பரந்த மனப் பான்மை பேசும் விரிந்த அறிவு எதற்கு? அந்தக் கூட்டத்தில் சேராததால்தான் முடியரசன் சிறப்புடைய கவிஞராகத் திகழ்கிருர். இவரது பாடல்களில் வரிக்குவரி, சொல்லுக்குச் சொல் இவ்வுணர்வுகள்

விரவிப் படிப்பவர்களைப் பண்புள்ளவர்களாக்கும் பான்மையுடன் திகழ்கின்றன. இவற்றைக் குறை என எண்ணுவோர் இருந்தால், அவர்கள் நெஞ்சம் இனியேனும் நிறைவுறுக என வாழ்த்துவோம்.

V

கவிதையை மதிப்பிட அதன் வடிவம், கற்பனை கருத்து, நடை, சொல்லாட்சி, உணர்ச்சி, உணர்த்துப முறை, அணி நலம், சுவை—இனையன பல அளவுகோல்களாகும். இவை அனைத்தையுமே கொண்டு எல்லாக் கவிதைகளும் விளங்குவன என எண்ணுதல் கூடாது. ஒரு கவிதைக்கு நிலைத்த வாழ்வும் பெரும் புகழும் தர, இவற்றுள் சில நலங்கள் மட்டும் அமைந்திருந்தாலும் போதும் ஒன்றிரண்டு பகுதிகள் மட்டும் தனிச் சிறப்புடன் அமைந்திருந்தாலும் போதும்.

கவிஞர் முடியரசனின் கவிதைகளைக் கற்பவர்கள், இவற்றுள் பல நலங்களையும் பெற்று அவை விளங்குவதை உணர்வர். வற்றாத கருத்தென்னும் வளமான கடலின் கண், அரிய உணர்வென்னும் ஆறாத அலைமேலே பாட்டுத்திறத்தோடு மனங்கவரும் கற்பனையாம் பாய்மரத்துக் கலமேற்றி, எழிலே உருவான இன்பக் கரை நோக்கி நம்மையெல்லாம் அழைத்துச் செல்லும் இலக்கியம் இது.

வண்டுகள் மலர் தோறும் சென்று தேனை உண்டு வருவது,

'கடன்பட்ட மாந்தரிடம் வட்டி கேட்கக்
கடைதோறும் புகுந்துவரும் கணக்கனைப்போல்'

இருக்கிறது என்கிருர். காலத்திற்கு ஏற்ற உவமை என்பீர்கள். அது மட்டுமன்று, கவிஞர் வாழ்ந்த காலத்துக் கொடுமைகளுள் ஒன்றை, உள்ளபடி காட்டும் கண்ணுடியும் ஆகும்.

இவ்வாறு பாடிச் செல்லும் வண்டை 'அடைபட்டுக் கிடக்கவெனச்' சொல்லி 'அல்லிமலர்க் கூட்டம்' குவிந்து கொண்டதாம். இக் கற்பனை, இத்தகைய கொடுமைகட்கு எதிர்காலத்தில் எத்தகைய முடிவு உண்டு என்பதையும் நமக்குச் சொல்லி வைக்கின்றது.

நீங்கள் பொதுக் கூட்டங்களுக்குப் போயிருக்கிறீர்கள்; அங்கு ஒரு கட்சிக்காரர் பேசும்போது, மற்ற கட்சிக்காரர்கள் குழப்பம் விளைவிப்பதுண்டு. இது முறையாகுமா? வெறும் வன்முறைச் செயலுக்காக அஞ்சி, மதியுடையவர்கள் மீண்டும் மேடை ஏருது இருப்பார்களா? இக் குழப்பம், இந்த உலகத்தில் மட்டுமென்ன, வானுலகத்திலும் நடைபெறுகிறது.

விண் மீன்களின் பெருங் கூட்டத்திடையே மதியர் என்னும் அம்புலியார் மேடை ஏறிச் சொற்பொழிவு செய்கிருர். இதைப் பொறுக்காத எதிர்க்கட்சி முகிலன் விளக்கை அணைத்து ஒளியை மறைத்தான். இடியிடித்துக் குழப்பத்தை உண்டாக்கிஞன். முடிவு என்ன? மீண்டும் அமைதி நிலவுகிறது; கூட்டம் கலையவில்லை. மதியர் மீண்டும் மேடை ஏறிவிடுகிருர்; விடியும் வரை சொற்பொழிவு நிகழ்கிறது.

**'மதியுடையார் பேசுவதைக் கேட்டல் நன்று**
**மாண்புவரும் எனக்குழுமும் விண்மீன் கூட்டம்**

அதுமகிழ வானத்து மேடை ஏற்
அம்புலியார் சொற்பொழிய முகி...
எதிரியெனக் கூட்டத்துள் ஒளிம றைத்தான்
இடியிடித்தான் குழப்பத்தை ஆக்கி விட்டான்
இதிலென்ன கண்டனனோ? மதியர் நாளை
ஏருமல் இருப்பாரோ மேடை மீது?'

எவ்வளவு அழகிய கற்பனை! இன்றையக் குழப்ப அரசிய லைக் கூட ஒரு கணம் மறந்து, இக் கற்பனை இன்பத்திலே நாம் ஈடுபட்டுவிடுகிறோம்.

மேலும் 'பட்டிக்காட்டான்,' 'இளமையில் நரை' என்ற கவிதைகளும் இன்றைய வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. 'காவலும் களவும்' என்ற தலைப்பில், இவர், நாட்டுத்தலைவர்களின் நன்றி கெட்ட செயலை மிக வும் கடிந்துரைக்கின்றார். இவ்வாறு, பல இடங்களில் இவர் தாய் நாட்டுக்காக வழக்காடும் முறையிலே பாடுகின் றார். தன் கட்சியை, அடித்துப் பேசும் வழக்கறிஞனைப் போலக் காணப்படுகிறார். கவிஞருக்கு ஏன் இந்த வேலை என்று கேட்பவர்களுக்கு, 'உலகை ஆளும்—அறிவிக்கப் படாத—சட்ட மன்ற உறுப்பினர்களே கவிஞர்கள்'* என்ற ஆங்கிலக் கவிஞர் ஒருவரின் கருத்தைத்தான் விடை யாகக் கூற வேண்டும்.

வின்செஸ்டர் என்னும் இலக்கியத் திறனாய்வு அறிஞர், 'கவிஞன், ஒரே ஒரு வரியினாலே—சில சமயங் களில் ஒரே ஓர் அடைமொழியினாலே கூட உணர்ச்சி நிறைந்த உயிரோவியமொன்றை நம் கற்பனையிலே பளிச்

---

*"Poets are the nacknowledged legislators of the world'.
—P. B. Shelley.

சிடச் செய்ய முடியும்' என்று கூறிக் கவிஞனின் ஆற்றலை விளக்குகிருர்.* கைவல்ல ஓவியன் சில வரை கோடுகளை இழுத்து, உயிருள்ள ஓவியத்தைப் படைத்து விடுவது போன்றது இது.

நாற்று நடும் பெண்களைச் 'சுழன்ருடும் குழல்மாதர்' என்னும்போது அவர்களது இயக்கம் உணர்த்தப்படுகிறது. 'கால் இழுத்துத் தவழ்கின்ற குழந்தை' என்றதும் நம் முன்னர்த் தவழ்ந்து வரும் குழந்தையையே நாம் காண்கின்ருேம். 'விரிகொம்பு மான்' என்பது ஓர் ஓவியம். 'தும்பி எழுந்து ஆர்க்கின்ற முல்லை' என்பது ஓர் ஒளிப் படம். 'மண் தின்ருல் தீமை என அறியாப்பிள்ளை' ,குழந்தையின் வயதையும் இயல்பையும் காட்டும் அளவு கருவி. 'சினந்துரைக்க நீர் சிந்தும்' பசித்த கண்கள்' என்பது வறுமைக் காவியம். ஆம், பணம் உடையவர்கள் சினந்துரைப்பதும் பசித்தவர்கள் அழுவதும்தானே உலகத்தின் கடைச்சரக்கு; காவியங்களின் கைச்சரக்கு! வயிற்றிலே பொங்கி எழுந்த பசி, கண்களிலே வெளிப்படுவதைப் பார்த்துப் 'பசித்த கண்கள்' என்று கூறுகிருர்.

இரட்டுற மொழிதல் என்னும் சிலேடை நயத்தில் இக் கவிஞர் மிகவும் வல்லவர். இவர், கவிதைகளில் பெரும்பாலானவற்றில் உட்பொருள் வைத்தே பாடியுள்ளார். உண்மையிலேயே 'உய்த்துணரும் வகையிலே படைப்பதுதான்' கவிதையின் நீடித்த வாழ்வுக்கு உதவும்.

---

*In a single line, sometimes in a single epithet the Poet can flash upon our imagination a Picture that shall seem filled with passionate emotion—C. T. WINCHESTER.

'படைத்தோன் வாழ்க' என்ற தலைப்பை எடுத்துக் கொள்ளுங்கள், மைசூரின் பிருந்தாவன எழிலைப் பற்றிய கவிதை இது. இத்தகைய இயற்கை எழிலைப் படைத்த கடவுளை வாழ்த்துகிறார் கவிஞர் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள்; அன்று! நெற்றி வியர்வை சிந்தி, நெடு நாளாய்ப் பாடுபட்டுச் சிறிது சிறிதாகப் பேரெழிலைச் சேர்த்துத் தந்த தொழிலாளர்கள் அல்லவா அதைப் படைத்தவர்கள் ! அவர்களை வாழ்த்துகிறார்.

படைத்த கடவுள் நேரே வந்து பயன் தந்ததாகப் புராணக் கதைகளிலும் இல்லை. அவதாரங்கள் எடுத்து வந்து அவர் உதவுவதாகவே அவைகள் கூறும். படைத்த கடவுள் தொழிலாளர் வடிவிலே வந்து இம் மாபெரும் கனவுலகப் பூங்காவை நனவாக்கித் தந்தார் என நம்பினால் நாம் தொழிலாளர்கட்கு நன்றியும் கடவுளுக்கு வணக்மும் செலுத்தியவர்களாகிறோம். அதை விடுத்து, கடவுளை மட்டுமே போற்றுவோம் என்று கூறித் தொழிலாளர்களை மறப்பவர்கள், கடவுள் எந்த உருவத்திலே வந்து உதவினாரோ அதனையே விலக்கித் தள்ளுகிறவர்கள் ஆவார்கள். இதனால் அவர்கள் கடவுளை விட்டே நெடுந்தூரம் விலகிச் சென்று விடுகிறார்கள்.

'தமிழ் வழங்காக் கோவிலுள்ளே தலையைக் காட்டேன்' என்கிறார் கவிஞர். ஆம், மன ஈடுபாட்டுடன் வணங்க முடியாத நிலையைத்தான் இன்றையக் கோயில் களில் காண்கிறோம். அமைதியான சூழ்நிலையில் தன் குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லி, தானே மனம் விட்டுப் பாடி, கடவுளை வணங்க வாய்ப்புத் தர வேண்டும். அன்பனுக்கும் ஆண்டவனுக்கும் நேரடித் தொடர்பு

ஏற்பட வழி வேண்டும். எனவே எந்த நோக்கங் கருதி, இக் கோயில்கள் வானுற எழுப்பப் பட்டனவோ அந்த நோக்கத்திற்கு அவை இன்று பயன்படவில்லை என்பதைத் தான் இந்த அடிகள் நினைப்பூட்டுகின்றன.

கவிஞன் எதைச் சொன்னாலும் அழகுணர்ச்சி பொருந்த, வியப்புணர்ச்சி படியத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். 'நன்றாகச் சொல்லியுள்ளானா' என்பது தான் கேள்வி. எதைச் சொன்னான் என்பதன்று. கவிதையைப் பொறுத்த வரை 'என்ன ?' என்ற கேள்வி கருத்தற்றது. 'எப்படி ?' என்பது தான் சிறப்புத் தருவது* என்று பேராசிரியர் பிராட்லி கூறுகிறார். தோற்று விட்டேன் என்ற தலைப்பிலே வரும் கவிதைகளைப் பாருங்கள் எல்லோரும் பாடும் குழந்தையைத்தான் இவரும் பாடுகிறார்.

'போர்க்களத்தில் எதிர் நிற்க எவருங் காணேன்
பூரித்தேன் வீரத்தாற் செருக்குங் கொண்டேன்
தார்க் கழுத்தில் வன்புயத்தில் முகத்தில் எங்கும்
தளிரடியால் எனைமிதித்தாய் தோற்றுவிட்டேன்'

போரில் புறங்கண்டேன்; பொன்னழகி என்னை வென்றாள் என்று காதல் பூரிப்பிலே காளை கூறியதாகக் கவிஞர்கள் பாடுவதுண்டு. இவரோ போரிலே வீரத்தைக் காட்டிய என் புயத்திலும் முகத்திலும் தளிர்போன்ற மெல்லிய அடிகளால் மிதித்து, என்னைத் தோற்கவைத்து விட்டாயே என்று குழந்தையைப் பார்த்துக் கூறுகிறார். கவிஞர் எப்பொழுதுமே குழந்தைகட்குத் தோற்றுவிடும் இயல்புடையவர்தான். அவர் மட்டுமென்ன! மனித சமு

*It matters not what a Poet says, so long as he says the thing well. The 'what' is poetically indifferent; it is the 'how' that counts. -A. C. Bradley.

வளர்ச்சிக்கே இத் தோல்வி துணை நிற்குமாகையால், ரம் முறை தோற்பதற்கு நாமும்தான் ஆயத்தமாக ங்கிறோம். பிள்ளை பெருதவனையும் தந்தையாக்கும் பாமலர்கள்.

'கவிஞன் நமக்குத் தெரிந்ததைத் தானே சொல்லு ன். நாம் அன்றாடம் கண்டு, நுகரும் பல நிகழ்ச்சி த்தானே குறிப்பிடுகிறான். இதிலே தனிச் சிறப்பு ன இருக்கிறது?''

''நிறைய இருக்கிறது!''—நாம் கண்டவற்றிலேதான், வரை நாம் காணாத உண்மை ஒன்றும் இருப்பதை த்துச் சொல்லுகிறான். நாம் அனுபவிக்கும் அதே ழ்ச்சியிலேதான், நாம் இதுவரை உணராத புதுமை றும் இருப்பதைக் குறிப்பிடுகிறான். ''உரைநடை ரக்கு, நான் முன்னறியாத ஒன்றைச் சொல்லுகிறது; தையோ நான் முன்னறிந்திருந்த ஒன்றையே சொல்லு து,'' என்று சர் வால்டர் ராலே என்ற அறிஞர் றினாராம்*

கோழி எவ்வளவு கருத்தோடு தன் குஞ்சுகளைப் துகாக்கிறது. பருந்தையும் எதிர்த்து, பார்ப்புகளைச் கால் அணைத்துப் பாதுகாக்கிறது அல்லவா? அதே ாழி, தன் குஞ்சுகள் வளர்ந்தவுடன் என்ன ய்கிறது? தன் குஞ்சுகளாக முன்பு விளங்கியன ன்பதையும் மறந்து, தன் இரையை அவை கவர்ந்து டுமோ என்று அஞ்சி, மூக்கினுல் கொத்தியும் சிறகால் டித்தும் விரட்டக் காண்கிறோம் அல்லவா? இதிலே தைந்து கிடக்கும் ஒரு புதுமையான கருத்தைக்

*Sir Walter Raleigh once said that he looked to ose to tell him something he did not know before, to poetry tell him something he knew already —P. H. B. Lyon

கவிஞர் தருகிறார். தன் மகனை மிக அன்புடன் பேணும் ஒரு தாய், மருமகள் வந்தவுடனே, அவள் மீது கொள்ளும் வெறுப்புணர்ச்சியால் பெற்ற மகனையும் புறக் கணிக்கின்றாள் அல்லவா? அதற்கு இதை ஒப்பிடுகிறார் ஆசிரியர்.

'வளரக் கெடும்' என்ற தலைப்பமைந்த இப் பாடல் புதுமை மிக்க, ஒப்பற்ற கற்பனையாகும்.

ஓர் ஆங்கிலப் பேரறிஞர், "மனிதனின் உணர்ச்சிகளை ஆட்சி செய்யும்அரசர்கள்," என்று கவிஞர்களைக் குறிப்பிடு கிறார். ("Poets are the rulers of men's spirits"–J. C. Shairp.) தமிழ் முடிசூடிப் படிப்பவர்தம் மன அரியணை ஏறி உணர்ச்சிகளை ஆளும் பாட்டுத் திறத்தாலும், அதைக் கொண்டு 'வையத்தைப் பாலிக்கும்' திறத்தாலும் இவரும் முடியரசராகவே திகழ்கின்றார்.

ஆம், காதலியைப் பற்றிய கவிதையைப் படிப்ப வனைக் காதலனாக; குழந்தையைப் பற்றிய பாவை இசைப் பவனைத் தந்தையாக; மொழி பற்றிய பாடல்களில் ஈடுபடு பவனைத் தமிழனாக; பண்புதரும் பாட்டுக்களை ஓதுபவனை மனிதனாக உயர்த்தி நல்லாட்சி புரிகின்றார்.

இப் பேரிலக்கியத்தால் நாம் பெறும் பயன்கள் இத்தனை யென்றால், இவை போதாவா?

தமிழண்ணல்

# An appreciation

by

## VR. M. CHETTIAR, B.A.

'Mudiarasan' is a modern Tamil poet who is young, enthusiastic and sings with gusto of life's perplexing problems: he is a born poet, a genius indeed who enjoys life, finds out the poignant secrets of existence, and rapturously exercises his ardent imagination in building up his human theme, without being baffled by the occasional riddles of social evils and human deviations and distractions.

When he sings of Nature's myriad graces, he is enthralled by the beauty of creation which has a perennial sweetness and consoling solemnity, as a wholesome remedy for the human camouflage and delinquency of conduct.

When he sings of love, the human secrets of sweeter existence emerge in a transparent poetic picture which sincerely thrills the reader who easily understands and enjoys the poet's solemn secrets profoundly and sensitively.

When he deals with the relation between capital and labour, he goes to the root of the trouble.........the uneven distribution of wealth, the tyrannical capitalist and the struggling labourer who perhaps under a benign rule can enjoy life better, tenderly and tranquilly.

When the poet discusses the importance of Tamil as our mother-tongue, his rapture knows no bounds: he is frank, ecstatic, and assuring in his profound poetic utterance, insisting on the sincerity of his overwhelming suggestions. Even a child can easily grasp the fundamental brilliance of his argument in defence of his mother-tongue with all its alluring charms of sweeter delicacy and expansive accommodation.

When Mudiarasan recalls to his memory the achievements of Bharathithasan, Kalianasundara Mudaliar, Desika Vinayagam Pillai and the Crucifixion of Jesus Christ, he cheerfully details their solemn and enduring merits which the world always welcomes as a universal triumph of the human spirit summoned by the human crises.

When his poems tranquilly bless the souls of the great departed Indians, they have the geunine tenderness of a warm, holy enduring benediction indeed.

His miscellaneous poems enlighten us on the poetic profundity of Kambar's genius in its entire universal appeal of artistic resplendency.

Mudiarasan's poetry is charming indeed both in matter and manner: his prosodic variety will please all, and his poetic diction is racy, vivid, rippling, subtle, resonant and suggestive, employing his own concrete, convincing imagery to vivify the imaginative spell of happy human experiences in life's heaving cosmos.

The poet's ethical emphasis is direct, and never deviates from the central crisis of life's languorous lavishness.

We may assure the young poet a glorious future in the world of growing modern Tamil poetry in its expansive accommodative march. His poems console us tenderly, peacefully and permanently.

His musical compositions appear as a separate book of varied graces and inspiration: the exhilarated reader can welcome therein the poet's dignity, and clarity of harmonious diction designed for the ecstasy of musical utterance. Simple words sing rapturously, inducing a fountain of delight in the listener's ear.

Karaikudi,
11—3—1961.

*VR. M. CHETTIAR.*

## நன்றி

என் கவிதைகளை நூல்வடிவிற் கொணர வேண்டும் என்ற எண்ணம், தொடக்கத்தில் எனக்கு இருந்ததில்லை உணர்ச்சியின் தூண்டுதலால் எழுதப்பெற்றவையே இக் கவிதைகள். அவ்வப் பொழுது பல இதழ்களில் வெளியிடப் பட்டன. அவற்றையெல்லாம் தொகுத்து நூல் வடிவிற் கொணர வேண்டுமென்று நுண்மாண் நுழைபுலம் மிக்க என் கெழுதகை நண்பர் திரு. தமிழண்ணல் அரும்பாடு பட்டனர். அவர்தம் முயற்சியின் பயனாக 1954—55 ஆம் ஆண்டுகளில் இரு தொகுதிகளாக என் கவிதைகள் வெளிவந்தன.

அவ்விரு தொகுதிகளையும் பின்னர்ப் பாடப்பட்ட கவிதைகளையும் ஒன்றாக்கி வெளியிட விழைந்தனர் பாரி நிலைய உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பனார். அவர்தம் விழைவே இந் நூல் உருப்பெறுதற்குக் காரணமாகும்.

ஆங்கிலப் புலமையும் கவியுணர்வுங்கொண்டு திறனாய்வுத் துறையில் தனியிடம் பெற்றுள்ள பெருமகனார் திரு.வீ ஆர்.எம். செட்டியார் ஆங்கில முன்னுரை தந்துதவி யிருக்கின்றார், இந் நூலுக்கு.

இம்மூவர்க்கும் என் உளங்கனிந்த அன்பும் நன்றியும் என்றென்றும் உரியன.

முடியரசன்

# உள்ளுறை


**காவிய உலகம்**

காதற்சிலை 1
சுதமதி 13

**இயற்கை உலகம்**

அழகின் சிரிப்பு 21
இயற்கைத் தாய் 24
எழில் 28
நிலவு 32
காற்று 35
ஆறு 39
கடல் 45
மயிலே 50
இயற்கையின் எழுச்சி 52
படைத்தோன் வாழ்க 54
முகிலிடை நிலா 58

**காதல் உலகம்**

காதல் நெஞ்சம் 59
இன்பமில்லை 62
புதருள் கனி 64
ஏன் வரவில்லை 66
உன்னுருவே தோன்றுதடி 68
புதுமைப் பெண் 70
ஊரார் 73
பணியாள் வேண்டாம் 79
சிற்றூர்ச் செலவு 81
எந்நாளோ ? 83
குளிர் நிலா 85
குழந்தை இன்பம் 88
தோற்றுவிட்டேன் 91
எம்மவர் தந்தார் 93
முகில்விடு தூது 95
இழந்த காதல் 97
கவிதைப் பெண் 100

**தொழில் உலகம்**

தொழிலாளி 103
கூண்டுக் கிளி 105
விறகு வெட்டி 107
குதிரை நினைத்தால் 110
உணர்வார் யாரோ 112

துன்பமடா துன்பம் 113
பட்டண வாழ்வு 114
பட்டிக்காட்டான் 116
புலியேறெனை எழுவாய் 119


தமிழ் உலகம்

மொழியுணர்ச்சி 121
அவளும் நானும் 125
துயில் கலைந்தது 130
தமிழ்க் காதலி 132
தமிழ்தான் என்பேர் 135
துறைதோறும் 138
உறுதி கொள்வீர் 140


சான்றோர் உலகம்

மனத்தூய்மை 141
கவிமணி 143
திரு. வி. க. 145
மணிவிழா 148
பாரதிதாசன் 151
தமிழர் தந்தை 153
வாழ்த்துகிறோர் 155
வாயுறை வாழ்த்து 158
கா. அப்பா 160


பல்வகை உலகம்

துயில் 165
ஏது வாழ்வு 168
மாதவி 170
உள்ளம் 172
வளரக்கெடும் 174
கம்பன் குரல் 176
இறப்பே வா 182
கண்ணீர் 184
மாணவர் மன்றம் 187
வேண்டுவன 189
மணமகனுக்கு 190
குடும்பம் ஒரு காவியம் 192
இளமையில் நரை 193
பிரியா நண்பன் 194
எவர் சொற் கேட்பது 197
மன்னர் ஆட்சி 199
காவலும் களவும் 201
இள ஞாயிறு 204
மறைந்தாரோ? 206
எங்கே சென்றீரோ? 207
ஆறுத்துயரம் 208
நெஞ்சம் கலந்த தாய் 210

முடியரசன் கவிதைகள்

காவிய உலகம்

# காதற் சிலை

நிலைமண்டில ஆசிரியப்பா

தண்மலைச் சாரல் சார்தரும் சிற்றூர்
கண்கவர் பொழில்சூழ் கருமலைக் குறிச்சி
எனும்பெயர் கொண்டெழில் இலங்கிய தவ்வுழி
இனமயில் அகவ இருந்ததோர் குன்றம்;

**கலைஞன் கோட்டம்**

குன்றின் அடியில் சிற்பக் கோட்டம்
ஒன்றினை நிறுவி உலகோர் வியக்க
வாழ்ந்தனன் சிற்பம் வல்லான் ஒருவன்;
போழ்ந்தகற் பாறையிற் புகுத்திய புதுமை
கண்டார் அவனைக் கடவுளே என்பர்
கற்பனைத் திறனும் கைச்சிற் றுளியும்
பொற்புடன் படைத்த அற்புதப் பொருளெலாம்
தொடாஅது நின்று தொலைவில் காண்போர்
விடாஅது நோக்கி வியப்புற் றவையெலாம்
உயிர்ப்பொரு ளென்றே உரைப்பர்; அவர்தாம்
அயிர்ப்பொரு சிறிதும் அடையார்; அருகில்
தொட்டுப் பயின்றபின் துணிகுவர் சிலையென;
எட்டுத் திசையும் நிகரிலை எனமனம்
விட்டுப் புகழ்வர்; விளைபுகழ் மொழிகள்

கொட்டும் பொருள்கள் குறியாய்க் கொள்ளான்
கலைவளர் நோக்கம் ஒன்றே கருத்தில்
நிலையாய்க் கொண்டான் நினையான் பிறிதை;
கலையே அவனும் அவனே கலையாம்
கலைஞன் எனும்பெயர்க் கமைந்தோன் அவனே;

**கண்ணொடு கண்ணிணை**

கண்ணில் ஒளியும் கையில் உளியும்
எண்ணிற் சிலையும் இளமையின் பொலிவும்
உடலிற் கட்டும் ஒருங்குடன் பெற்றோன்
இடமுடைக் கோட்டத் திருந்துழி ஆங்கண்
அழகிள நங்கை அவன்முன் நின்றாள்
பழகிய தோழியும் பக்கலில் நின்றனள்
நிமிர்ந்தவன் நோக்கினான் நீள்விழி மீட்கிலன்
எதிரெதிர் விழிகள் இமையா திருந்தன;

**வினாவும் விடையும்**

பெண்மையின் இயல்பால் பேதை நாணினள்
அண்மையில் நின்ற ஆருயிர்த் தோழி
"எங்கள் தலைவி மங்கையர் திலகம்
உங்களை நாடி உவந்திவண் வந்தனள்
வந்தவள் தன்னை வைத்தகண் எடாஅது
நுந்தம் விழியால் நோக்குதல் முறையோ?"
என்றொரு வினாவை எழுப்பிட எழுந்தவன்
ஒன்றிய துயில்கலைந் துணர்ந்தெழு பவன்போல்
விழிகளைத் துடைத்து மீண்டுற நோக்கி
"எழிலுற வடித்த என்சிலை உயிருடன்
எழுந்திவண் வந்ததோ எனநான் மயங்கிக்
கொழுந்து நிகருடற் கொடியிடை யாள்தனை
உற்று நோக்கினேன் உறுபிழை பொறுப்பீர்!

எற்றுக் கிவ்வயின் என்பால் வந்தீர்?
பொற்றொடி இவள்யார்? புகலுதி" என்றனன்,

**காரணம் கூறினள்**

"முழுதுணர் கலைஞ! முன்னிநீ படைத்த
பழுதிலாச் சிற்பக் கோட்டம் நிறைதரு
சிலையெலாம் கண்டுநின் கலையெலாம் கண்டிவண்
உலவலாம் எனமனம் உந்திட வந்தனம்;
வளநா டாளும் வடிவேல் மன்னவன்
உளமகிழ் மகளாய் ஒருதனி வந்தவள்
முரசொலி முழங்கும் முத்துவள நாட்டின்
அரசிளங் குமரி யாமிவள்" என்றனள்;

**வரவுரை கூறினன்**

"கலைநலம் விழையும் கருத்துடன் வந்தீர்!
தலைதரும் வணக்கம் தந்தனென் நுமக்கே
வருக வருக! வடிவுடைச் சிலைநலம்
பருக வருக! பாவையீர்! வருக"என்
றக்குல மகளிரை அழைத்துடன் சென்று
தக்கநற் சிலையெலாம் தனித்தனி காட்டினன்;

**படிமம் வேண்டினள்**

சிலைத்திறம் காட்டும் சிற்பியின் வினைத்திறம்
கலைத்திறம் அனைத்தும் கண்டு வியந்து
பலபடப் புகழ்ந்து "பாரில் நிகருமக்(கு)
இலைஎன உணர்ந்தேன் எனைப்போல் ஒருசிலை
கைத்திறன் முழுதும் காட்டிச் சமைத்துத்
தைத்திரு நாளில் தருதல் ஒல்லுமோ?
விழைந்ததென் உள்ளம் வேண்டினென் நுமை"எனக்
குழைந்து கனிந்து கூறினள் அரசி;

### சிற்பியும் ஒப்பினான்

"எழில்விளை நிலமே! என்தொழில் அதுவாம்
முழுநலம் பெறுசிலை முடிப்பேன், இதுவரை
கற்பனைத் திறத்தால் கற்சிலை சமைத்தேன்
பொற்புடை நின்போல் பொற்சிலை சமைக்க
இன்றே தொடங்குவென் ஏழாம் நாளில்
நன்றே முடிப்பேன் நல்லாய்! என்முன்
அசைதல் இன்றி அவ்வயின் நில்"லென;
நகையுடன் நின்றனள் நங்கையும் அவன்முன்;

### உறுப்பெழில் நோக்கினான்

நின்ற நிலையை நிமிர்ந்தொரு முறைமனம்
ஒன்றும் படியாய் உற்று நோக்கினன்
பின்பவள் மலர்த்தாட் பெருவிரல் நோக்கி
இன்ப வல்லியின் இடையினை நோக்கி
இடையில் ஒன்றும் இடக்கை நோக்கி
வடிவொடு தொங்கும் வலக்கை நோக்கி
எடுத்த மார்பும் தொடுத்த தோளும்
கழுத்தின் வடிவும் கண்டபின் முகத்தின்
வட்டம் நோக்கி வாயிதழ் நோக்கி
ஒட்டும் புருவம் ஒண்குழைச் செவியை
எட்டும் விழியின் இணைஎழில் நோக்கிக்
கதுப்பும் நுதலும் கண்கவர் மூக்கும்
விதுப்புற நோக்கி வெய்துயிர்த் தனனே,

### சிற்றுளி வல்லதோ

அவ்வயின் நின்ற ஆருயிர்த் தோழி
"இவ்விதம் பெருமூச் செறிவதன் நோக்கம்
யாது" என வினவ ஆடவன் கூறுவான்

"மாதுடல் அமைப்பின் மாண்புகள் யாவும்
சிற்பச் செந்நூல் செப்பும் இலக்கணச்
சொற்படி கண்டேன் சொக்கினேன், இவளுரு
அற்புதப் படைப்பாய் அமையும் எனினும்
விழியில் வழியும் ஒளியும் அருளும்
பிழிதேன் பொழியும் மொழிபுகல் வாயின்
இதழில் தவழும் இனிய மூரலும்
புதுமைச் சிலையில் புகுத்திக் காட்ட
என்கைச் சிற்றுளி வல்லதோ எனநான்
உன்னிப் பார்த்தேன் உயிர்த்ததென் நெஞ்"சென;

### இருவர் நெஞ்சம்

சிலையாய் நின்றவள் சிரித்தனள்; வாயில்
நிலையாய் நிற்கும் நிரல்படு முத்தின்
ஒளிபட அவன்முகம் களியால் மலர்ந்த(து)
அளிநிறை நெஞ்சை அவன்பால் வைத்துத்
தளிரடி பெயர்த்துத் தையல் நடந்தனள்;
பேதையின் பின்செலும் பேதுறும் மனத்தைத்
நிதிலன் தடுத்துத் திருப்பினன் அவள்சிலை
படைத்திட வேண்டும் பணியுள ததனால்;
உடைத்தொரு கல்லில் உளியை நாட்டினன்
தளிரடிச் சிலம்பொலி உளியடிக் கெழுமொலி
குளிர்மலைச் சாரலில் குலவி எதிர்ந்தன
சிலம்பொலி தாழ்ந்தது சிற்றுளி ஒலித்த(து)

### முடிந்தது படிமம்

உண்ணான் உறங்கான் உடல்நலம் பேணான்
கண்வழி புகுந்து கருத்திற் கலந்தவள்
வண்ண உருவம் வடிப்பதே தொழிலாய்
ஒவ்வோ ருறுப்பும் உன்னி நோக்கிச்

செவ்வனே முடித்தனன் செப்பிய எழுநாள்
முடிந்தது சிலையும் முடிந்தது நெஞ்சிற்
படிந்த உருவின் படிமம் கண்டனன்;
காதல் மடவார் கடைக்கண் பணித்தால்
ஈதொரு பணியோ? ஏழ்சிலை முடிப்பர்!
காதல் வேகம் கடிதே கடிதே!

### சிலையா அவளா?

மன்னன் மகளாம் மயிலியும் வந்தனள்
நன்னர்ச் சமைத்த நயத்தகு படிமம்
கண்டனள் வியப்புக் கொண்டனள் மிகவே;
'ஒண்டொடி என்போல் உளதோ இவ்வுரு?
விண்டிடு மெய்'என வினவினள் தோழியை;
மயிலியைச் சிலையின் மருங்கினில் நிறுத்திப்
பயிலியற் சாயல் பார்த்தனள், விம்மி
'எது சிலை எது நீ எனக்காண் பரிது!
புருவச் சிலையில் பூத்துள வியர்வால்
உருவச் சிலைஎது உன்னுடல் எதுவென
உணர வல்லேன்; ஒப்பிலை இவற்கே!
இணர்மலர்க் கோதையின் இதழின் சிரிப்பும்
இன்னருள் விழியும் எப்படிப் படைத்தனை?
கற்பனை மிகுத்திடும் சிற்பக் கலைஞ!
நிற்புகழ்ந் தேத்த முற்படும் எனக்கு
நாவும் ஒன்றே நானென் செய்கேன்?'

### சிலையில் ஒருகுறை

'பலபடப் புகழும் பாவாய்! என்றன்
கலைமுறைத் திறனைக் காட்டிலேன்; நெஞ்சில்
வாழும் வடிவின் வார்ப்படம் இவ்வுரு
ஊழால் அமைத்திடும் உருவினில் ஒருகுறை

உளதிவள் நெஞ்சை உளியாற் படைத்த
சிலையிற் பொருந்தச் செய்திலேன்' என்றனன்;

**நெஞ்சம் கலந்தன**

'நெஞ்சை நும்பால் நிறுத்திச் சென்றேன்
வஞ்சம் செய்தீர்' என்றனள் வஞ்சி;
தொலைவில் இருக்கும் சிலையைக் காணத்
தோழி அகன்றனள், தூயநற் கலைஞன்
'வாழி நெஞ்சே வாழிய மயிலி
என்றன் நெஞ்சும் உன்றன் நெஞ்சும்
ஒன்றிய படியால் எடுத்ததைச் சிலையில்
வைத்திட மறந்தேன் மைத்தடங் கண்ணி!
தைத்திரு நாளில் தாம்கலந் தனவே
மன்னன் மகள்நீ மயலுறும் என்பால்
அன்புடன் கடைக்கண் அருளுதி யோ?' என,

**காதல் மன்னன்**

'மாண்புயர் கலையில் மணிமுடி யரசர்!
ஏனுமக் கையம்? என்மன வுலகில்நீர்
ஆளும் மன்னர்! அன்பரீர் நும்மை
நாளும் நினைந்தே நலிவுறு கின்றேன்'
என்றலும் தோழி இடையில் வந்து
நின்றனள் பின்னர் நீங்கினர் இருவரும்;
ஆடினன் பாடினன் அருவி நீரில்
ஆடினன் ஓடினன் ஆண்டுள மலர்களைச்
சாடினன் அச்சிலை சார்ந்துதன் மெய்யால்
மூடினன் காதலில் மூழ்கினன் சிற்பி;

**வேந்தனும் சிலையும்**

வேட்டம் போகிய வெள்வேல் வேந்தன்
கோட்டம் காணிய குறுகினன் ஆங்கண்

‘குறிஞ்சி நாட்டின் கோமகன் வந்தான்
அருந்திறல் அரசர்க் கரசன் வந்தான்’
என்றிரு காவலர் இசைத்திட, எழுந்து
சென்று வணங்கிச் சிற்பக் கலைஞன்
‘குறிஞ்சி நாட! நின் கொற்றம் வாழி!
செறிந்தநல் லறஞ்சேர் செங்கோல் வாழி!
தெரிந்த வகையால் செய்துளேன் சிற்பம்
அறிந்திட வந்துளீர் அடியனேன் வணக்கம்,
என்று கூறி இயற்றிய சிலையெலாம்
நன்று காட்டிட, நாடாள் வேந்தன்
அழகோ வியமாய் ஆண்டுள சிலையை
விழியால் பருகினன் வியந்தனன் அவன்திறம்
நின்றுள சிலையெலாம் நிரல்பட நோக்குவோன்
ஒன்றிய ஒருசிலை உற்று நோக்கினன்
மயிலியின் சிலையில் மயங்கி அதனை
விலையால் பெறுவான் விழைந்தனன்; சிற்பக்
கலைஞன் அதன்நிலை கழறினன் விரிவாய்;

### ஆசை அரும்பியது

வடிவேல் மன்னன் மகளெனக் கேட்டலும்
கொடியிடை யிவள்போல் குவலயம் யாங்கணும்
வடிவுடை யழகி வாழ்ந்திடல் காண்கிலேன்
என்னடி வணங்கித் திறைகொடுத் திருக்கும்
மன்னவன் இவற்கோர் மனங்கவர் மகளுளாள்
என்ப தறிந்திலேன் இன்றே தெரிந்துளேன்
பின்பவட் காண்பேன் பேதையை மணப்பேன்
என்று மனத்துள் எண்ணினன் சென்றான்.

### தூது தோற்றது

சென்ற குறிஞ்சியான் செய்தி எழுதி
வடிவேல் மன்னனின் மகட்கொடை வேண்டிக்

கடிதிற் செல்லும் காவலற் போக்கினன் ;
முடங்கல் கண்ட முழுமதி முகத்தாள்
தடங்கல் சொல்லித் தானொரு சிற்பிக்
குரியள் என்பதை உணர்த்துக என்றனள்;

### சீற்றம் எழுந்தது

சிறியவள் விடுத்த செய்தியைக் கேட்டுச்
சீறி எழுந்தனன், ‘சிற்றரசன் மகள்
மீறிய உரைசொல மேவிடும் செருக்கைக்
கூரிய மதிகொடு கொட்டம் அடக்குவேன்’
தீப்பொறி சிதறச் சினந்துரை கூறிக்
‘கூப்பிடு அந்தக் கொடுஞ்செயற் சிற்பியை’
என்றலும் ஏவலர் ஏகினர் கொணர்ந்தார்;

### சூழ்ச்சி சுழன்றது

நின்றிடும் சிற்பியை நெருங்கினன் குறுகிக்
‘கலைவலோய்! நின்றன் காதற் குறிப்பின்
நிலையெலாம் அறிகுவன் நீயொரு குடிமகன்
அரசியை மணத்தல் அடுக்குமோ? அதனால்
கருமலைக் குறிச்சிக் காவலன் ஆக்கிடக்
கருதி உனையிவண் கடிதின் அழைத்தேன்
என்மொழி கேட்க இசைகுவை யாயின்
மன்மகள் நினக்கு மனைமகள் ஆவள்
உன்கலைத் திறனை உலகமும் ஏத்தும்’
என்றனன் வேந்தன்; இசைந்தனன் சிற்பி;
‘குன்றடர் மலையைக் குடைந்தொரு கால்வாய்
சென்றிடப் படைத்துச் சிற்பத் திறமெலாம்
காட்டி அதனிரு கரையிலும் அமைத்திடல்
வேட்டனன் யானே விரைவினில் முடிப்பின்
வேட்டவள் தன்னை வியன்மணம் கொள்வாய்

காட்டுக நின்திறம் கலைஞ!என் ஆணை
வினைகள் முடியுமுன் விழைவோட் காண
முனைவதும் குற்றம்இம் மொழியுமென் ஆணை'
எனமொழிந் திருந்தனன் இறையவன் அரியணை;

**சுழல்மனம் துணிந்தது**

மனம்நிறை துயரினன் மயங்கினன் செய்வகை
யாதென அறிகிலன் 'யானென் செய்குவென்
தீதுறு மோ?'எனச் சிந்தனை செய்தனன்;
மயிலியின் திருவுரு மனக்கண் தோன்றலும்
வெயிலவன் போல வெண்முகம் சிவந்தது;
'குறிஞ்சி நாட!நீ கொடுத்தஇவ் வாணையை
விரைந்து முடித்துநான் வெற்றியுங் கொள்வேன்'
எனுமொழி கூறி ஏகினன் சிற்பி;

**வினைத்திறன் வெற்றி**

காதல் உணர்வு கருத்தினில் உந்தி
மோதி எழுதர முனைந்தனன்; உழைப்பால்
மலையைக் குடைந்தனன் மாபெருங் கால்வாய்
அலையொடு பாய்ந்த(து) அதனிரு கரையில்
உலகம் உவப்ப உயர்பெருஞ் சிலையெலாம்
படைத்தனன்; ஆண்டுகள் பலப்பல கடந்தன
உடலந் தளர்ந்தனன் உள்ளந் தளர்ந்திலன்
தடந்தோள் வீரன் தலைநிமிர்ந்திருந்து
வெற்றிச் செருக்கொடு விழித்து நோக்கினன்
பெற்ற களிப்பால் பெருமூச் செறிந்தனன்
சிற்றுளி கைவிரல் பற்றி யிருந்தது;
காதற் கனவு பலித்திடக் கண்டேன்
ஏதுக் கினித்துயர்? இவ்வுல காள்வேன்
நானும் அவளும் வானம் பாடி

போலப் பறந்து வானில் திரிவோம்
எனப்பல கற்பனை எண்ணி நின்றனன்;

### சூழ்ச்சி வென்றது

சினப்படு வேந்தன் செய்ததோர் சூழ்ச்சியால்
ஆங்கோர் கிழவி அழுது வந்தனள்
‘தீங்குனக் கென்ன? செப்’பெனச் செப்பினள்
‘வடிவேல் மன்னன் மகளென வந்த
கொடியிடை மயிலி மடிந்தனள்’ என்றாள்;
அலறினன் கதறினன் ‘ஐயகோ’ என்றனன்
‘பலபகல் இரவுகள் பாடுபட் டுழைத்ததால்
உறுபயன் இதுவோ! உலகம் முடிந்ததோ!
இருளெனைச் சூழ்ந்ததோ! இனிஉயிர் விழைவதோ!’
கலைஞன் புலம்பல் காடெலாம் பரவி
மலையகம் மோதி எதிரொலித் தெழுந்தது
மாதின் சிலைபால் ஓடினன் மயங்கி
மோதினன் முட்டினன் ‘மோனத் திருக்கும்
காதற் சிலையே! கண்ணீர்த் துளியால்
குளித்திடு! என்னுயிர் குடித்திடு விரைவாய்!
யாண்டுச் சென்றனை? யாதுநீ எண்ணினை?
ஆண்டு வருவேன் ஆருயிர்க் காதலி!’
என்றவன் புலம்பிக் குன்றினில் ஏறி
நின்றனன் வானை நிமிர்ந்து நோக்கினன்

### காற்றில் கலந்தான்

விரலுறு சிற்றுளி வீசி எறிந்தனன்
‘மயிலி மயிலி மனங்கவர் மயிலி
மயிலி நானும் வருவேன்’ என்று
பலகால் அலறிப் பாய்ந்தனன் கீழே
சிலையாய் நிற்பவள் சீறடி வீழ்ந்தனன்

கதறலும் உயிரும் காற்றுடன் கலந்தன
சிதறிய குருதி சிலையெலாம் நனைத்தது
கவலைகள் தீர்ந்தான் காதலும் தீர்ந்தான்;
திவலைகள் அலறின சிலைகளும் அலறின
குன்றுகள் அலறின குகைகளும் அலறின
பறவைகள் அலறின பாரெலாம் அலறின ;

### அவலப் பாடல்

மாய்ந்தனன் சிற்பி என்றொரு மாற்றம்
தோய்ந்தது செவியில் துடித்தனள் மயிலி
'ஐயகோ ஐயகோ ஆர்செய் சூழ்ச்சி ?
வையகம் பொறுக்குமோ! வானகம் இருக்குமோ!
உண்மைக் காதலை உலகம் வெறுத்ததோ ?
பெண்மைக் கிங்கே பெருந்துயர் தானோ!'
என்றனள் ஏங்கி ஏகினள் குறிச்சிக்
குன்றினில் ஏறிக் குதித்தனள் கீழே
சிலையின் அருகே அவளும் சேர்ந்தனள்
கலையும் உயிருடன் காதலும் தீர்ந்தனள்
மலையும் மரமும் மலைத்து நின்றன ;
அழும்ஒலி போல அவலம் பாடி
இழுமெனும் ஒலியால் இயங்கிய(து) ஆறே.

# சுதமதி

நிலைமண்டில ஆசிரியப்பா

## பூவும் பூவையும்

பல்வகை மலர்தொறும் பாடிப் பாடிப்
புல்லிதழ் அகமெலாம் ஞெகிழப் புக்குத்
தேறல் மாந்திச் சுரும்பினம் திரிதரும்
ஆரல் பார்த்து நாரை தவஞ்செயும்
பொய்கை சூழும் பொதும்பர் அதனுள்
பெய்வளை ஒருத்தி பேணினள் செலீஇ
நறுமலர்ச் செடிதொறும் நாண்மலர் கொய்தனள்
திருமணம் பெறூஉச் சேயிழை ; அவள்இடை
நிகர்த்தோம் நாமென நினைத்தலர் பூங்கொடி
முகிழ்த்தநல் லரும்பால் நகைத்துச் செருக்கத்
தருக்கினை நோக்கிய தையல் முறுவலால்
தருக்கினை அடக்கித் தலைகொய் தனளே ;
தாமரைப் பொய்கையுள் தளையவிழ் மலர்க்குக்
காமரு பொலிமுகங் காட்டினள்; அவ்வுழைப்
புரியவிழ் மாமுகைப் போதுகள் நோக்கலும்
கருவிளை விழியாள் கவிழ்த்தனள் தலையை
இச்சிறு முகைக்கொரு ஒப்பிலை என்பால்

என வாங்கு,
வெய்துயிர்ப் புறுங்கால் விம்மிய மார்பகம்
கண்டனள் களித்தனள் தண்டொடுந் திருகிக்
கொண்டனள் அம்முகை; கொவ்வைக் கனியைச்
சுவைத்தனள் அதுதான் துணையிதழ்க் கொவ்வாத்
தகைத்தென உமிழ்ந்தனள்; சாயல் நடைஎழில்
காணலும் மயிலொடு அன்னங் கலங்கின
பாணொலி கேட்டுப் பைங்கிளி குயிலொடு
நாணின; இவ்வணம் நங்கை நின்றுழி,

## அவனும் அவளும்

தொடுக்குந் தெரியல் தோளினன் சுடரொளி
விடுக்கும் பொற்பூண் விடலை பலர்தொழும்
கடவுட் கோலக் காளை ஒருவன்
தடமலர்ச் சோலையுள் தையலைக் கண்டனன்
கண்டார்ப் பிணிக்கும் காரிகை எழில்நலம்
உண்டான் விழியால், உலகின் அழகெலாம்
ஓருருக் கொண்டிங் குற்ற தோவெனத்
திகைத்து நின்றனன், நிலத்தை நோக்கினள்,
பதைத்தனள் நிமிர்ந்தாள், பார்வையைத் திருப்பினன்,
ஈரிரு விழிகளும் மாறி மாறி
ஓரிரு முறையால் ஒன்றிக் கவ்வின;
"நன்னுதல்! யார்நீ?" என்னலும் நாணினள்
பின்புறம் தொங்கும் பின்னல் கண்டவன்.
"என்னுயிர் பின்னினை எழில்முகங் காட்டி
நின்வர லாறுரை நேரிழாய்!" என்னலும்
"சண்பை நகரெனச் சாற்றும் இவ்வூர்ப்
பண்பினன் வேதப் பார்ப்பன முதுமகன்
அழலோம் பாளன் அன்பினன் கோசிகன்

என்போன் மகள்யான் என்பெயர் சுதமதி"
இம்மொழி செப்புமுன் இளையன் உணர்வால்
கைம்மலர் பற்றிக் கனியிதழ் கொய்தான்
செய்வகை யற்றுச் சேயிழை நின்றனள்;
"வயங்கிழை மாதே! வடபுலத் துறைவேன்
பயங்கெழு பூம்புகார்ப் பதியில் நிகழ்வுறூஉம்
இந்திர விழாவுக் கேகினன் வழியிடை
முந்திய தவத்தால் முன்வந் துற்றனை!
என்பெயர் மாருத வேகன் என்பர்
அன்பின் கிழத்தி ஆகுதி!" என்று
வன்பாய் அவள்கைம் மலரிணைப் பற்றினன்;
"இணர்மண மாலை ஏற்று மகிழும்
மணம்பெறு முன்னர் மலருடல் தீண்டுதல்
குணமிகு செயலெனக் கூறுர்" என்றனள்;
"யாழோர் மணத்தால் யானுனைக் கூடுவேன்
தோழீஇ!" எனஅவள் தோள்தழீஇச் சென்று
பூம்புகார்த் தங்கிப் போகம் சுவைத்தனன்.

**யாழும் வாழ்வும்**

பெருமுழ வெங்கணும் திருவிழா அறைந்தன
தெருவெலாந் தோரணம் வாரணந் திகழ்ந்தன
மகார்முதல் யாவரும் மனங்களி கூர்ந்தனர்
புகார்நகர் விழாவிற் பொலிந்தது யாண்டும்
அலைமணற் கரையெலாம் நிலவினர் மக்கள்
இளைஞர் துணையொடும் இன்னிசை பாடினர்
குழலும் யாழும் கூடி இசைத்தன
மழலைச் சிறுமகார் மணலில் ஆடினர்
மாந்தர் ஒலியொடு மற்றிசை ஒலியும்
சேர்ந்து கடலொலி சிறிதெனச் செய்தது;
மாருத வேகன் மனத்தினில் மகிழ்ச்சி

சாருத லின்றித் தனிமையை நாடிச்
சிந்தனை முகத்தில் தேக்கின னாகி
நந்தின் சினைகள் சிந்திய ஒருபால்
புந்தியில் அலைகள் புரள இருந்தனன்;
"என்மனங் கவர்ந்தோய்! யாதுற் றனைகொல்?
நின்முகஞ் சோர்வுறின் என்னுளஞ் சோர்வுறும்
இந்திர விழாவில் வந்தோர் யாரும்
நொந்திலர் மகிழ்வைச் சிந்தையில் தேக்கினர்
நாமுங் களிப்போம் வா"வென நீவிச்
சுதமதி யாழினைச் சுருதி கூட்டினள்,
புதுவகைச் சுவையெலாம் பொருந்தப் பாடிக்
காணா இன்பக் காதல் ஊட்டினள்;
ஆணோ யாழில் அவலம் மீட்டினன்,
மாருத வேகன் மாறின னாகக்
காரிகை கலங்கினள்; "காதலி! இசையில்
அவலம் காதல் அனைத்தும் சுவையே
கவலை நினக்கேன்? கைவிரல் ஓட்டி
மீண்டும் யாழினை மீட்டுதி கண்ணே!
காண்டும் இன்பங் களிஉல கதனில்"
என்றனன்; தோகை எடுத்தனள் யாழை
ஒன்றிய குரலால் உள்ளம் உருக
அவலச் சுவையே அவளும் பாடினள்;
திவவுக் கோல்யாழ் தெரிநரம் பிடையே
சுவைசெய் சிறுவிரல் துடிப்புடன் தடவி
முடிநிலை யுறுங்கால் முறிந்ததோர் நரம்பே
இடியொலி கேட்டெனத் துடியிடை நடுங்கி
இதய நரம்புதான் இற்ற தோவெனப்
பதறினள்; "அஞ்சேல் பாவாய்" என்றனன்
இருப்பினும் அவள்மனம் ஒருப்பட வில்லை;

சிரிப்பினை யிழந்தனள் சிந்தையிற் கலக்கம்
நிறைத்தனள் அவளுறு துயரம் நீக்குவான்
“அலையெழு புனலிடை மலைநிகர் மரக்கலம்
பலவரூஉம் அழகினைப் பார்”எனப் பகர்ந்தனன்;
“அலமரும் மரக்கலம் ஆகினேன் யான்”எனச்
சிலைநிகர் அம்மகள் செப்பின ளாகப்
“பலவகைச் செடிதொறும் பறந்து படிந்து
மலரிடைத் தேன்நுகர் வண்டுகள் காண்”என,
“அலர்தரு நறவம் அருந்திப் பிறிதொரு
மலர்முகம் நோக்கும் வண்டினம் புரிசெயல்
நின்னிற் றோன்றா தொழிகதில் அம்ம!”
என்னலும், இளையன் “ஏனுனக் கையம்?
உலையில் காய்ச்சி உருக்கிய பொன்னால்
மேற்றிசை வானை மெருகிடல் போல்நிறம்
தீற்றிய கதிரோன் மறையும் செக்கர்
வானெழில் காணுதி! வாட்டந் தவிர்தி!
வீணில் ஐயுறின் விளைவன தீயவே”
இங்ஙனம் ஆற்றியும் இளையோள் தெளிந்திலள்;
“வானை மினுக்கி மறைவுறுங் கதிரென
என்னை மயக்கி என்னலம் நுகர்ந்து
மின்போல் மறைதல் நின்பால் நிகழுமோ
என்னும் ஐயம் எழுந்ததென் உளத்தே
யாழோர் கூட்டமென் றென்னலம் உண்டனை
கீழோர் நாட்டம் எனநிலங் கிளக்கவும்,
நம்பிய நானிவண் நரம்பறும் யாழென
வெம்பவும், கைவிடல் கனவிலும் விழையேல்”
இருவிழி கலங்க இயம்பினள் இங்ஙனம்;

"சிறுமதி யுடையாய்! செய்கையில் பொய்க்கும்
குறுமனம் இல்லேன், கொண்டவள் தவிக்கக்
காதல் பொய்க்கும் கயவனும் அல்லேன்
காதல் இன்றேல் சாதல் இதுமெய்!
தெய்வம் உண்டெனத் தெளிகுவை யாயின்
செய்நம் காதல் மெய்யெனத் தெளிகுவை
பெண்மதி பின்மதி! ஆம்இஃ துண்மை!
கண்ணிழி நீர்துடை! கலங்குதல் ஒழி" என்
றுள்ளம் மாற்றி ஊக்கினன் சென்றான்;
பள்ளியில் மெல்லிய பஞ்சணை துயிலும்
கள்ளவிழ் கோதை கனவுகண் டஞ்சி
நள்ளிர வதனில் நடுங்கிப் பிதற்றினள்;
தேற்றினன் தெளிந்தாள், துயிற்றினன் துயின்றாள்;

**பூவையும் புலம்பலும்**

காற்றுடல் வருடக் கண்மலர் அவிழ்ந்தாள்
கதிரவற் கண்டாள் காதலற் காணாள்
அதிர்ந்தனள் உள்ளம் அந்தோ பேதை!
ஓடினள் தேடினள் ஊரெலாந் தேடினள்
வாடினள்; இரவொடு மாருத வேகன்
ஓடினன் என்பதை உணர்ந்தனள் தளர்ந்தனள்
"கடவுளைக் காட்டிக் கழறினன் நம்பினேன்
கடவுள் போலவன் கட்படாஅ தொழிந்தனன்
வடவன் கூற்றை வாய்மையென் றெண்ணி
இடங்கொடுத் ததனால் இந்நிலை உற்றேன்
மடவன் இவ்வணம் மாறினன் காதல்
நமலறி யாமகன் நயவஞ் சகனிவன்
குலமகன் அல்லன் கொடியன்! எங்கே
ஏகுவென் யானினி எங்ஙனம் வாழ்கேன்?
பெண்மதி பின்மதி என்று பேசினன்

உண்மை உண்மை உணரா தொழிந்தேன்
வேக மாருதம் என்ன விரைந்தனன்
போகிய மாருத வேகனுக் கப்பெயர்
ஒன்றும் பரிசென இன்றிங் குணர்ந்தேன்"
என்றெலாம் அரற்றி இருந்தனள் சுதமதி;

### தந்தையும் மகளும்

சண்பை நகரோன் சதுர்மறை யாளன்
நன்மனை யிழந்த நரைமுதிர் கோசிகன்
தன்மகட் காணான் தனித்துய ரெய்தித்
தென்னங் குமரி நன்னீர் ஆட
நண்ணும் மாக்களோடு நாடினன் பெயர்வோன்
கடலொடு கலக்கும் காவிரி மூழ்கிய
வடமொழி யாளரொடு வருவோன் புகாரில்
பிழைமணப் பட்டஅப் பேதையைக் கண்டனன்;
மழையெனக் கண்ணீர் வடித்துத் தன்மகள்
உற்ற இடும்பை முற்ற உணர்ந்து
பெற்றவள் நிலைக்குப் பெரிதும் வருந்தித்
தன்பதி செல்லின் வன்பழி நேரும்
என்பதால் ஆங்கண் இருந்தனன்; அவளைப்
பிரியா னாகிப் பிச்சையாற் புரந்து
திரிவோன் ஒருநாள் தெருவரு புனிற்றுப்
பாய்ந்திட ஆங்கே சாய்ந்தனன்; மகளொடும்
மறைநூல் மாந்தர் வாழிடன் குறுகி
உறைவிடம் வேண்டினன்; ஓதிய அந்தணர்
'பிழைநடை யுடைய பேதை நின்மகள்
உழைய ளாகலின் ஒதுங்கிடம் இலை, இது
வேதம் பயிலிடம் விரைந்தே அகலுதி'
என்றனர் வேதியர்; இருவரும் பின்னர்ச்
சமணப் பள்ளியைச் சார்ந்து 'நும்சரண்

இவண்எமக் கொருதுணை யில்லேம்' என்றனர்;
'புரிநூன் மார்பிற் பொலிவீர்! நீவிர்
வேள்வி யியற்றி வேத நெறிப்படூஉம்
ஆள்வினை உடையீர் ஆதலின் ஈண்டுப்
புகுந்தக வில்லீர் முரணிய புன்மைகள்
நுழைந்திடின் எம்நெறி பிழையுறும்' என்று
கையுதிர்த் தொதுக்கினர்; கலங்கிய முதுமகன்
வெய்துயிர்த் தாங்கோர் வேற்றிடன் குறுகினன்
பாங்குறும் புத்தப் பள்ளியைக் காணலும்
ஈங்குறல் சாலவும் ஏற்புடைத் தாகும்
என்றுளங் கொண்டோன் மகளொடும் புக்குப்
'பெரியீர் நும்சரண் பேதுற வுற்றேம்
அருளீர் அருளீர் ஐயகோ அருளீர்'
என்றரற் றுரைக்க இரங்கிய சாரணர்
'நின்துயர் துடைத்தோம் நீள்துய ருற்று
நின்ற மகளொடும் வைகுதி என்றனர்;
தப்பிய தன்மகள் சுதமதி தன்னொடும்
புத்தப் பள்ளியில் புகலிடம் பெற்றனன்.
புகுந்த மறைநூல் புகல்நெறி யாளர்க்கு
நெகிழ்ந்திடங் கொடாஅ நிலையின தாதலின்
சமணக் கொள்கை தகவிழந் தழியப்
பகையாய் மாறிப் பழிவாங் கினரே
புத்தமோ அவர்க்குச் சித்தம் நெகிழ்ந்தது
கருணை ஒன்றே கருப்பொரு ளாதலின்
முரணிய கொள்கை நெறியினர் தமக்கும்
புகலிடம் தந்தது; புக்கவர் நண்பாய்
நகுமுக முடையராய் நன்கனம் பழகினர்
காய்ச்சிய பாலிற் கலந்தது பிரையே
புத்தமுந் திரிந்தது பூத்தநன் னிலத்தே!

# இயற்கை உலகம்

# அழகின் சிரிப்பு

எண்சீர்விருத்தம்

1

அலைகடலின் அப்புறத்தே ஓரக் கோட்டில்
அடரிருளை அகற்றியபின் கிழக்கு வானில்
கலையாத செந்நிறத்தைப் பூசி விட்டுக்
காதலியைக் காணவரும் காத லன்போல்
தலைகாட்டிக் கதிரவன்தான் சிரித்துக் காட்டும்
தன்மையினில், மகிழ்வூட்டும் அழகு தன்னில்,
கலையழகு சிரித்துவிளை யாடக் கண்டு
கழனிகளின் வரப்போரம் நடந்து சென்றேன்

2

முழந்தாளிற் கையூன்றிக் குனிந்து நின்று
முன்தானை எடுத்திடையில் இறுகக் கட்டிச்
சுழன்றாடும் குழல்மாதர் கால்வ யிற்றுச்
சோற்றுக்கு நாற்றுநடும் போது தன்னால்
எழுந்தாடும் கையசைவில், வீட்டுக் காரன்
ஏர்பிடித்துக் களைத்திருப்பான் என்று சொல்லி
விழுந்தோடி உணவுகொண்டு வந்த பாவை
விளையாடி உணவூட்டும் காட்சி தன்னில்

*

3

நீர்சேந்தி நிறைத்தகுடம் இடுப்பில் வைத்து
நெளியஒரு கைவீசிச் செல்லும் சிற்றூர்
சேர்மாதர் மென்னடையில், குருவி காக்கை
செழுங்கதிரைத் தின்னாமல் காப்ப தற்கு
வார்தொடுத்த கவண்வீசிக் கூவுங் காலை
வாயெழுப்பும் இசைக்குரலில், மண்ணை வெட்டி
நீர்கட்டும் தொழிலாளி நீள்பு யத்தில்
நின்றுநடம் செய்கின்ற அழகைக் கண்டேன்

4

கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்
காட்சிதரும் குஞ்சுகள்தம் வாயில் கோழி
வேல்மூக்கால் அன்புகலந் திரையை யூட்டும்
வேளையிலும், வானத்து வீதி செல்லும்
பால்நிலவுப் பெண்தனது விண்மீன் என்னும்
பல்விரித்துச் சிரிக்கின்ற போதும், மண்மேல்
கால்இழுத்துத் தவழ்கின்ற குழந்தை பேசும்
காலத்தும் நல்லழகின் சிரிப்பைக் கண்டேன்

5

வெம்புலியின் பாய்ச்சல்தனில், வீரன் ஏந்தும்
வேல்நுனியில், தோள்வலியில், படம்வி ரித்து
வெம்பிஎழும் நாகத்தின் ஆட்டந் தன்னில்,
விரிகொம்பு மான்விழியில், தேனை உண்ணத்
தும்பிஎழுந் தார்க்கின்ற முல்லைக் காட்டில்;
தோகைவிரித் தாடுகின்ற மயிலி டத்தில்,
செம்பவழக் கொடிக்கடலின் அலைக்கூட் டத்தில்
சேர்ந்திருக்கும் அழகெல்லாம் சிரிக்கக்கண்டேன்

6

இங்கெல்லாம் சிரிக்கின்ற அழகு கண்டேன்
இனியதமிழ் பேசுகின்ற மனிதன் வாழ்வில்
பொங்கிவரும் அழகில்லை! உழைத்துண் டாக்கும்
பொருளெல்லாம் பிறர்நுகரப் பெற்ற தாலோ
தங்கள்குலம் வாழாமல் சுரண்டு வோரைத்
தரைமட்டம் ஆக்கஎழும் எண்ணத் தாலோ
மங்குமவன் முகத்தினிலே சிரிப்பும் இல்லை!
மனிதரினம் விலங்கினமாய் வாழல் நன்றோ?

7

மக்கள்நலம் பேணுகின்றோம் என்று சொல்லி
மணிப்பீடம் ஏறிவிட்டோர் மதத்தின் பீடம்
தக்கதுணை என்றெண்ணி அயர்ந்து விட்டார்;
தறிகெட்டுத் திரிகின்றார், மேடை ஏறிக்
கொக்கரித்தல் ஓயவில்லை; சட்டத் தாலும்
கொடுமைகளும் மாயவில்லை; அறிவு மாய்க்கும்
அக்குணத்தார் ஆட்சியிலே அழகும் இல்லை
ஆதலினால் வாழ்க்கையிலே சிரிப்பும் இல்லை!

8

ஆற்றாலும் மலையாலும் சோலை யாலும்
அழகுசிரித் தாடுகின்ற நாட்டில் வாழ்வீர்!
சோற்றாலே துயருறுவோர் தமிழர் என்னும்
சொற்கேட்டுத் துடித்திலதோ உங்கள் உள்ளம்?
மாற்றாரின் காலடியில் நாட்டை விட்டீர்!
மடிகின்றீர்! இக்கேட்டை அழிக்கும் எண்ணம்
தோற்றாதோ உங்களிடம்? அடிமை வாழ்வு
தொலையாதோ? அழகிங்கே சிரிப்ப தென்றோ?

# இயற்கைத் தாய்

அறுசீர்விருத்தம்

1

புனல்நிறைந்த தடமலர்கள், படர்கொடியிற்
பூத்தமலர், கோட்டுப் பூக்கள்
இனையபல மலர்நாறும் மணமானள்;
இருநிலத்துப் பொருள்கள் தோறும்
மனங்கவர்ந்து நிறைந்திருக்கும் எழிலுருவம்
அவளுருவாம், மலையில் வாழ்வாள்;
எனைமகனைப் பெற்றெடுத்தாள் முருகென்னும்
எழிற்பேரும் உடையாள் வாழ்க!

2

அழுக்காறும் எறும்பூரும் பொய்மைஎனும்
அறுகால்சேர் ஈக்கள் மொய்க்கும்,
இழுக்கேரு நல்லறிவுப் பசிதோன்றும்
இத்தனையும் தாங்க ஏலா
தழுதிடுவேன்; விரைந்தோடி என்பால்வந்
தன்பென்னும் முலைசு ரந்த
பழுதில்லா முப்பாலை ஊட்டிடுவாள்;
பார்புரக்கும் தாய்மை வாழ்க!

3

தென்றலெனும் தொட்டிலிலே எனைக்கிடத்தித்
தேன்நுகர மலர்கள் தோறும்
சென்றிருந்து தமிழ்பாடும் வண்டொலியால்
செவிகுளிரத் தாலே தாலோ
என்றினிய தாலாட்டித் துயிற்றிடுவாள்;
எழுந்தழுதால் ஆறு காட்டிக்
குன்றிருந்து வீழருவி கடல்காட்டிக்
கொஞ்சிடுவாள் மலர்கள் காட்டி

4

இளங்காலை இருட்கதவம் திறந்துநோக்கி
இன்னுமெழ வில்லை யோஎன்
றுளஞ்சினந்து முகஞ்சிவந்து கதிர்க்கரத்தால்
உறக்கத்தில் எழுப்பு வாள்தாய்,
குளறிஎழுந் தன்னவளை வைதிடுவேன்,
கோணாமல் அன்பு கூர்ந்து
முளரிமுகங் காட்டிடுவாள் முத்தமிழால்
வைதோர்க்கும் வாழ்வே தந்தாள்;

5

விடிபொழுதில் ஆறென்னும் கைநீட்டி
விளையாடிக் குளிக்க வா! வா!!
பிடிவாதம் செய்யாதே என்றழைப்பாள்,
பேசாமல் நானி ருந்தால்
இடியொலியால் உறுத்ததட்டி மழைத்துளியால்
எனைநனைத்து நீரும் ஆட்டிக்
கொடிநிகர்த்த மின்னொளியால் நகைத்திடுவாள்,
கூத்தாடி நான்கு ளிப்பேன்

6

குளிர்மிகுந்து நடுக்கமுறின் மனந்தளர்வாள்
கொணர்ந்திடுவாள் ஞாயி றென்னும்
ஒளிநெருப்பை ! குளிர்காய்வேன், அதன்பின்னர்
மலர்க்காட்டுள் ஓடி ஓடி
நளிமலருள் நிறைமணத்தை வாரிவந்து
நான்மகிழ உடலிற் பூச
அளிதென்றல் உருவோடு வருவாள்தன்
அன்பினைத்தான் உரைத்தல் ஆமோ ?

7

படித்திடுக எனச்சொல்லிக் குயிலினங்கள்
பசுங்கிளிகள் இவற்றைத் தந்தாள் ;
பிடித்தவற்றைப் பார்க்கையிலோர் அறங்கண்டேன்;
'பேசுமொழி சொந்த மேயாம்
அடுத்தவற்றின் குரலல்ல நீயுமுன்றன்
அன்னைமொழியால் பேசு ! பாடு !!
தடுப்பவர்யார் ?' என்றனஅவ் வேடுகள்தாம்
தாயேதாய் மொழியே வாழ்க !

8

விண்ணரங்கிற் கருமுகிலாம் திரைநீக்கி,
விதவிதமாய் வானம் பாடி
பண்ணிசைக்க, ஒளிவீசிப் புடைசூழும்
பல்வகையாம் மீனப் பெண்கள்
கண்சிமிட்டி உடனுடை, முழுநிலவுக்
காரிகையும் நடனம் ஆட
மண்ணகத்து மகவெல்லாம் களிகொள்ள
மனம்வைத்தாள் என்றன் அன்னை

## 9

வளைந்துள்ள வெண்ணிறத்துப் பிறைநிலவை
வானத்தில் கப்பல் என்று
தளைந்துள்ள முகிலலையின் நடுவிடத்தே
தவழ்ந்தோடச் செய்தாள் ; இன்பம்
விளைந்துள்ளம் களிகூரப் பகலெல்லாம்
விளையாட இருட்புலத்தைப்
பிளந்தெழும்பும் கதிரவனைப் பந்தெனவே
பிள்ளைஎனக் களித்தாள் அன்னை

## 10

கடற்கரையில் விளையாட இடந்தந்தாள்
கலகலத்த இரைச்சலோடு
படர்ந்தலைகள் கரைநோக்கி விளையாடப்
பாய்ந்துவரும், நானும் செல்வேன்,
மடங்கியொடுங் கிக்கடலுள் எமைக்கண்டு
பிடியென்று மறைந்து போகும்
அடங்கிடுவேன் ; உடன்சிரித்து மற்றோர்பால்
அலையெழும்பும், அயர்ந்து போவேன்

## 11

மலையுறைவாள், அகங்கசிந்து நிலவுலகில்
மக்கள்பசித் திருப்பரென்று
நிலைகலங்கிக் கீழிறங்கி ஆறென்று
நெடுகநடந் தெவ்விடத்தும்
கலைகுலுங்கக் கால்களினால் ஓடிமலர்க்
கண்மலர வயலிற் பாய்ந்து,
குலைகுலுங்கும் கதிர்க்கையால் உணவூட்டிக்
குறைநீக்கி மகிழ்வாள் அன்னை.

# எழில்

எண்சீர் விருத்தம்

1

வளம்நிறைந்த தமிழ்மொழிக்கு விரும்பிச் சாத்தன்
வழங்குமணி மேகலையில், அவளுக் கென்றே
உளம்நிறைந்து முப்பொருளால் இளங்கோச் சேரன்
உருவாக்கித் தந்துமகிழ் சிலம்பில், கம்பன்
பழங்கதையை மெருகேற்றிப் பாரோர் போற்றப்
பாவையவள் மகிழவென்று தந்த நூலில்,
களங்கமின்றிக் கோவைசெய்து தேவன் தந்த
கலைசிந்தா மணியிலும்நான் எழிலைக் கண்டேன்

2

விண்முட்டும் கோபுரத்தில், அங்குச் சாந்து
வினைவல்லான் அமைத்தசுதைப் பாவை தன்னில்,
கண்வெட்டும் போதாதோ எனுமா றுங்குக்
கற்றச்சன் வடித்தகருங் கல்லின் சிற்பம்,
பண்ணெட்டும் யாழேந்தும் கல்விப் பாவை
பரிந்துநடம் புரிந்தருளும் தோற்றந் தன்னை
எண்ணட்டும் இங்கிருந்தே என்ற நோக்கில்
எழுப்புகலைக் கூடத்தில் எழிலைக் கண்டேன்.

3

கண்ணென்றால் காவியத்தை ஆக்கிக் காட்டும்
காரிகையார் நடையுடையில் எழிலின் தேக்கம்,
மண்திண்றால் தீமையென அறியாப் பிள்ளை
மழலைமொழிப் பார்வைகளில் எழிலின் ஓட்டம்,
விண்சென்று மீளுகின்ற பட்டம் விட்டு
விளையாடும் சிறுசெருவில் எழிலின் பாய்ச்சல்,
தண்ணென்ற புனலோடைச் சலச லப்பில்
தருமெழிலின் பளபளப்பு விளங்கக் கண்டேன்

4

சுடர்விட்டுக் காட்டுகின்ற கதிரோன் தோன்றச்
சுருக்கவிழ்ந்து சிரிக்குமுகத் தாம ரைக்குள்
கடன்பட்ட மாந்தரிடம் வட்டி கேட்கக்
கடைதோறும் புகுந்துவரும் கணக்க னைப்போல்
இடம்விட்ட மலர்தோறும் சென்று தேனை
இனிதுறிஞ்சி இசைபாடிச் செல்லும் தும்பி
அடைபட்டுக் கிடக்கவெனக் குவிந்து கொண்ட
அல்லிமலர்க் கூட்டத்துள் அழகு கண்டேன்

5

விண்பரப்பில் மீன்நடுவே ஒளியைக் கான்று
மென்னடையில் நிலவுப்பெண் ஊர்ந்து செல்ல,
மண்புரக்கும் வேலியென அமைந்த வேலை
மடிந்துமடிந் தலைஎழுப்பிக் கரையில் மோத,
மண்பரப்பில் எழுப்பியுள வலைஞர் சிற்றில்
மனைவியின்பால் விடைபெற்றுத் தோணி ஏறிக்
கண்மறைக்கும் நெடுந்தொலைவு கடலுள் ஏகிக்
கடும்புயலும் சுறவினத்தின் வாயும் தப்பி,

## 6

மீன்பிடித்துக் காதலன்தான் மீள்தல் கண்டு
மீள்வாரோ? மீளாரோ? எனத்த ளர்ந்த
மான்படித்த பார்வையினுள் அகத்துள் பொங்கும்
மகிழ்ச்சிஎலாம் வெளிக்காட்டும் முகத்தி டத்தே
தான்நடித்தாள் எழிலணங்கு; தந்தை முன்னர்த்
தள்ளாடி நடந்தோடி அப்பா! என்று
தேன்வடித்த சொல்லாலே குழந்தை கூவத்
திரும்பினவன் முகத்தகத்தும் எழிலைக்கண்டேன்

## 7

கொடிதாங்கி உரிமைப்போர்க் களத்துச் சென்ற
குமரனவன் உயிர்நீங்க ஆள்வோர் தந்த
அடிதாங்கித் தலையிழந்து கொட்டும் செந்நீர்,
அடிமைஎனும் சிறுமையினை அழிப்பான் வேண்ட
நெடிதோங்கும் பிறனாட்சி தொலைக்கும் போரில்
நின்றிருந்த பெரியோன்தன் அகன்ற மார்பு
வெடிதாங்கிச் சிந்துகின்ற குருதி, யார்க்கும்
விளங்காத எழில்காட்டக் கண்டேன் கண்டேன்

## 8

"மனவிருளை அகற்றிடுக சிந்தித் தாய்க!
மறைப்பின்றி உரைத்திடுக! இங்ஙன் செய்யின்
நனவுலகில் மனிதரென வாழ்வோம்!" என்று
நவின்றவனை "அடைத்திடுக கொடுஞ்சி றைக்குள்"
எனவுரைத்துக் கொடுநஞ்சைக் கொடுத்தான் வேந்தன்
"எனதுயிரிற் பெருங்கொள்கை விடுதல் ஏலேன்
சினவுயிரை விடுதல்எனக் கெளிதாம்" என்று
செப்பிஅவன் குடித்தெறிந்த கிண்ணத் துள்ளே

9

நாட்டுக்குச் செய்தபெருந் தொண்டுக் காக
நரிக்குணத்தர் அவற்களித்த தூக்கு மேடை
காட்டுகின்ற சுருள்கயிற்றில், இறந்து பட்ட
காளையவன் சவக்குழியில், எலும்புக் கூட்டில்,
நாட்டிற்காச் செக்கிழுத்து மெலிந்த தோளில்,
நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில்,
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெறிந்த
திருத்தாலிக் கயிற்றில்நான் எழிலைக் கண்டேன்.

❋

# நிலவு

### எண்சீர்விருத்தம்

**1**

ஒளிமிகுந்த குளிர்நிலவே! உன்னைக் கண்டேன்
உள்ளமெல்லாம் உவகையுற இன்பங் கொண்டேன்;
களிமிகுந்த காதலருக் கின்பத் தோணி!
கடைந்தெடுத்த வெண்முத்தம் நின்றன் மேனி;
தளிர்போலும் குழவிகளின் கதறல் நீக்கும்
தாயர்தமக் குதவிடுவாய்! உலகைக் காக்கும்
எளிமைமிகு தொழிலாளர் அயர்ந்த போது
எழுந்துமுகம் காட்டிமகிழ் வூட்டும் மாது!

**2**

ஒருபொழுதும் வயிறார உண்ணல் காணா
துயிர்நிற்க இரந்துண்ணும் ஏழை திங்கள்
வருபொழுது அரைவயிறு மட்டும் உண்டு
வருந்துகிற உழைப்பாளி, நிறைய உண்ணும்
பெருவயிற்றுப் பணக்காரன் யாவ ரேனும்
பிழையாது நிலவளித்து மாட மீதும்
சிறுகுடிசை மீதுமொளி வீசி இன்பம்
சேர்க்கின்ற பொதுவுடைமை ஆட்சி கண்டேன்

## 3

பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே! உன்னைக் கண்டு
மதுவுண்ட வண்டானேன்; இன்பப் பாடல்
வாய்குளிர மனங்குளிரப் பாடி நின்றேன்;
புதுவுலகம் விரைவினில்நாம் காண வேண்டின்
பொலிவுபெறும் முழுமதியார் ஆட்சி வேண்டும்
இதுவுண்மை எனநினைந்தேன்; களங்கம் உன்பால்
இருக்கின்ற தெனஒருவன் இயம்பி னானே!

## 4

நிறைமதியார் நிலவுலகம் நிலைக்குங் காறும்
நீள்புகழால் ஒளிபரப்பு வார்,இவ் வுண்மை
நிறைமதியம் இரவிங்கு நிற்குங் காறும்
நெடுங்கதிரால் ஒளிபரப்பிக் காட்டும்; மேலும்
குறைமதியார் புகழெல்லாம் வெளிப்ப கட்டாய்க்
குறைந்துவிடும் மிகவிரைவில் என்ற உண்மை
குறைமதியம் சிறுநேரம் பகட்டி வானிற்
கூத்தாடி மறைந்துநமக் கெடுத்துக் காட்டும்

## 5

மதியுடையார் பேசுவதைக் கேட்டல் நன்று
மாண்புவரும் எனக்குழுமும் விண்மீன் கூட்டம்;
அதுமகிழ வானத்து மேடை ஏறி
அம்புலியார் சொற்பொழிய முகிலன் ஓடி
எதிரியெனக் கூட்டத்துள் ஒளிம றைத்தான்,
இடியிடித்தான், குழப்பத்தை ஆக்கி விட்டான்;
இதிலென்ன கண்டனரோ? மதியார் நாளை
ஏறாமல் இருப்பாரோ மேடை மீது?

## 6

நிலவணங்கே! உனைக்கதிரோன் கூடுங் காலை
நீலமுகிற் குழல்தளரக் கட்ட விழ்ந்து
பொலபொலவென் றுதிர்ந்தநறு மலர்கள் தாமோ
பூத்திருக்கும் விண்மீன்கள்? வானம் நீங்கள்
நலம்நுகரும் பஞ்சணையோ? கதிரோன் எங்கே
நடந்துவிட்டான்? உதிர்மலரை மீண்டும் சேர்த்துக்
குலமாலை யாக்குதற்கு மின்னல் நாணைக்
கொண்டுவரச் சென்றனனோ? கூறாய் தோழி!

## 7

வானத்துத் தாயென்பாள் கதிரோன் என்ற
வம்படித்து விளையாடித் திரியும் சேயைச்
சீனத்துச் சிறுகிளியே! செங்க ரும்பே!
செய்யாதே வீண்வம்பு, புசிக்க வாவென்
றேனத்துச் சோறிட்டாள்; சிறுவன் ஓடி
எற்றிவிடச் சிதறியவெண் சோறு போல
மீனத்துக் குழுவெல்லாம் விளங்கும்! வீழ்ந்த
வெள்ளித்தட் டாமென்ன நிலவு தோன்றும்

## 8

முகிலென்னும் துகிலுடுத்தி நாணம் ஓங்க
முகம்மறைத்துச் செல்கின்ற பெண்ணென் பேனோ?
நகில்கொண்ட அல்லிப்பெண் முகம லர்ந்து
நகைகாட்டப் பிறரெவரும் அறியா வண்ணம்
பகல்மறைந்து முகில்நுழைந்து செல்லு கின்ற
களவொழுக்கத் தலைவனெனப் பகரு வேனோ?
மிகுவிண்மீன் வயிரங்கள் கொள்ளை கொள்ள
முகில்பதுங்கும் திருடனென விளம்பு வேனோ?

# காற்று

அறுசீர் விருத்தம்

1

இரவலர்கள் எவரேனும் வருவாரோ
என்றஞ்சிக் கதவ டைக்கும்
புரவலர்கள் சாளரத்துக் கதவுதனைப்
பூட்டாது திறந்து வைத்து
வரவுரைகள் கூறுகின்றார் காற்றுக்கு;
வரவிலையேல் பணத்தை வீசி
இரவுபகல் மின்விசிறி கொண்டவர்கள்
எப்பொழுதும் சுழற்று கின்றார்

2

செலவழித்துப் பெற்றாலும் இயற்கைமணம்
சேர்காற்றைப் பெற்றிட் டாலும்
இலவளித்த பஞ்சணையார் மென்காற்றில்
இழைந்திருக்கும் சுகத்தை எள்ளின்
அலகனைத்தும் அறிவாரோ? சுரங்கத்தில்,
ஆலைகளில், உலைக்க ளத்தில்,
பொலபொலக்க உடல்வியர்க்க உழைப்பவரே
பொலிநலத்தைக் காண்பா ராவர்

3

குளிர்நிலத்தில் மலர்ச்செடியில் உராயுங்கால்
குளிர்மணத்தை வீசும் காற்று;
வெளியிடத்திற் சுடுநிலத்தில் வரும்பொழுது
வெப்பத்தை வீசிச் செல்லும்;
அளியகத்தே மிகுசான்றோர்ச் சார்பவரும்
அறநெறியர் ஆவர்; தீமை
நெளிமனத்தர் தமைச்சார்வோர் இவ்வுலகில்
நேர்மையிலா வழியே சார்வர்

4

பருவஎழில் மலர்ந்துள்ள பெண்ணொருத்தி
பதியின்பால் புலந்து கண்ணீர்
பெருகஉதிர்த் தசையாமல் நிற்பதுபோல்
பெருந்துணர்ப்பூஞ் செடிகள் எல்லாம்
மருமலர்கண் ணீர்சிந்தித் தலைசாய்த்து
மணமின்றி நிற்கும், பின்னர்
அருகணையும் கணவன்வந் தவளிதழை
அசைக்கின்ற போழ்து மங்கை,

5

இதழ்விரித்து நகைகாட்டல் எனத்தென்றல்
இனிதாகச் செடிகள் மீது
மெதுவாகத் தடவஇதழ் விரித்தரும்புப்
பல்காட்டும்; மேலும் வண்டு
பதம்பாடச் செடிகொடிகள் நடமாடப்
பரிந்தவற்றை மணக்கும் தென்றல்;
இதுபிறந்த மலைஎங்கள் தமிழகமே
எனும்போது சிலிர்க்கும் உள்ளம்

6

ஐம்பூதத் தொன்ருன காற்றிலையேல்
அம்புவியில் இயக்கம் ஏது ?
தெம்பேது மக்களுக்கு ? துயில்பவனைத்
தெருளில்லா இரவுப் போதில்
நம்பூறும்படி அவனோர் பிணமல்லன்
எனுந்திறத்தை நவில்வதெல்லாம்
மென்பூவின் மூக்கில்வரும் காற்றன்ருே ?
மேதினியே காற்ருல் வாழும்.

7

பணிவோர்க்குக் காப்பளித்துப் பணியாரை
வேரறுப்பர் பண்டை எங்கள்
அணிசேர்க்கும் முடியரசர் ; பெருவளியும்
அடிக்குங்கால் ஆற்றின் நாணற்
பணிவேற்றுக் கொண்டங்கு தலைநிமிர்ந்த
பனைதென்னை மரங்கள் யாவும்
அணிவேரற் றடிவீழச் செய்திடுமால்
ஆருக்கும் பணிதல் நன்ரும்.

8

நீர்கொண்ட மேகத்தைக் கடலினின்று
நெடுந்தொலைவு உந்தி வந்து
பேர்கொண்ட மலைப்பாங்கிற் சேர்ப்பதுவும்
பின்னுமதைக் குளிரச் செய்து
நீர்கொட்டச் செய்வதுவும் காற்றன்ருே ?
நீணிலத்துச் சான்ருேர் என்ற
பேர்பெற்ருேர் அடுத்தடுத்து நன்மைகளே
பேணிவந்து செய்தல் காட்டும் ;

9

வடக்கிருந்து வருவாடை வாட்டுவதும்
தெற்கில்வரும் தென்றல் இன்பம்
கொடுப்பதுவும் காட்டுமொரு பேருண்மை ,
கொடுமையிலாத் தமிழ நாடும்
வடக்கிருந்து வருபவையால் துயருழந்து
வாடுவதும் தெற்கோ இன்பம்
படைப்பதுவும் நாடறியும் , உயர்வாம்இப்
பண்புணர்த்தும் தென்றல் வாழ்க !

❖

# ஆறு

## எண்சீர் விருத்தம்

1

பகல்முழுதும் வெயில்காய்ந்து மேற்பால் சேரும்
பகலவனை வழியனுப்பிக் கீழ்ப்பால் திங்கள்
முகமெழுப்பும் வேளைதனில் மகிழ்வு கூட்ட
முரணில்லா யாழெடுத்தாள் காதல் நல்லாள் ;
முகம்சுழித்தேன் , 'ஏனென்றாள் ?', 'கவிதை யாக்க
முயல்கின்றேன் நீபாட முனைதல் நன்றோ ?
தகவிதுவோ ?' எனவுரைத்தேன் ; யாழை வைத்தாள்
'தளிர்க்கரத்தாய்! என்னுடன்வா' என்றழைத்தேன்

2

அவளுடன்நான் கற்பனையில் மிதந்து சென்றேன்
'அத்தான்! ஓர் ஐயமுண்டு, செய்யுள் யாக்கக்
கவலைதரும் இலக்கணமேன் வேண்டும் ?' என்றாள் ;
'காரிகையே ! ஆற்றுக்குக் கரையேன் வேண்டும்?
சுவர்போலும் கரையிலையேல் ஆற்றின் தன்மை
என்னாகும் சொல்லிடுக ! ஊர்பாழ் அன்றோ ?
அவமின்றி மொழிவிளங்கக் கவிதை என்னும்
ஆற்றுக்கும் இலக்கணமோர் கரையே யாகும் ;

3

பாவலன்தன் கவிப்பொருளைப் பாடுங் காலைப்
பாட்டகத்தே இலக்கணமும் அமைதல் வேண்டும்
ஆவல்கொண்டு கவிபுனைவோர் இலக்க ணத்தை
அருகில்வைத்துப் பெருங்கவியாய் எண்ணிக்கொண்டு
தாவுகின்றார் பாடுதற்குத் தவறி வீழ்ந்து
தகுபுலவோர் இலக்கணத்தைப் புதைத்து விட்டுக்
கூவுகின்றார் ஒப்பாரிக் குரலெ டுத்து ;
கொடுமையிது ! கவிஞன்தன் மரபும் அன்று !'

4

'பண்டிதர்வே றென்னசொல்வார் ? தமிழை எங்கும்
பரவவிட மனமில்லார்' எனந கைத்தாள் ;
'அண்டவந்த பிறமொழியால் தமிழை மக்கள்
அயர்த்தடிமை ஏற்றிருந்த போது, காத்துக்
கொண்டிருந்த பண்டிதனைக் குறைசொல் கின்றாய் ?
குறைமதியைத் தலைக்கொண்டாய் ! கவிஞனும்யார்?
பண்டிதன்தான், உளறாதே ! மொழியாம் ஆற்றில்
படிந்தெழுந்தால் உன்மடமை கரைந்து போகும் ;

5

சிறுஇதயத் தூற்றெடுத்து மேனி எங்கும்
செழிப்பதற்குக் கிளைத்தோடும் குருதி யைப்போல்
குறுகிடத்தே தோன்றிப்பின் நாட்டில் செல்வம்
கொழிப்பதற்குக் கிளைத்தோடும் ஆறு, வெற்பில்
விறுவிறுக்க அருவியெனப் பாறை மீது
வீழஅது கல்லாகி ஓட ஓடக்
குறுமணலாய் ஒன்றுதிரிந் தொன்றும் என்ற
குவலயத்தின் பரிணும உண்மை காட்டும் ;

## 6

மேற்றிசையில் செந்நிறத்தைக் கதிரோன் பாய்ச்சும்
வேளையிலே அவ்வொளியை ஆறு தன்மேல்
ஏற்றுனது மெய்வண்ணம் காட்டி, ஒவ்வோர்
இடங்களிலே நெளிந்தோடி இடையைக் காட்டி,
நாற்றுநிறை வயல்களுக்குப் பிரிந்து சென்று
நாள்வருவாய்க் கால்காட்டி, ஓடை மீது
காற்றுரசச் சலசலவென் றோடுங் காலை
களிநடஞ்செய் காற்சதங்கை ஒலியைக் காட்டி

## 7

கரையோரம் அலைக்கையால் வாரி விட்ட
கருமணலால் சுருள்கூந்தல் காட்டி, வெள்ளை
நுரைசேரும் புனல்தள்ளும் சங்கி னத்தின்
நுண்சினையால் பல்காட்டி, ஓடி ஓடி
இரைதேடும் கயல்மீனால் கண்கள் காட்டி,
இறுமாந்து செல்லுங்கால் தன்பால் செந்தா
மரையின்றி முகங்காட்ட முடியா ஆறு
மாய்வதற்குக் கடல்நோக்கி ஓடு தல்பார்!

## 8

ஊர்மக்கள் வெறுத்தொதுக்கும் கழிநீர் எல்லாம்
ஓடிவந்து கலந்தாலும் மாசு நீங்கி
ஊர்விட்டு நீங்குகையில் தூய்மை யாகி
ஊர்ந்துசெலும் ஆறுகண்டு தமிழைக் காண்பாய்!
சார்பற்றுத் தனித்தியங்க வல்ல என்றன்
தமிழ்மொழியில் பிறமொழிகள் கலந்த போதும்
நேர்வுற்று மாசின்றி இயங்கும் பண்பை
நினைப்பூட்டும் ஆற்றுக்கு வாழ்த்துக் கூறு!

9

வாழ்த்தென்று கூறுகையில் பழைய எண்ணம்
வாட்டுதடி! நம்முன்னோன் ஆட்ட ணத்தி,
காழ்த்தபகை நீக்குவிறல் சோழன் பெற்ற
கனிஆதி மருதியுடன் ஆற்று வெள்ளம்
ஆழ்த்திவிடும் என்றுணரா தாடச் சென்றான்;
அவள்கண்ணீர் ஆருக அவனைக் கொன்ற
பாழ்த்துறைபார்! இலக்கியமாம் ஏட்டுச் செல்வம்
அழித்தொழித்த பதினெட்டாம் பெருக்கை யும்பார்!

10

கடிதோடும் வெள்ளத்தால் ஊரின் செல்வம்
கரையின்றி அழிந்தொழியக் கண்டு நொந்து
முடியரசன் கரிகாலன் மக்கள் வாழ்வு
முந்துறவே இருமருங்கும் எழுப்பித் தந்த
நெடிதோங்கு கரைகளைப்பார்! அவனின் றில்லை
நிலைத்துநின்ற தவன்பணியே; ஆத லாலே
படியாள்வோர் புவியாட்சி மாறும் உண்மை
படித்திடுக! பயனுள்ள செயலே செய்க!

11

உருக்குலைய உழைத்துழைத்துச் செல்வம் இல்லா
உழைப்பாளர் வாழ்வினைப்போல் வறண்டுதோன்றும்
பெருக்கில்லாக் காட்டாறு காண்பாய்! ஈகை
பேணாத பெருஞ்செல்வர், மிடியால் வாடி
இருப்பவர்க்குப் பயனில்லா தொழிதல் போல
எரிகதிரால் வதைந்தவர்க்கு நிழலொன் றீயா
திருக்குமரம் கரைகளிற்காண்! வறுமை யுற்றோன்
இளமையென வதங்குசெடி கொடிகள் காண்பாய்!

## 12

கடற்கணவன் எங்குள்ளான் என்று தேடிக்
கதறிக்கொண் டோடுகின்ற ஆற்றுப் பெண்ணாள்
தொடக்கண்டு பெருங்கடலோன் அலைக்கை நீட்டித்
தோள்தொட்டான், மகிழ்வுற்றாள், பிரிவுத் துன்பம்
விடக்கண்டாள், ஒன்றாகக் கலந்து விட்டாள்;
வேறிடத்தே பிறந்துள நீ அறியா என்பால்
கடைக்கணித்துக் கலந்து விட்டாய்! ஆறும் எங்கோ
உருவெடுத்தும் கடலோடு மணத்தல் காண்பாய்!

## 13

முப்பதுநாள் தமிழ்சொல்லிப் பள்ளிக் கூட
முதல்வர்தரும் ஊதியத்தைக் கடனுக் கெல்லாம்
ஒப்படைத்துப் பதினைந்து நாட்கள் ஓட்டி
ஒழிந்தபின்னாள் என்செய்வேன் என்ற எண்ணம்
கப்பிடநீ அருள்சுரந்துன் அன்னை தந்த
காப்பளித்துக் காப்பளித்தாய்! அதுபோல் வானம்
தப்பியதால் பெருக்கற்றும் ஊற்று நீரால்
தரணியினைக் காக்கின்ற ஆறு காண்க!

## 14

மலைமீது தோன்றிப்பின் அருவி யாக
மன்னர்பகைப் போர்முரசம் என்ன ஆர்த்து
நிலையாமல் ஓடிப்போய்க் கரையே யில்லா
நீர்க்கடலில் மறைகின்ற ஆறு கண்டேன்;
உலையாத உண்மைகண்டேன்; உலகில் தோன்றி
உருப்பெற்ற பொருள்ஒருநாள் மறைதல் உண்மை
கலைமானே! மறைவதன்முன் மக்கள் வாழ்வைக்
காண்கின்ற ஆற்றைப்போல் கடமை செய்க!

## 15

கிளர்ச்சிசெயும் தொண்டர்களின் உணர்ச்சி வெள்ளம்
கெடுவழியில் செல்லாமல் தடுத்து நன்கு
வளர்ச்சிபெறச் செய்கின்ற தலைவன் போல
வருவெள்ளப் பெருக்கனைத்தும் பாழ்ப டாமல்
அளப்பரிய நன்மைசெயத் தடுத்து நிற்கும்
அணைக்கட்டின் அழகைப்பார்! மனிதன் ஆற்றல்
விளக்குகிற செயலதுவாம்; இயற்கை எல்லாம்
வென்றாளும் மனிதர்திறம் என்னே! என்னே!!

## 16

ஒருதுறையில் ஆண்பாலர் மற்றோர் பக்கம்
உயர்மாதர் நீராடும் காட்சி யைப்பார்!
கருமுகில்வந் தமர்ந்ததுபோற் கிடந்த யானை
கழுவுகின்ற பாகனையும் அவனைச் சூழ்ந்து
சிறுவர்பலர் நீரிறைத்தே ஓடி ஆடிச்
செய்குறும்பும் காணடிநீ! இந்த ஆற்றில்
ஒருசாதிக் கொருதுறையுண் டென்ற கொள்கை
ஒழிந்ததையும் பாரடிநீ! செல்வோம் வாவா!

# கடல்

அறுசீர் விருத்தம்

1

கவலையொடு நின்பால்வந் தமர்ந்திருக்கும்
கடன்பட்ட மாந்தர் தம்மைத்
திவலையொடு அலையெழுப்பி அக்கவலை
தீர்க்கின்றாய் காதல் வாழ்வில்
தவழ்கின்ற இளைஞர்க்கும் மணங்கொண்டார்
தமக்குமொரு சேர இன்பம்
உவக்கின்ற படியெல்லாம் கொடுக்கின்றாய்
உவர்க்கடலே இன்னும் கேட்பாய்!

2

தங்கத்தைப் பவழத்தை ஒளிமுத்தைத்
தளிர்க்கரும்பை நெல்லை எல்லாம்
துங்கத்தன் கைநீட்டித் தருகின்ற
தாயதமிழ் நாட்டை விட்டுச்
சிங்கத்தை நிகர்தமிழர் கூலிகளாய்ச்
சீர்கெட்டுச் செல்லு கின்ற
வங்கத்தைக் கண்டேயோ பொங்குகின்றாய்?
வாய்திறந்து கத்து கின்றாய்?

## 3

எத்தனையோ அருநூல்கள் செல்லார்கட்
கிரையாக்கி விட்டோம், மேலும்
பித்தரைப்போல் மூடரைப்போல் பதினெட்டாம்
பெருக்கென்றும் ஆற்றி விட்டோம்,
இத்தனையும் போதாமல் சங்கத்தில்
இருந்தவற்றை நீயும் கொண்டாய்!
கத்துதிரைப் படையெழுப்பி ஏனின்னும்
கரைநோக்கி வருகின் றாய்நீ?

## 4

சங்கத்து நிலவியநல் இலக்கியத்தை,
சகமெல்லாம் புகழ்ந்து போற்ற
வங்கத்து வணிகத்தால் ஓங்குபுகார்
வளமிக்க நகரை, எங்கள்
சிங்கத்தை நிகர்பன்னீர்ச் செல்வத்தைச்
செத்தொழியச் செய்தாய்! அந்தோ!
கங்கொத்தும் அலைகடலே! எமையிங்கு
கலங்கிமனம் இரங்க வைத்தாய்

## 5

அன்றிழைத்த தீமையெலாம் போதாவென்
றுவினங்கள் உயிர்போய் மாள
நின்றிருந்த உயர்மரங்கள் வீடெல்லாம்
நிலைவீழ மக்கள் தம்மைக்
கொன்றழித்து நாகையினைச் சுவைத்தாயோ?
கொழிதரங்கம் பாடி என்ன
இன்றிருக்கும் ஊரினையும் அலைக்கையால்
இழுப்பதற்கோ சென்றாய் அங்கே?

6

நெய்தலெனப் பெயர்சூட்டி இரங்கல்என
நினக்குரிமைப் பொருளும் தந்த
செய்கையது நன்றுநன்று! அழித்தழித்தே
இரங்கியழச் செய்தாய்! அந்தச்
செய்கையினை மறந்துவிட்டோம் நீஎமக்குச்
செய்நன்றி நினைத்த தாலே;
செய்வளர முகிலுக்கு நீர்கொடுக்கும்
சிறப்புனது நன்மை அன்றோ!

7

கடற்பரப்பில் அலைஎழும்ப நீர்பிளந்து
கப்பல்விரைந் தோடுங் காலை
அடக்குமுறை ஆங்கிலத்தார் அரசெதிர்த்த
சிதம்பரப்பேர் அண்ணல் தெற்குக்
கடற்பரப்பில் கலம்விட்ட நினைவெழுந்து
கண்ணெதிரே தோன்றும்; இன்னும்
விடக்காணோம் தமிழ்க்கலங்கள் நாட்டுணர்வு
விட்டனரே எனவும் தோன்றும்

8

உன்னிடத்தே முத்துண்டு பவழமுடன்
உணவாகும் மீனும் உண்டு
பொன்கொழிக்கும் கப்பல்களைப் பாழாக்கும்
பொல்லாத சுறவும் உண்டு
மன்னிலத்தும் அப்படித்தான் மக்களுக்குள்
வாழ்வழிக்கும் திமிங்கி லங்கள்
கன்மனத்துச் சுறவினங்கள் நல்லொளியைக்
காட்டுகிற முத்தும் உண்டு

9

உலகுக்கோர் பொதுவுடைமை நீயென்ற
உண்மையுணர்ந் திருந்தும் சில்லோர்
கலகத்தார் எனதுகடல் உனதுகடல்
காணென்று பூசல் செய்வார்;
விலகத்தான் கோடுண்டா? குறியுண்டா?
வீணுக மக்கள் யாரும்
உலகத்துப் பொருளெல்லாம் தமதென்றே
ஒற்றுமையை மாய்க்கின் ருரே!

10

கற்றுணர்ந்த சான்ருேரின் உள்ளம்போல்
கடலேநீ ஆழம் கொண்ட
பெற்றியுணர்ந் தாழிஎன்ருர்; யாதும்மூர்
பிறரெல்லாம் கேளிர் என்ற
பற்றுடைய தமிழினத்தார் பரந்தமனப்
பான்மையெனப் பரந்து நிற்கும்
ஒற்றுமையைக் கண்டன்ருே என்முன்ஞேர்
உனைப்பரவை என்று சொன்ஞர்

11

விளங்காத மொழிபேசும் என்மகவு
விளையாடும் பொழுது மண்ணில்
மழுங்காத சிறுவிரலால் கீறிவிடும்
வளைவுகள்போல் கரையில் நண்டு
ஒழுங்காக அமையாமல் ஓடியோடிக்
கோலமிடும்; ஆளைக் காணின்
இளங்காளை முன்வந்தால் நாணமுறும்
இளையவள்போல் மறையும் ஓடி

## 12

கடலுக்குள் வலைவீசி மீன்பிடிக்கக்
காதலனை வழிய னுப்பிக்
குடிலுக்குள் அவன்வரவை எதிர்நோக்கிக்
கொண்டிருக்கும் மங்கை யுள்ளம்
துடிதுடித்துக் குமுறுவதைப் போல்நீயும்
துடிக்கின்றாய்! குமுறு கின்றாய்!
கடனுக்கோ? அன்றியவள் துன்பத்தைக்
கண்டோ?நீ உண்மை சொல்வாய்!

## 13

நீலமணிக் கடற்கப்பால் கீழ்வானில்
நெடுங்கதிரோன் செந்நி றத்தைக்
கோலமுடன் பூசுவதைக் கண்டேன்நான்
குதித்தெழுந்து கடவுள் என்றேன்;
ஞாலமுளார் நாத்திகமாம் என்கின்றார்
நானதற்குச் செய்வ தென்ன
வேலையிலார் சொல்லுக்குச் செவிசாய்த்தா
வேலைகளைச் செய்கின் றாய்நீ?

# மயிலே

அறுசீர் விருத்தம்

1

விண்ணுக்குப் பொலிவூட்டும் பன்னிறங்கள்
விளையாடும் தோகைக் கண்ணின்
எண்ணிக்கை எத்தனைபார்! அழகைத்தான்
என்னென்பேன்! ஒலிக்கும் மேகப்
பண்ணுக்குத் தவருமல் அடிவைத்துப்
பரதத்தைச் செய்வாய்! என்றன்
கண்ணுக்கும் புண்பட்ட கருத்துக்கும்
களிப்பூட்டும் மயிலே வாழ்க!

2

மங்கையர்க்கு நின்சாயல் உண்டென்ன
மனமெனக்கோ ஒப்ப வில்லை;
இங்கிருக்கும் சாதியைப்போல் எண்ணற்ற
கண்ணுள்ள நீளத் தோகை
இங்கிதமாய் விரித்துநடஞ் செய்யுங்கால்
எழுப்புகிற குரலின் ஓசை
நங்கையரின் இன்குரலுக் கொப்பில்லை
நகைக்கின்ருர் அதனைக் கேட்டு

## 3

புள்ளிமயில்! உன்னைக்கண் டாலறிவுப்
புலவனுக்குத் தோகை காட்டி
உள்ளமதில் கற்பனைகள் சேர்க்கின்றாய்!
ஓவியன்வைத் தெழுது கோலைத்
துள்ளிவிளை யாடச்செய் கின்றாய்நீ!
துடுக்குள்ள பெண்ணை நோக்கி
எள்ளிநகை செய்வதற்கோ நிமிர்கின்றாய்?
எழில்மயிலே! மீண்டும் ஆடு!

# இயற்கையின் எழுச்சி

நேரிசை ஆசிரியப்பா

இயற்கை யரசி உலாவர எண்ணி
எழுந்தனள் போலும் எனக்கரு தியதால்
விளக்குக் கம்பம் வீதியில் நின்ற
தந்திக் கம்பம் தலைவணங் கினவே ;
இவற்றின் கம்பியால் எடுத்தன தோரணம் ;
வீடுகள் தாமும் வீழ்ந்து வணங்கின ;
உயர்பெரு மரங்கள் உச்சியை மட்டும்
அசைத்து நின்றன ஆர்ப்பொலி கேட்டு
நின்ற நிலையில் நெடுக வீழ்ந்தன ;
புள்ளினம் தம்வாய் புதைத்து நின்றன ;
ஓடுகள் மலரென உதிர்ந்தன எங்கும் ;
குடிசைக ளிவற்றைக் கோமகள் காணல்
வேண்டா என்று விரும்பிய வான்மரம்
அடிவயிற் றகத்தில் அடக்கிக் கொண்டன ;
சிற்சில குடிசைகள் சிதறி வானில்
வாண வேடிக்கை விளைத்தன ; மக்கள்
அங்கு மிங்கும் அலைந்து திரிந்தனர் ;
கதிரவன் மதியன் கரந்து நோக்கினர் ;

ஊரெலாம் பேரொலி ஓங்கி உயர்ந்தது ;
மூன்று நாட்கள் எங்கும் முழக்கம் ;
உலாமுடித் தேகினள் ஊரெலாம் ஓய்ந்தது ;
ஆயினும் வெவ்வே றூர்ப்பொலி எழுந்தன ;
மண்ணிற் புதைந்த மகவைத் தோண்டிய
தாங்கொணாத் துயரால் தாயர்தம் கதறல்
கைககால் இழந்தோர் கதறும் அழுகுரல்
வீடுகள் இழந்தோர் விளைத்திடும் கூக்குரல்
மாடுகள் ஆடுகள் மாண்டன என்றே
ஏழை மாந்தர் எழுப்பிய அலறல்
சிதைந்த கோலங் காணச் செல்லும்
சிறுசிறு குழுவினர் செய்திடும் பேரொலி
சிதைந்த குடில்களைச் செப்பஞ் செய்வோர்
எழுப்பொலி அனைத்தும் எழுந்து பரந்தன;
அண்டையில் நின்ற மரங்கள் அனைத்தும்
தம்சிறு குடிலைத் தகர்த்ததை எண்ணிச்
சீற்றங் கொண்டார் போலச் சிற்சிலர்
துண்டு துண்டாய்த் துணித்தனர் உறுப்பினை
முண்டமாய்க் கிடந்தன முழுமரம் அனைத்தும் ;
பள்ளிகள் பற்பல பாழாய் நின்றன ;
எங்கும் சிதைந்தும் அழிந்தும் இருந்தன ;
இல்லம் இழந்த எளியோர் சிந்திய
கண்ணீர் மழைநீர் கலந்து பரவின ;
இழப்பொலி இழப்பொலி எங்கும் ஒலித்தன ;
அந்தோ அந்தோ அவலம் !
இயற்கை அரசியின் எழுச்சிப் பயனே !

# படைத்தோன் வாழ்க!

நிலைமண்டில ஆசிரியப்பா

**கற்பனை உலகம்**

பிருந்தா வனத்தின் பேரெழில் கண்டேன்
பிறந்தார் உறுபயன் பெற்றேன் அன்றே;
அப்பெரும் எழில்நலம் அவனியில் காணத்
தப்பியோர் விழிப்பயன் தப்பியோர் ஆவர்;
எண்ண இயலா வண்ண மலர்கள்
கண்கவர் வனப்பொடு கற்பனை பெருக்கும்;
நிலமிசைப் படுபுல் நிமிர்தரு செடிகள்
வலைநிகர் கொடிகள் வகைவகை யாகக்
கைபுனைந் தியற்றிய காட்சியே காட்சி!
இருவிழி எதுவரை எட்டுமோ அதுவரை
பரவிய எல்லை படைத்ததப் பூங்கா;
பசுமையும் தண்மையும் பாங்குடன் குழைத்துப்
பூசிய தென்னப் பொலிபூங் காமிசை
வீசிய விழியோர் வியப்புற் றாங்கே
இமையா நாட்டத் தமைவோர் ஆவர்;
விண்ணுல குண்டென விளம்புவர் கண்டிலேன்
கண்ணெதிர் கண்டேன்அக் கற்பனை உலகை;

**நீரின் விந்தைகள்**

நீரால் விளைத்திடும் விந்தைகள் எத்தனை!
நேரிற் காணின் அல்லது நிலைமையைப்
பாரித் துரைக்கப் பற்றுமோ ஒருநா?
ஆயினும் ஒருசில அறைகுவன் கேண்மின்!
உரமிலா உள்ளத் தொருவன்மற் ருங்கே
மருவு மவர்தம் வயமே யாகி
இயங்குதல் உலகத் தியற்கை அதுபோல்
தனக்கென ஒருநிறம் இல்லாத் தண்ணீர்
மினுக்கிடும் பலநிற விளக்கொளி சார்தலால்
அதனதன் நிறமாய் அழகொளி காட்டிப்
புதுவிருந் தளிக்கும் போமவர் விழிக்கே!
நாடக அரங்கில் நாலுந் திரையெனப்
பாடொலி அருவிப் பாய்ச்ச லோவெனப்
பலவகை நிறநீர் பாங்குடன் இறங்கிச்
சலசல ஒலியுடன் ஓடும் ஒருபால்;
குற்றப் பட்டோர் கொடுஞ்சிறை யதனுள்
உற்றிடல் போல ஒருபால் அந்நீர்
தொட்டிச் சிறையுள் துளங்குதல் இன்றிக்
கட்டுப் பட்டுக் கிடப்பது கண்டேன்;

**ஊற்றுக் குழல்நீர்**

ஊற்றுக் குழல்நீர் காட்டும் வித்தை
வேற்றோ ரிடத்தும் கண்டே னல்லேன்;
விரிகுடை யோவென ஒருபாற் காணும்,
வரிசிலை யோவென ஒருபால் வளையும்,
இனிமேல் தனிமை ஏலேன் என்றே
அணிமைத் தொட்டி யகத்துள் வீழ்ந்து
மாயும் ஒருபால், மற்றொரு பாங்கர்ப்

பிரிந்தவர் கூடும் பெற்றிமை போலப்
பொருந்தும் இருபுறத் திருந்து வருநீர்,
இருபுலப் பகைவர் எதிர்எதிர் நின்று
பொருது வீழும் பான்மையே போல
அணிஅணி யாக அவ்விடை மோதும்,
எண்பே ராயமும் ஐம்பெருங் குழுவும்
தன்புடை சூழத் தனிவீற் றிருக்கும்
மன்னவன் போல மற்றவை சூழ்தர
மதர்த்து நிற்கும் மற்றொன் றொருபால்,
நிரல்பட அரிவையர் நின்று நடம்புரி
செயலெனப் பெரியவும் சிறியவும் ஆகி
ஆடி அசைதரும் அழகினை ஒருபால்
நாடி விழியால் நலம்நுகர்ந் திருந்தேன்;

## அச்சமும் இன்பமும்

நலத்தகு நண்பர் உளத்தெழும் விழைவால்
அளப்பரும் ஆழமும் அகலமும் உற்ற
குளத்தினில் இயந்திரத் தோணிகள் ஏறி
விரைந்தோம், நானோ வியர்வியர்த் திருந்தேன்;
இருந்தஎன் நண்பர் ஏளனம் செய்தனர்
வீரம் பழித்தனர் விடுத்தேன் அச்சம்
நீரில்அத் தோணி நீந்துங் காலை
உலகை மறந்தேன் உயர்விற் பறந்தேன்
அடடா இன்பம்! அத்தனை இன்பம்!
அஞ்சுதல் ஒழிந்தார் நெஞ்சினில் இன்பம்
விஞ்சுதல் உறுதிஇவ் விளக்கமும் பெற்றேன்;

## படைத்தவன் வாழ்க

மீண்டும் திரும்பி மேடையில் நின்று
காண்டகும் அந்தக் காட்சியை நோக்கி

உடைத்தோ இவ்வெழிற் குவமை? இதனைப்
படைத்தோன் வாழி! படைத்தோன் வாழி!
என்றேன்; நண்பன் “இறைவனே” என்றனன்;
அன்றே என்றேன்; “அரசனே” என்றான்;
அறியா துரைத்தனை ஆருயிர் நண்பா!
உறுதி குலையா உழைப்பினை நல்கிக்
குருதியை நீராய்க் கொட்டிய ஏழை
பாரில்இப் பூங்கா படைத்துத் தந்தனன்
ஆரிதை உணர்வார்? அவனை வாழ்த்தினேன்
இதன்நலம் அறியான் பிறர்நலம் பேணுவான்
இதமுடன் உழைக்குமவ் வேழையை வாழ்த்தினேன்
வாழிய அவன்குலம் வாழிய நன்றே!

# முகிலிடை நிலா

1

பாம்பொன்று நிலைவிழுங்கும் என்று சில்லோர்
பகர்ந்திடுவார் அதைநம்பார் அறிவில் நல்லோர்
வேம்பன்னுர் எமைவீழ்த்த இனைய சூழ்ச்சி
விளைத்தார்கள் தொலைத்தார்கள் தமிழர் ஆட்சி ;
கூம்புவதேன் தாமரைகள் உன்னைக் கண்டு
குடைந்துதேன் அருந்தமலர் சென்ற வண்டு
தேம்புவதைக் காணுயோ சிறையிற் பட்டு?
சென்றிடுவாய் வெளியில்விடச் சொல்லி விட்டு

2

ஆரியத்தால் ஒளியிழந்த தமிழர் போல
அழகிழந்தாய் உனையடைந்த மேகத் தாலே
நாரியரின் முகங்கண்டு நாணி உள்ளே
நண்ணினை நீ எனஎண்ணி நகைத்தாள் முல்லை
வேறினத்தார் நாடாள வீணன் அல்லேன்
வேலெடுத்துப் போர்தொடுப்பேன் வெற்றிகொள் [வேன்
சீரழிப்பேன் எனக்கிளம்பும் வீரன் போலச்
சிரித்தெழுந்தாய் மேகத்தைப் பிளந்து மேலே

பாரதிதாசன் கவிதைகள்

# காதல் உலகம்

# காதல் நெஞ்சம்

நேரிசை வெண்பா

*அவன்:—*

1

கொல்லும் விழியுடையாய்!
கொவ்வைக் கனியிதழாய்!
அல்லும் பகலுமுன்
அன்புபெற—அல்லற்
படுமென்னை உள்ளத்தாற்
பாராயோ? ஆவி
சுடுதுயரைத் தீராயோ?
சொல்!

2

உள்ளப் பெருநிலத்தில்
ஓங்கிப் படர்வகையில்
அள்ளித் தெளித்துவிட்டாய்
அன்புவிதை—கிள்ளிப்
பறித்தெறியப் பாடுபட்டேன்
பாழாயிற் றே!என்
குறிக்கோளாய் வாழ்வாயோ
கூறு!

3

நண்பர் பலசொன்னார்;
நான்மறக்க ஒல்லுவதோ?
கண்ணுள் மணியாய்க்
கலந்துவிட்டாய்!—பண்ணும்
பணுவலுமாய் ஆகிவிட்டாய்!
பாவிஎனைச் சேர
மனமிலையோ? சொல்லிடுவாய்
மற்று

அவள்:—

4

படுப்பேன், புரள்வேன், பின்
பஞ்சணையில் கண்ணீர்
விடுப்பேன், எழுந்திருந்து
வீழ்வேன்;—தொடுக்குமுயிர்
தாங்கவழி யானறியேன்;
தையலெனைச் சார்துயரும்
ஓங்கிவளர் கின்ற
துயர்ந்து

5

அத்தான்! உமதுயிரை
ஆட்கொண்ட நானினிமேற்
செத்தால் நலமென்று
சிந்தித்தேன்;—பித்தாய்த்
திரிவீரே என்றெண்ணிப்
பேசா திருந்தேன்;
அறியீரோ என்உண்மை
அன்பு?

6

பெற்றோர் தடையுண்டு;
　　பின்பிறந்தார் நால்வருண்டு;
உற்றோர் பலருண்டே
　　உண்மையிது;—முற்றாமல்
காதல் கருகிவிடும்
　　காலந்தான் வந்திடுமோ
சாதல் உறுநிலையைத்
　　தந்து!

**இருவரும்:—**

7

காணச் சகியாரோ
　　காதலரை ஒன்றாக்கிப்
பேணத் தெரியாரோ
　　பேருலகில்—கோணற்
சிறுமதிகள் தீயாவோ
　　தீராத காதல்
நறவுண்டு நாம்மகிழ
　　நன்கு

# இன்பமில்லை

எண்சீர் விருத்தம்

1

எத்தனைதான் காத்திருந்தும் என்மனத்தே
இடங்கொண்டாள் எழில்கொண்டாள் நகைக்கும் [பற்கள்
முத்தனையாள் வரவில்லை பொறுத்திருக்க
முடியவில்லை, அறிஞரவர் வரைந்து தந்த
புத்தகத்தைப் புரட்டிவிட்டுப் பேசா தங்குப்
பூட்டிவிட்ட வானொலியைத் திருப்பி விட்டேன்;
அத்தனையும் வீணையிற் றென்னிடத்தே
அவளில்லை ஆதலினால் இன்பமில்லை!

2

அமையாத அலைக்கடலின் கரையமர்ந்தேன்
அலைநிமிர்ந்து காதலினை நிமிர்த்த தங்கே;
இமையாடும் பொழுதேனும் இருந்தேன் அல்லேன்,
எழிற்பூங்கா வுள்நுழைந்தேன், தென்றல் வந்து
சுமையாக மோதிற்று; நிழற்படத்தால்
துயர்தீரும் எனநினைந்து சென்றேன் அங்கும்
உமையாளும் சிவனாரும் காதல் கூர
உருகியணைந் தமர்ந்திருக்கக் கண்டேன் கண்டேன்!

### 3

மனமுடைந்து வீடடைந்து மாடி யேறி
மலர்பரவு பஞ்சணையில் புரண்டி ருந்தேன்
எனைமறந்த அவள்தந்த இன்பம் போன்ற
இன்சுவைப்பால் அருந்தியபின் கசந்த தாலே
சினமடைந்தேன்; முழுநிலவு கார்கி ழித்துச்
சிறிதாகச் சாளரத்துள் கதிர்வீ சிற்றே
அனநடையாள் என்னருகே இன்மை யாலே
அதன்பாலும் அழகில்லை இன்பம் இல்லை!

❖

# புதருள் கனி

1

உருத்தெழுந்த மார்பகத்தாள்
வில்லொடித்த புருவத்தாள்
உள்ளத்தே தைத்தோடிப்
பாய்கின்ற வேல்விழியாள்
கருத்தெழுந்த மேகத்தைப்
புறங்கண்ட சுரிகுழலாள்
கன்னத்தில் அழகொளியாள்
அன்னத்தின் எழில்நடையாள்
சிரித்தெழுந்த செவ்விதழாள்
இன்மொழியாள் அழகெல்லாம்
சேர்த்தெழுந்த உடலுடையாள்
அவளைக்கண் டென்மனத்தை
மறுத்தெழுந்த ஆர்வத்தால்
யாரென்றேன் விதவைஎன்றாள்
மனமுடைந்தேன் மதியிழந்தேன்
உன்மத்த நிலையடைந்தேன்

2

அச்சச்சோ! அவள்நுகர
முடியாத மலரானாள்!
அகங்கவரும் எழில்கொண்ட
சிலையானாள்! கோழைமன

அச்சத்தார் முட்புதராய்
அதனடுவே கனியானாள் !
ஆவலெலாம் பாழன்றோ !
இளம்பருவ எழில்நிறைந்த
பச்சைமயில் இவளன்றோ !
பாவையிவள் நாள்முழுதும்
பதியின்றித் துயருறவோ !
அறமிதுவோ ! விதவைஎனும்
கொச்சைமொழி இல்லாமல்
செய்திடுவேன் என்றுறுதி
கொண்டுன்றன் விருப்பம்யா
தெனவினவக் கோதையவள்

3

சிந்துகின்ற நீர்துடைத்து
"விருப்பந்தான் ஆனாலும்
சீறிடுவர் உறவினர்தாம்
சாதியினில் ஒதுக்கிடுவர்
நிந்தனைகள் பேசிடுவர்
நேர்நிற்க ஆற்றலிலேன்
நீறாகிப் போகாதோ
நேர்மையற்ற சட்டமெலாம்
நொந்துழலும் எ[illegible]ரில்லையை
அறியாது பெற்றோரும்
நோயென்று செப்புகின்றார்
செய்வதேதும் நானறியேன்
இந்தநிலை உள்ளளவும்
எப்படிநான் ஒப்பிடுவேன்"
என்றுருகிச் சொல்லிவிட்டு
முகமாறிப் போய்விட்டாள்.

# ஏன் வரவில்லை?

அறுசீர் விருத்தம்

1

விண்ணிடத் தெறிந்த வெள்ளைப்
பூசணிக் கீற்றோ என்ன
எண்ணிடப் பிறங்கும் நல்ல
இளம்பிறை நிலவே! என்னை
நண்ணிடத் துடிக்கும் பாவை
நானிவண் வந்த பின்னும்
மண்ணிடைப் பரப்பில் காணேன்
மங்கைஏன் வரவே இல்லை?

2

கண்கவர் சிறுவர் சேர்ந்து
கடுமழைப் புனலில் ஓடப்
பண்ணிய கப்பல் போலப்
படர்பிறை நிலவே! என்றன்
உண்ணிறைந் திருக்கும் செல்வி
ஒடிவந் திருக்கக் காணேன்
எண்ணிய தேதும் உண்டோ?
ஏனவள் வரவே இல்லை?

3

அகத்தியின் குவிபூத் தோற்றம்
அன்னதோர் பிறைநி லாவே!
பகற்பொழு தகலும் நேரம்
பார்த்ததும் வருவேன் என்றாள்
இகழ்ச்சியோ செய்கின் றாள்என்
றேங்கிடும் உள்ளம் ஆங்கே
பகர்ந்ததை மறந்தோ போனாள்?
பாவைஏன் வரவே இல்லை?

# உன்னுருவே தோன்றுதடி

எண்சீர் விருத்தம்

1

உள்ளத்தில் படிந்துவிட்டாய் அழகுப் பாவாய்;
உணர்வுடனே கலந்துவிட்டாய் தமிழின் பாட்டாய்;
கள்ளக்கண் பார்வையிலே சொக்கி விட்டேன்;
கரைபுரண்டு வருகின்ற காத லாற்று
வெள்ளத்தில் புணையாவாய் என்றே உன்னை
வேண்டியதை மறுத்தனையே! உயிர்நி லைக்கக்
கள்ளைத்தான் நம்பினும்அம் மதுநி றைந்த
கைக்கிண்ணத் துன்னுருவே தோன்றக் கண்டேன்

2

கச்செதிர்க்கும் உன்மார்பு கலக்க வில்லை;
காட்டுமலர்ச் சிரிப்புந்தான் அசைக்க வில்லை;
பச்சைமயில் சாயலுக்கும் பதைத்தே னல்லேன்;
படியவைத்த துன்னிசையோ அன்றே; உன்றன்
இச்சைமிகும் பார்வையில்தான் கட்டுண் டேன்நான்
என்னுசை மறுத்தனையே! என்றன் வாழ்வுக்
கச்சாணி அனையவளே! சோலை செல்லின்
அங்கெல்லாம் உன்னுருவே தோன்றக் கண்டேன்

## 3

இனிக்கின்ற சிலம்பெடுத்தேன் கானற் பாட்டாய்
இசைக்கின்றாய்! மாதவியாய் நடிக்கின் றாய்நீ!
கனிச்சாறே! சிலம்பொலியும் கேட்டு நின்றேன்
காதலைநீ புறக்கணித்துச் செல்லல் நன்றோ?
உனக்கென்று கொலைப்பார்வை அமைந்த தோ?என்
உயிர்வாழ மனமின்றி நஞ்செ டுத்துத்
தினச்சென்றேன் அதனிடத்தும் என்னை வாட்டும்
செவ்விதழாய்! உன்னுருவே தோன்றக் கண்டேன்

# புதுமைப் பெண்

கலிவெண்பா

தோழி :—

என்னடி உன்முகம் இப்படி வெண்மையதாய்ச்
சின்னத் தனமும் சிறிதுநிலை மாறியதேன்?
உண்ணு துறங்கா திருப்பதுமேன்? என்னுயிரே!
கண்ணே! இதனுண்மைக் காரணத்தைச் செப்பாயோ?

தலைவி :—

நல்லபசி இல்லை நலமில்லை வேறொன்றும்
இல்லையடி என்அன்பே! இப்படிஏன் வாட்டுகிறாய்?

தோழி :—

ஆமாம்நீ ஏனுரைப்பாய் அன்பில்லை என்னிடத்தே
ஏமாற்றுச் சொற்கள் இயம்புகிறாய் போய்வருவேன்

தலைவி :—

நில்லடி என்தோழி நேர்ந்ததையே சொல்லுகிறேன்
பல்லை விரித்துப் பரிகாசம் பண்ணாதே

நெஞ்சை ஒளித்ததொரு வஞ்சகம் இல்லைஎன்பார்
நெஞ்சகம் நீயன்றோ நேரிழையே! தாயறியாச்

சூலுண்டோ? உண்மையைநான் சொல்லி விடுகின்றேன்
பாலுண்டேன் காதல் மதுவால் மனந்தளர்ந்தேன்

**தோழி :—**

காதல் மதுவா? கட்டழகன் யாரோடி?
ஈதென்ன விந்தை! எனக்குரைப்பாய் யாரென்று

**தலைவி :—**

நன்மானங் கொண்டோர் தமிழ்வீரர் நாட்டுமக்கள்
நன்மானங் காக்க நயந்துதொண்டு செய்கின்றார்

அண்ணா துரைபோல் அழகாகப் பேசுகின்றார்
பெண்ணைப் பிறந்தார் பெறுமிழிவு நீக்குகின்றார்

அன்னார்பால் என்னெஞ்சம் ஆழ்ந்ததடி; சேர்ந்துறையும்
நன்னாள்தான் கூடுமட்டும் நல்லுறக்கம் வந்திடுமோ?

**தோழி :—**

போதுமடி உன்காதல்! பொல்லாப்பு வந்துவிடும்
தீதுபல நேருமடி தேசத்தார் தூற்றிடுவார்

அன்பால் மணப்பதற் கம்மான் மகனிருக்க
வன்பாய் விரும்பேல் மறந்துவிடு மற்றவரை!

**தலைவி :—**

காய்ச்சும் இரும்பு கவர்ந்திட்ட நீர்போல
ஆச்சுதடி என்மனம் அன்பர் அவரிடத்தே

நாட்டார்கள் காதல் நலமறியார் புல்லுரைக்கும்
வீட்டார்கள் சொல்கின்ற வெற்றுரைக்கும் நானஞ்சேன்

உள்ளம் விழைந்த ஒருவரை விட்டுவிட்டுக்
கள்ளச் செயல்புரியக் கற்பறியா நல்லகுலப்

பெண்ணென்று எண்ணினையோ? பேதைமையால் கூறுகிறாய்
கண்ணின் இமைபோலக் காப்பவளே! என்னுளத்தைத்

தொட்டார்க் குரியளாய்த் தோள்தோய்ந்து வாழலன்றிக்
கட்டாயக் கல்யாணங் கண்டிப்பாய் நான்வேண்டேன்

அஞ்சிஅஞ்சி வாழ்ந்த அரிவையர்கள் இந்நாளில்
மிஞ்சிவிட்ட செய்கையினை மேல்நடத்திக் காட்டுகிறேன்

என்றுரைத்துச் சின்னாளில் ஏறனைய காதலனை
மன்றலன்று கொண்டாள் மகிழ்ந்து

❖

# ஊரார்

## எண்சீர் விருத்தம்

1

வாழவிடார் சாகவிடார் வாழ்வில் ஓர்நாள்
வகைகெட்டு வறுமையுறின் உதவ வாரார்;
ஏழைஎனில் எதுசெயினும் ஊரார் கூடி
இதுகுறையாம் அதுகுறையாம் என்று நம்மைத்
தாழவுரைத் தின்புறுவர்; செல்வன் என்ன
தகிடுதத்தம் செய்தாலும் தாளம் போட்டு
வாழவென்றே காக்கைபிடித் தலைவர் அந்தோ!
வாழ்கின்றார் மனிதரெனும் பெயரும் தாங்கி

2

என்குடும்பக் காவியத்தில் இலங்கும் ஒவ்வோர்
ஏடுகளைப் புரட்டுகிறேன் சிறிது கேண்மின்!
என்குடும்ப விளக்கினைநான் மணவா முன்னம்
எழிலரசி அவளோடு களவொ ழுக்கம்
நன்மையென ஒழுகிவரும் நாளில், ஊரார்
நவின்றவெலாம் புகல்வதெனில் பலநாள் ஆகும்;
வன்மைமிகு பழியுரைத்தார் பொய்கள் சொன்னார்
வகைவகையாய்த் தீமைகளை இழைத்தும் பார்த்தார்

3

நோய்வந்து பற்றியதால் சின்னாள் நங்கை
நொந்துமூன்று மிகமெலிந்து வெளியில் எங்கும்
போய்வந்து நடவாமல் இருந்தாள்; ஊரார்
"பொல்லாத ஒழுக்கத்தாற் கருப்பம் உற்றாள்
நோய்வந்த தெனச்சொல்லிக் கருவைக் கொன்றாள்
நூதனமாய்த் தற்கொலைக்கும் முயன்றாள்" என்று
வாய்வந்த படியெல்லாம் அளந்து விட்டார்,
"வகையறியா தோடிவிட்டாள்" என்றும் சொன்னார்

4

மற்றவர்கள் சொல்வதெலாம் கருதா தென்றன்
மனம்விரும்பி மணமுடிக்கத் துணிந்து விட்டேன்
கற்றவரும் மற்றவரும் சினந்து நோக்கக்
கைபிடித்தேன் பதிவுசெயும் தலைவர் முன்னே;
உற்றார்கள் ஊரார்கள் உறுமி னார்கள்
"ஒவ்வாதே சமுதாயப் பண்புக்" கென்று
சொற்றார்கள் "சாதிகுலம் போச்சே இந்தச்
சொல்லரிய கொடுமையினை எங்குக் கண்டோம்!"

5

என்றார்கள் அவ்வளவில் விட்டா ரோ? இத்
தெருவதனில் இருப்பதுவுங் கூடா தென்றார்;
கொன்றாற்போற் கொடுமைபல செய்தார்; மேலும்
குடும்பத்தில் நிகழ்கின்ற நன்மை தீமைக்
கென்றாலும் அழைப்பதில்லை வறுமை நோய்வந்
திடர்ப்படுத்தக் கடன்கேட்டேன் கொடுத்தா ரில்லை
"நன்றப்பா கலப்புமணம்" என்று சொல்லி
நகைத்தார்கள் பகைத்தார்கள் உள்ளம் நொந்தேன்;

6

"காதல்மிகு வாழ்வினையே முன்னோர் கண்டார்
கண்டதிலை சாதிமுறை, உயர்வு தாழ்வு
ஓதவிலை, சங்கத்து நூல்கள் சான்றாம்
உணர்ந்திடுவீர்" என்றுரைப்பர் தலைய சைப்பர்.
காதல்மணம் கலப்புமணம் செயலிற் காட்டக்
கருதிடினோ கரடிபுலி யாக மாறித்
தீதிழைப்பர் ஊரார்கள்; பேச்சில் மட்டும்
தீரரவர் செயலென்றால் அஞ்சிச் சாவார்;

7

நாட்டுநிலை என்வருவாய் துணைவி மேனி
நலமறிந்து நான்கைந்தாண் டான பின்னர்
வீட்டினிலே என்பிள்ளை தவழ்ந்து பேசி
விளையாட நினைத்திருந்தேன்; சாதி மாறி
நாட்டாரும் விரும்பாத கடவுட் கொவ்வாச்
செயல்புரிந்தான் நாத்திகத்தின் வழியிற் சென்றான்
கேட்டானோ நம்முரையை? பிள்ளைப் பேறு
கிடைத்ததுவா? கடவுள்செயல் என்றார் ஊரார்.

8

நல்லுடையால் அணிசெய்து மாலை வேளை
நானவளை உடனழைத்துப் பூங்கா செல்வேன்
வில்உளத்து மாந்தர்சிலர் மனம்வி யர்ப்பர்
வினைவிதைப்பர் அருகிலுளோர் செவிக டிப்பர்
நல்லதுவோ அழுக்காறு? வறுமை மிஞ்சி
நலிவுறுத்த நல்லாடை இலையேல் இந்தப்
பொல்லாதார் அப்போதும் விடவே மாட்டார்
புல்லனென்று கஞ்சனென்று புகல்வர் அன்றோ?

9

ஊராருள் இத்தகையர் இருப்பி னும்நல்
உள்ளத்தர் ஓரிருவர் இருப்ப துண்மை
நேராரும் விழைகின்ற ஒழுக்கம் வாய்மை
நேர்மையெனும் கொள்கையினர் மடமைக் கூட்டப்
சேராதார் சீர்திருத்த நோக்கங் கொண்டார்
செப்புவதைச் செய்திடுவார் ஊரார் கூற்றைப்
பாராதார் உதவுகின்றார் என்றன் வாழ்வில்
பக்கமிருந் துடன்பிறந்த அண்ணு வானுர்

10

காதலனைக் கோவலனை மதுரை வேந்தன்
கள்வனெனக் கொலைசெய்தான் என்று கேட்டு
வேதனையில் மூழ்கிஉயர் செல்வ வாழ்வை
வெறுத்துமணி மேகலையும் தானும் தூய
மாதவனைச் சார்ந்துமனத் துறவு பூண்ட
மாதவியை ஊரார்கள் தூற்றி னுர்கள்
கோதுரைகள் செவிவிழுந்தும் புறக்க ணித்தாள்
குறிக்கோளில் வென்றிகண்டாள் கற்பின் செல்வி

11

'என்னோடு சினந்தில்லாள் அயலான் வீட்டில்
இருந்ததனுல் மனமொப்பி அவளை மீண்டும்
என்னோடு வாழவிடேன் மானம் மேலாம்'
இவ்வண்ணம் ஊராருள் ஒருவன் அங்குச்
சொன்னுன்அவ் வுரைகேட்டி ராமன் "என்னைச்
சுட்டினனோ? கடலிலங்கைச் சிறையி ருந்த
மின்னுளைக் கொடுவந்தேன்" எனவ ருந்தி
மீண்டுமவள் வெங்கானம் போக விட்டான்

## 12

மெல்லியலாள் தன்மனையாள் எனவும் எண்ணான்
மேலுமொரு பதிலோண் டவளும் கானில்
அல்லலடைந் தாளென்றும் கருதல் செய்யான்
ஆரணங்கு கருவுற்றாள் எனவும் பாரான்
மல்குசின மேகொண்டான் ஊரார் சொன்ன
மாற்றமொன்றே மதித்தானச் சனகன் பெண்ணைச்
சொல்லரிய துயரோடு கானம் ஏகச்
சொன்னான்அக் குடும்பத்தில் பிரிவும் கண்டான்

## 13

உரைத்திடுவர் ஊரார்கள் தங்க ருத்தை
ஒன் றுக்கும் செவிசாய்த்தல் கூடா தன்னோர்
உரைப்பதனைச் செவிமடுத்தால் குடும்ப வாழ்வில்
உலைவுவரும் உண்மையிது; புளியைப் பாலில்
கரைக்காதீர் பிறருரையைக் கேட்டு வாழ்வில்
கலங்கிமிகத் துயருழந்து சாக வேண்டா
குரைக்கின்ற ஒலிகேட்டுக் கதிரோன் வானில்
குறுகுவதற் கஞ்சுவனோ? அவன்போல் வாழ்வீர்

## 14

உரைத்தவெலாம் ஆண்பாலர் செயலே ஆகும்
ஊராருள் பெண்ணினமோர் அங்கம் அன்றோ?
மறைப்பின்றி அவர்செயலும் சொல்லு கின்றேன்;
மாமியிடம் சென்றோர்பெண் அவள்ம னத்தைக்
கரைத்திடுவாள் மருமகளைக் குறைகள் சொல்வாள்
'கண்டபடி உனைவைதாள் மதிக்க வில்லை
விறைப்போடு திரிகின்றாள் அடக்கம் இல்லை
வீதியெலாம் கைகொட்டிச் சிரிக்கு' தென்பாள்

15

மற்ெருருநாள் மருமகளைக் காண்பாள் 'உன்றன்
மாமியென்ன இப்படியா இருப்பாள்? உன்னைப்
பெற்றவள்போற் கருதாமல் தாழ்த்தித் தாழ்த்திப்
பேசுகிருள் உடையுடுத்த நகைகள் பூணச்
சற்றுமவள் பொறுக்கவிலை கணவன் உன்கைச்
சரடாக உள்ளாளும் குடும்பச் செய்தி
மற்றவர்பால் இவ்வண்ணம் பேசல் நன்ருே?
மருமகள்தான் பணிப்பெண்ணே?' என்று சொல்வாள்

16

இப்படியே இருபாலும் கோளே பேசி
இணைந்திருந்த குடும்பத்திற் பகையை மூட்டித்
தப்பறியாக் கணவனுளம் நோகும் வண்ணம்
சச்சரவே நிறைத்திடுவாள், ஊரார் சொல்லை
அப்படியே நம்புவதால் விளையும் தொல்லை
அளவிலவே ஆதலினல் ஆய்ந்து செய்தால்
தப்பெதுவும் நேராமல் அன்பாய் வாழ்ந்து
தரணிபுகழ் மாமிமரு மகளாய் வாழ்வீர்

17

ஆண்டுபல ஆனுலும் நரையே யின்றி
அழகுகெடா திளமையுடன் விளங்க வேண்டின்
பூண்டொழுகும் அன்படக்கம் அறிவு சால்பு
பூணெனக்கொள் சான்ருேராய் ஊரார் வாழ
வேண்டுமென எங்கள்பிசி ராந்தைப் பேரோன்
விளம்பினனவ் வுரைபோற்றி மக்கட் பண்பு
தாண்டாமல் வாழ்ந்திடுக ஊரார் எல்லாம்;
தழைத்திடுமே அன்புமகிழ் வின்பம் யாவும்!

# பணியாள் வேண்டாம்

எண்சீர் விருத்தம்

1

குடும்பவிளக் கெனும்நூலைக் கொணர்க என்று
குயில்மொழியை என்துணையைப் பாடு கென்றேன்
'விடும்அத்தான் அவ்வெண்ணம்; பக்கத் துள்ளோர்
விரும்பவில்லை நாம்சிரித்துப் பேசும் பேச்சை;
சுடும்படியாய்ச் சொல்கின்றார் எதிர்த்த வீட்டார்,
துணைவரொடு சமமாகப் பழகல் கூடக்
கொடுங்குணமென் றறைகின்றார் தெருவி லுள்ளார்;
குடும்பமென்ன இருட்சிறையா' என்று சொன்னாள்

2

அடிபேதாய் ஊரார்கள் அப்ப டித்தான்
ஆர்ப்பரிப்பர், அருகினில்வா! அவர்கட் காக
மடிவதுவோ நமதின்பம்? அன்பும் சேர்ந்து
மாள்வதுவோ? இலக்கணமே மொழியைக் காக்கும்
அடிவேராம் அதுபோல்நம் குடும்பத் திற்கும்
அன்பொன்றே அடிப்படையாம், பண்பும் ஆகும்;
கடிவாளம் அறுந்தவர்தம் பேச்சைக் கேட்டுக்
கடிந்துரையேல் அன்பென்னும் இலக்க ணத்தை

3

என்றுரைத்தேன்; 'நன்றத்தான் இந்த ஊரார்
இயல்பெனக்குப் பிடிக்கவிலை, கோவி லுக்குச்
சென்றிருந்தேன் குழாயடியில் நின்றி ருந்தேன்
செழும்புனலில் நீராடச் சென்றேன் அங்கு
நின்றிருந்த பேரெல்லாம் பிறர்கு டும்ப
நிலைவொன்றே கொண்டுகுறை கூறிக் காலம்
கொன்றிடுவர். அப்பப்பா! நரைத்து மூத்துக்
கோலூன்றும் கிழங்களுமா பேச வேண்டும்?'

4

தேன்சுளையே! அங்கெல்லாம் இனிமேற் செல்லேல்
தேர்ந்தெடுத்துப் பணியாளொன் றமைப்பேன்
[என்றன்
மான்விழியே! அடுக்களையும் விடுத்து வந்து
மகிழ்ந்திருப்போம் எனப்புகன்றேன்; 'நானி ருக்க
ஏன்பணியாள்? நன்றத்தான் உங்கள் எண்ணம்!
எழுந்தோடிக் காய்நறுக்கி உங்கட் கென்று
நான்சமைத்துப் பரிமாற, நீங்கள் உண்டு,
நன்றுநன்று சமையலெனக் கூறும் போது

5

நான்காணும் இன்பத்துக் குவமை யுண்டோ?
நம்மன்பிற் கிடையூறும் பணியாள் வேண்டாம்;
ஊன்பெருத்தே உதியமரம் ஆக மாட்டேன்,
உலைவாயை மூடவொரு மூடி யுண்டு
கூன்காணும் உள்ளத்தார் ஊரார் வாய்க்குக்
குவலயத்தில் மூடியிலை ஆத லாலே
தேன்காணும் இசைபாடி என்றும் போலத்
திகழ்ந்திடுவோம் வாருங்கள் அத்தான்' **என்றாள்**

# சிற்றூர்ச் செலவு

## எண்சீர் விருத்தம்

1

பட்டணத்தில் என்மனைவி பிறந்து வாழ்ந்தாள்;
பகலுணவு முடித்துப்பின் படுத்தி ருந்தேன்
தட்டெடுத்து வெற்றிலையை மடித்தெ டுத்துத்
தந்தின்பம் சேர்த்திருந்தாள், பாளை நீக்கி
விட்டெழுந்த நகைஉதட்டைப் பற்றி "நாளை
விடியலுக்குள் என்னூர்க்குச் செல்வோம்" என்றேன்
"கட்டழகி எனச்சொல்லிக் கட்டி முத்தம்
கணக்கின்றித் தந்தாலும் வாரேன்" என்றாள்

2

'ஏன்'என்றேன் 'பட்டிக்கா' டென்று ரைத்தாள்
"என்னைஉனக் களித்துள்ள அன்னை வாழும்
தேனெனவே இனிக்கின்ற என்றன் ஊரைத்
தீதுரைத்தாய் அதனலத்தை உணரா திங்கே
காணுண்டோ? உணவுவிளை களந்தான் உண்டோ?
காக்கின்ற தாயகத்தைக் காண எண்ணி
நானுன்னை அழைக்கின்றேன் வருக!" என்றேன்
'நடப்பதற்கு முடியாதே' என்றாள்; பின்னர்



6

எப்படியோ ஒருப்பட்டாள் விரைந்து செல்லும்
புகைவண்டி ஏறிப்போய் ஊரை நோக்கித்
தப்பெதுவும் நேராமல் நடந்து சென்றோம்
தழைத்துள்ள வயல்வரப்பில் நடக்குங் காலை
"அப்பப்பா நல்லவழி" என்று சொல்லி
அகம்நொந்து முகஞ்சுழித்து நடந்து வந்தாள்;
'இப்படிவா' என்றவள்கை பற்ற 'ஐயோ!'
என்றழுதாள் என்னென்று பதறிக் கேட்டேன்

4

மென்காலில் முள்தைத்த தென்ன, நெஞ்சில்
வேல்குத்திக் கிழித்ததுவே ஒன்றும் பேசா
தென்காதல் மிகுதியினால் குனிந்து முள்ளை
எடுத்தவளை "வருந்தாதே மன்னிப் பாய்நீ
என்மீது சினந்தனையோ? இனிமேல் இங்கே
வருமெண்ணம் இல்லைஇல்லை" என்றேன்; பாவை
"என்னென்ன சொல்லுகிறீர் அத்தான் நீங்கள்
இருக்கின்ற இடமேதான் இன்பப் பூங்கா!"

5

என்றெழுந்து நின்றுகொண்டாள் ஒடிந்த உள்ளம்
இனிதுமகிழ்ந் தெழுந்துவழி நடந்தேன் பின்னர்
குன்றனைய தோள்பற்றிக் கெந்திக் கெந்திக்
குளிர்மொழியாள் நகையாடி நடந்தாள்; "கண்ணே!
இன்றெனது மனம்நொந்து பதறி விட்டேன்"
என்றவுடன் "ஆடவரே அப்ப டித்தான்
ஒன்றுமிலா தஞ்சிடுவார்" என்று சொன்னாள்
உள்ளங்கள் பரிமாறிச் சென்றோம் மேலும்.

# எந்நாளோ ?

## எண்சீர் விருத்தம்

1

மனையாளை இல்லிருத்தி மாலை ஓர்நாள்
மனஅமைதி பெறஎண்ணிச் சென்றேன்; நல்ல
'சினிமா'என் றுரைத்தார்கள்; அதனால் நானும்
சிறிதெண்ணி உட்புகுந்தேன்; தொடங்கி னார்கள்
மனநிலையை முகக்குறிப்பால் உணர்த்தும் அந்த
மங்கையைப்போல் நடிப்புலகில் கண்ட தில்லை!
அனநடையும் அவள்குரலும் படப்பி டிப்பும்
அத்தனையும் புகழ்ந்தார்கள் ஆங்கி ருந்தோர்

2

கலையுண்டு நடிப்புண்டு நடன முண்டு
கண்கவரும் அழகுண்டு; நெஞ்சை அள்ளும்
நிலையில்லை பேச்சொன்றும் புரிய வில்லை
நினைப்பெல்லாம் எங்கெங்கோ சென்ற தங்குச்
சிலைஎன்ன இருந்தஎனை மணியின் ஓசை
செவிபுகுந்து கிளப்பிற்று வீடு சென்றேன்;
'தலைவலி'என் றுரைத்தேன்நான்; 'என்னை விட்டுத்
தனியாகச் சென்றீரே வேண்டும்' என்றாள்

3

"இல்லையடி! புரியாத மொழிப்ப டத்தை
இனிதெனநான் பார்த்ததனல் வந்த நோவு!
நல்லஇயல் தமிழ்மொழியின் நிலையை எண்ணின்
நைந்துருகிப் போகுதடி எனது நெஞ்சம்;
சொல்லரிய தாய்மொழியைப் பிழைகள் நீக்கிச்
சொல்லறியா எழுதறியாத் தமிழர் நாட்டில்
புல்லறிவால் பிறமொழியர் படத்தை ஏனோ
புகுத்துகிறார்? என்னென்பேன் அவர்தம் போக்கை

4

படம்பிடிக்கும் கூட்டத்தார் தகிடு தத்தம்
பண்ணுகிறார்; அறிவிருக்க அன்னார் மூளை
இடங்கொடுக்கும் நாளென்றோ? கலையும் வாழ்வும்
இணைந்திருக்கும் படங்காணும் நாள்தான் என்றோ?
மடமையினைத் தொலையாரோ?" என்றேன் 'பேச்சு
மடைதிறந்து விட்டீரோ? உறங்கும் நேரம்
கடமையினைச் செய்திடுவீர்!' என்றாள் தூக்கம்
கண்கவ்வ அவளென்னைக் கவ்விக் கொண்டாள்

# குளிர் நிலா

நேரிசை ஆசிரியப்பா

திருமணம் என்ற தேன்மொழி என்றன்
செவியில் வார்த்தான் சிறிய தம்பி;
அவர்தான் எத்துணை அழகோ! என்னை
அணைத்தணைத் தின்பம் அருத்துவர், பின்னர்
எழிலுறு மழலை இன்பக் குழவி
என்கைத் தருவார், இன்பம்! இன்பம்!
எனமனக் குதிரை ஏறிச் சென்றேன்;

* * * *

கண்ணே என்றார் கடிதினில் திரும்ப
அவரே நின்றார்; அத்தான் என்றேன்,
இன்பச் சூட்டால் இறுக அணைத்தார்,
இதழைக் கொய்தார், எடுத்துச் சொல்ல
இயலா நிலையில் இருந்த என்னைத்
தெரியா உலகம் தெரியச் செய்தார்,
அடடா இன்ப ஆற்றினில் மிதந்தோம்,
கரையே இல்லை காதல்! காதல்!!

* * * *

அணைப்பால் மட்டும் ஆறுதல் இல்லை,
துணைவர் தந்த தோள்தோய் இன்பச்
சின்னம் இல்லை; செருநரும் விழையும்
செயிர்தீர் செல்வன் சிந்தும் சிரிப்பை
அள்ளிப் பருக அவாவிற் றுள்ளம்
இளம்உடல் தீண்ட இன்சொற் கேட்கத்
துடிதுடித் திருந்தேன்; துணைவரும் நானும்
புண்ணியத் தலங்கள் புக்குநீர் மூழ்கியும்
புண்ணியம் இல்லை; புதல்வற் பேறினி
உண்டோ என்றோம் உள்ளூர்க் கணியர்
ஏடுகள் புரட்டி இல்லை என்றார்,
இடிந்ததென் உள்ளம் இருண்டதென் வாழ்வு
மகப்பே றில்லா மலடோ அந்தோ!
எனச்சின் னாட்கள் ஏங்கி யிருந்தேன்.

* * * *

திரைகடல் கடந்து செல்வந் திரட்டப்
பிரிந்தனர்; நானோ பெண்மையின் இயல்பால்
வருந்தி மெலிந்தேன்; வந்தனர் ஒருநாள்;
எழில்மணி மாட இருப்பில் இருந்தோம்,
குளிர்எனை அவர்பாற் கொண்டு சேர்த்தது,
நடுங்கிய என்றன் நாணம் காத்திடக்
கணியர் கூற்றைப் பொய்யெனக் காட்டிட
உள்ளம் நைக்கும் உறுதுயர் தீர்ந்திட
இன்பக் குளிர்நிலா இருள்முகில் நுழைந்த(து);
என்முகம் அவர்தம் மார்பிற் புதைந்தது;
மீண்டும் திங்கள் மேலெழுந் தொளிக்கதிர்
வீசிச் சிரித்தது; விடியலைக் கண்டோம்;

* * * *

உணவு வெறுத்தேன் உமட்டலைக் கண்டேன்
புளிப்பில் விருப்பம் பூத்தது, வாழ்வில்
இனிப்பு மலர்ந்திட இன்பங் காய்த்தது
காதற் கனியைக் கண்டேன்
எண்ணம் பலித்த(து) இனியிலை துயரே.

# குழந்தை இன்பம்

எண்சீர் விருத்தம்

1

"**பா**ய்ந்தோடும் அருவிமலைப் பக்க மெல்லாம்
பல்வண்ணப் பூக்களிலே மென்மைத் தென்றல்
தோய்ந்தோடி வந்துடலில் வருடும் போது
சொல்லரிய இன்பமன்றோ அருமை அத்தான்!
ஆய்ந்தெடுத்த யாழெடுத்துப் பாடு கின்றேன்
அருகினிலே வாருமதோ பாரும் வானில்
வாய்ந்தொளிரும் வெண்ணிலவு கூட்டும் இன்பம்!
வரம்புண்டோ?" என்றுரைத்தாள் துணைவி நல்லாள்

2

வெண்முகில்சூழ் மலைமுகடும் முகட்டி னின்று
வீழ்ந்ததிரும் அருவிகளும் வண்ணப் பூவால்
கண்கவரும் செடிகொடியும் கொடிகள் தாவிக்
காட்டுகின்ற மரத்தொகையும் தென்றற் காவில்
பண்சொல்லும் வண்டுகளும் மாலை வானில்
படர்கின்ற செந்நிறமும் காதல் நங்காய்!
விண்மதியும் தருமின்பம் என்றன் பிள்ளை
விளையாடும் காட்சிதரும் இன்பம் ஆமோ?

3

ஆய்ந்தெடுத்த இசைவல்லார் செய்த வீணை
ஆர்த்தெழுப்பும் இன்னொலியும், கானில் நன்கு
காய்ந்திருக்கும் வேய்ங்குழலில் தோன்றும் பண்ணும்,
கடும்பாம்பும் மெய்ம்மறந்து நிற்க இன்பம்
தோய்ந்திருக்கும் படியூதும் குழலும், இன்னும்
துன்பமெலாம் துடைக்குமிசைக் கருவி யாவும்
பாய்ந்தளிக்கும் இன்பமெலாம் என்றன் பிள்ளை
பரிந்துளரும் மழலைதரும் இன்பம் ஆமோ?

4

"அப்படித்தான் சொல்லிடுவீர்! மாடி மீதில்
அன்றொருநாள் குறுந்தொகைப்பாட்டொன்றுசொல்லி
ஒப்புண்டோ இதற்கென்றீர்! அதனோ டென்னை
உவமித்துக் கேலிசெய்தீர்! உண்ண வாரும்
எப்பொழுதும் இதுதானா? என்றால் நூலில்
எழும்சுவையால் சுவையுணவை மறந்தேன் என்பீர்!
எப்பொழுதே னும்விளக்கை அணைக்க வந்தால்
இருஇருநூல் இன்பம்உயர் வென்பீர் அத்தான்!"

5

"நானூற்றுப் புறப்பாடல் சொல்லு கின்ற
நம்முன்னோர் செய்தபெரும் வீரப்போரும்
தேனூற்றோ எனக்கருதும் அகநா னூறு
செய்யகுறுந் தொகைகூறும் காதல் வாழ்வும்
கால்நூற்றோ டைந்தாண்டின் அகவை யில்நான்
கண்டசில காவியமும் தந்த இன்பம்
மானோட்டும் விழியுடைய கண்ணே! என்றன்
மகவுதரும் இன்பத்திற் கீடா தாமோ?"

6

"போகட்டும்; இசைபாடி அணையின் மீது
புகழ்ந்தீரே நானின்பம் தந்த போது!
வேகட்டும் உணவென்றால் சேலை பற்றி
விளையாடிப் பெற்றீரே அந்த இன்பம்,
வேகத்தோ டென்னிதழைச் சுவைக்கும் போது
விளைந்தசுகம் எப்படியோ? சொல்வீர்!" என்றாள்
"ஆகட்டும்" எனச்சொல்லி அவள்கை பற்றி
அருகிருத்தி உயிர்க்கொழுந்தே! மஞ்சம் ஏறி

7

நரம்பேறும் யாழ்மீட்டிக் காதல் கூட்டி
நல்லிசையால் மகிழ்வூட்டி இருக்கும் போதும்
மரஞ்சேர்ந்த மாதுளைபோல் தோன்றும் உன்றன்
மார்பகத்தால் பேரின்பம் தந்த போதும்
சுரந்தூறும் உன்இதழைச் சுவைக்கும் போதும்
சொல்லரிய இன்பத்தைக் காணு கின்றேன்
இருந்தாலும் என்குழந்தை மெய்யில் தாவி
இளங்கையால் தொடுகின்ற இன்பம் ஆமோ?"

8

என்றுரைத்தேன்; "போங்களத்தான்!" என்று சொல்லி
எழுந்தோடி ஓர்புறத்தே ஊடி நின்றாள்;
சென்றழைத்தேன் திரும்பாமல் "ஊஹூம்" என்றாள்.
"செவ்விதழாய்! ஏனிந்தக் கோபம்?" என்றேன்;
"நன்றுநன்று தாழ்வென்றீர் என்னின் பத்தை!
நானெதற்காம்"? எனப்புலந்தாள்; முகத்தைத்
தொட்டேன்
கன்றியகண் ணீர்சிந்தப் பதறி விட்டேன்
கதறியழும் மகவொலியால் விழித்துக் கொண்டேன்

# தோற்றுவிட்டேன்!

தாழிசைகள்

1

**பேரா**ர்க்களத்தில் எதிர்நிற்க எவருங் காணேன்
பூரித்தேன் வீரத்தாற் செருக்குங் கொண்டேன்
தார்க்கழுத்தில் வன்புயத்தில் முகத்தில் எங்கும்
தளிரடியால் எனைமிதித்தாய் தோற்று விட்டேன்

2

இசைத்தமிழில் எனைப்போலப் பாடு தற்கே
எவருமிலர் எனக்கருவம் பூண்டி ருந்தேன்
வசைக்கிலக்கே ஆகினேனஒப் பில்லா நின்றன்
வாய்மழலைத் தேனிசைக்குத் தோற்று விட்டேன்

3

ஈரமொரு சிறிதுமிலேன் வலிய நெஞ்சேன்
எவர்பாலும் கருணைமொழி புகலேன் அன்பின்
ஓரமதுங் கண்டறியேன் மறம னத்தேன்
உன்விழியால் மனமுருக்கி வென்று கொண்டாய்

4

பணிவறியேன் அடக்கமிலேன் சான்றோர் என்பாற்
பகருமொழி மதித்தறியேன் வலிய னேனும்
பணிகின்றேன் உன்முன்பு நின்மொ ழிக்குப்
படிகின்றேன் என்மதலாய்! தோற்று விட்டேன்

5

உன்தாயின் விழிக்கடைக்கோர் ஒப்பே யில்லை
உலகிலென நினைந்திருந்தேன் களிப்புங்கொண்டேன்
என்வாயை அடைத்துவிட்டாய் கவலை தோயா
எழில்மலருன் கருவிழியால் தோற்று விட்டேன்

6

இலக்கணநூல் இலக்கியநூல் நிகண்டு யாவும்
எளிதாகக் கற்றுணர்ந்தேன் பெருமை கொண்டேன்
சொலக்கருதி நாஉந்த இதழின் ஓரம்
சுழல்மழலைப் பொருள்தேறேன் தோற்றுவிட்டேன்

7

எழுதரிய ஓவியமே! என்றன் நெஞ்சில்
எழுந்துநடம் செயுந்தேவே! எங்கள் காதற்
பழந்தந்த சுவையே! எப் படியோ என்னைப்
பணிவித்து நல்லாட்சி செலுத்து கின்றாய்!

# எம்மவர் தந்தார்

### நிலைமண்டில ஆசிரியப்பா

மாலைப் பொழுதில் மங்கிய ஒளியில்
வேலை முடித்து விரிகதிர்ச் செல்வன்
மறைந்தனன்; என்னை மணந்தவர் வந்தார்
கரைந்திடு புள்ளினம் கண்ணயர்ந் திருந்தன;
மேலுயர் மாடம் மீதினில் ஓரறை;
பாலொளி சிந்தப் பார்த்தது நிலவு;
பஞ்சணை அமர்ந்தேன் பக்கத் தமர்ந்தார்
அஞ்சன விழியை அவர்பாற் செலுத்தினேன்;
பசியோ டிருந்தவர் பாய்ந்து வந்தெனை
அசைய விடாமல் அள்ளி விழுங்கினார்;
இன்பக் கடலுள் இருமீன் ஆயினம்!
அன்பில் திளைக்கும் அந்நல் வேளை
மின்விடு விளக்கொளி மெல்லென அசையச்
சன்னல் வழியே சார்ந்தனை தென்றல்!
உள்ளமும் உடலும் சிலிர்த்தன; காதற்
கள்ளுண் டின்பக் கற்பனை உலகில்
இருந்திடும் எம்மை மறந்திடச் செய்தனை!
பறந்தனம் விண்ணிற் பறவைக ளாகி;

இந்த விதம்பல இரவுகள் கழிந்தன;
அந்தநன் னாளெலாம் இன்பமீந் தனையால்
நல்லை நல்லைஎன நவின்றேன் பலகால்;
இன்றோ துணைவர் ஈங்கிலர்; அதனாற்
கொன்றா லன்ன கொடுந்துயர் தந்தனை!
நல்லை அல்லைஎன நன்குணர்ந் தேனே;
கூர்ந்து நோக்கின் குற்றம்நீ புரிந்திலை;
சேர்ந்தவர் பிரிந்தார் செய்தனர் துன்பம்
அதற்கென் செய்குவை? ஆய்ந்து பார்க்கின்
நல்லையும் இல்லை அல்லையும் இல்லை
"தீதும் நன்றும் பிறர்தர வாரா"
எனவாங்கு
ஓதிய பொருண்மை உணர்ந்தேன் இன்றே
இரண்டும் ஒருங்கே எம்மவர் தந்தார்;
ஒருகுண மில்லாய் ஏகுதி நீயே!

❖

# முகில்விடு தூது

கலிவெண்பா

**வா**ன வெளியரசே! வள்ளல் பெருமனம்போல்
தானம் பொழிகின்ற தண்முகிலே! காற்றைப்
புரவியெனக் கொண்ட புரவலனே! எங்கே
விரைகின்ருய்? ஒன்று விளம்புகின்றேன் சற்றேநில்!
ஈர மனமுடையாய் இவ்வுலகில் எப்பொருளும்
சோர **வி**டமாட்டாய் என்றுன்னைச் சொல்கின்ருர்
சோரவிடாய் என்னுந் துணிவால் மொழிகின்றேன்
ஆர அமர அரிவையுரை கேட்டிடுவாய்!
அன்ெருருநாள் என்துணைவர் ஆற்றிப் பிரிந்துசென்ருர்
இன்றுவரை அஞ்சல் எழுதவில்லை; நாடோறும்
அஞ்சலார் இவ்வழிதான் ஏகிடுவார் ஆனலும்
வஞ்சி எனதகத்து வாயிற் படிமிதியார்
கற்றைகற்றை யாய்க்கடிதம் கையில் குவிந்திருக்கும்
பற்ருக் குறைக்கந்தப் பையிலொரு கூடையுண்டு
ஐயா பெரியவரே அஞ்சலுண்டோ? என்பேன்நான்
கையால் விரித்துரைப்பார் கண்கலங்கி நின்றிருப்பேன்;

எத்தனைநாள் இப்படியே இன்னலுற்றுச்செத்திடுவேன்;
மெத்தவுனை வேண்டுகிறேன் மேவியிதைக் கூறிடுவாய்
வாடகை கேட்டுமிக வாட்டுகிறார் வீட்டார்கள்,
தேடரிய கல்வி தெரிவிக்கும் பள்ளிக்குச்
சம்பளம் வேண்டுமென்று சாற்றுகின்றான் என்பிள்ளை;
கம்பளம் விற்றுக் கடன்கழித்தேன்; கையிருப்போ
ஒன்றுமில்லை; இத்தகைய ஊறு மிகவருத்தக்
கன்றியுடல் உன்போல் கருத்தேன்; விழிசிந்தும்
நீர்த்துளியோ நின்னைப் புறங்கண்டு விட்டதுபோல்
ஆர்த்து மிகுகின்ற தையாவோ! என்னவரைக்
காணின் அருள்கூர்ந்து காசனுப்பச் செப்பிடுவாய்;
ஆணி இருந்தால்தான் அச்சுவண்டி மேலோடும்;
மெய்யில் உயிர்நிற்க வேண்டுமெனில், பள்ளிசெலும்
பையன் பயில்கின்ற பாடம் வளரவெனில்
காசுபணம் வேண்டுமெனக் காதலர்பால் நெஞ்சுணர்ந்து
பேசு; பிழையாகப் பேசி வருத்தாதே,
காதல் முகந்தன்னைக் கண்டு பலநாட்கள்
ஆதல் அவரறிவார்; ஆசைக் கணவரைத்தான்
கண்டு மகிழ்வுபெறக் கண்துடிக்கும் செய்தியையும்
விண்டு திரும்பு விரைந்து.

# இழந்த காதல்

## எண்சீர் விருத்தம்

**புகழணங்கு**

1

சிந்தனையாம் சோலைதனில் தனித்தி ருந்தேன்
சிவந்தமுகப் பெண்ணொருத்தி அழுது நின்றாள்;
நொந்திருப்ப தெதனாலோ? நின்பேர் யாதோ?
நுவலுதியோ? எனப்பரிந்து வினவி னேன்யான்;
"இந்தவுல கெனக்கிழைக்கும் தீங்கி னைத்தான்
என்னென்பேன்! மெய்க்காதல் தீய்ப்ப தற்குப்
புந்தியிலாச் செயல்செய்து மகிழ்ந்த தந்தோ!
புழுங்குகிறேன் என்காதல் இழந்த தாலே

2

என்பெயரைப் புகழென்று புவியோர் சொல்வர்,
எந்நாளும் பொதுத்தொண்டு புரிந்து வந்த
அன்பனைநான் காதலித்தேன்; பழிஎன் பாளை
அவனுக்கே உலகத்தார் மணமு டித்தார்;
தன்னலமே விழையுமொரு செல்வன் என்னைத்
தனக்குரிமைப் பொருளாக்கப் பணத்தை வீசி
என்னலத்தை நுகர்வதற்கே சுற்று கின்றான்
இவ்வுலகும் சரிஎன்றால் யாது செய்வேன்"

**கவிதைப்பெண்**

3

பார்செல்லும் நெறிநினைந்து செல்வேன் முன்னர்ப்
பதறிவரும் மற்றொருத்தி நிலையைக் கண்டு
யார்நங்காய் நீஎன்றேன்; "என்றன் வாழ்வை
யாதென்பேன் ஐயாவோ! கவிதை என்று
பேர்சொல்லி எனைஅழைப்பர்; கற்றோன் தன்னைப்
பெருந்துணையாய்க் கொளநினைந்தேன்; ஆனால் கல்வி
சீர்தளைகள் ஏதொன்றும் அறியாத் தீய
சிறுமகன்வந் தென்னருகே சுற்று கின்றான்

4

நான்விரும்பாக் குறிப்புணர்ந்து விலகா னாகி
நரிச்செயலால் வன்முறையால் நாடு கின்றான்
கூன்விழுந்த செய்திஇதழ்ப் பொறுப்பை ஏற்ற
கொடுமனத்தர் அவனுக்கே உடந்தை யானார்;
நான்விழைந்த கலைஞனையோ புறக்க ணிப்பாம்
நங்கைக்குத் துணையாக்கி மகிழ்தல் கண்டேன்
ஏன்பிறந்தோம் இவ்வுலகில் எனநி னைந்தே
இரங்குகிறேன் காதலிழந் தேங்கு கின்றேன்

**செல்வமகள்**

5

கவியணங்கின் துயருரையைச் செவிம டுத்துக்
கலங்குகிற பொழுதிலொரு நங்கை வந்து
"செவிமடுப்பாய் என்னுரையும்" என்று கண்கள்
சிந்துகிற நீர்துடைத்தாள்; 'சொல்க' என்றேன்;
"புவியரங்கில் செல்வமெனப் புகல்வர் என்னை,
புரட்சிசெயும் எழுத்தாளன் தனைம ணந்து
தவிமனத்துக் காறுதலைத் தரநி னைந்தேன்
தப்பியதால் என்காதல் துயரங் கொண்டேன்

6

அவனுக்கோர் பெண்பார்த்தார் வறுமை என்னும்
அரிவைதனை மணமுடித்தார் துயர்கொ டுத்தார்;
தவறுக்கே தலைமகனாய்ப் பொய்கள் சொல்லித்
திருடுவதே தன்தொழிலாய் ஈயா நெஞ்சால்
இவறுகின்ற ஒருமகன்வந் தெனைக்க வர்ந்தே
இல்லறத்தில் வாழ்வதற்கு மிகவி ழைந்தான்
சுவருக்குள் வைத்திருந்து காக்கின் றான்நான்
சுவைக்கின்ற காதலிழந் தேங்கு கின்றேன்

**வீரச்செல்வி**

7

காதலுக்குத் தரணிதரும் பரிசை நெஞ்சில்
கருதிமனம் வெதும்புகிற வேளை தன்னில்
சாதலுக்குத் துணிந்தொருத்தி முயல்வாள் தன்னைச்
சந்தித்தேன்; 'உனக்கென்ன நேர்ந்த தம்மா!
ஓதுதற்கு மனமுண்டோ? உரைப்பாய்' என்றேன்;
"உரைப்பேன்" என் றவள்துயரை விரித்து நின்றாள்;
"ஏதமிலா வீரமெனப் பெயரும் கொண்டேன்
எடுப்பார்கைப் பிள்ளைஎன வளர்ந்தேன் நானும்

8

மோதுகின்ற எப்பகைக்கும் அஞ்சா நெஞ்சன்
முரணாத கொள்கைப்பற் றுள்ளான் தன்னைக்
காதலித்தேன்; கொள்கையிலாப் பச்சை யோந்திக்
கருத்துடைய ஒருவற்கு மணமு டித்தார்;
பேதலித்தேன், காதலற்கோ இடும்பை என்னும்
பெண்ணொருத்தி துணையானாள்; பாழும் பாரில்
சாதலைத்தான் மேற்கொண்டேன்" என்று ரைத்தாள்
சலித்துப்போய்ச் சிந்தனையைக் கலைத்து விட்டேன்

# கவிதைப் பெண்

எண்சீர் விருத்தம்

1

உணவில்லை உடையில்லை என்று வாட்டும்
ஓயாத கவலையில்லை; அந்த நாளில்
மணல்நின்று கடல்கண்டேன் வானில் நிற்கும்
மதிகண்டேன் மலர்கண்டேன் வயல்கள் கண்டேன்
தணல்கூரும் கதிர்கண்டேன் அங்கங் கெல்லாம்
தணியாத காதலுடன் கவிதை என்னும்
அணங்கிருந்து புன்னகைத்துக் கடைக்கண் ணோக்கால்
அருகழைப்பாள் பேசாமல் நானி ருப்பேன்

2

இதழ்விரித்துத் தென்றலெனப் பாட்டி சைப்பாள்
எழில்மயிலாய்த் தோகைவிரித் தாடி நிற்பாள்
விதவிதமாய் நிறங்கொண்ட துகிலு டுத்து
விளையாடிச் செவ்வானில் காட்சி நல்கப்
புதுமாலைப் பொழுதாகி நின்றி ருப்பாள்
பூமணத்தை வீசிடுவாள் மயங்கி ருட்டில்
மதிமுகத்தைக் காட்டிடுவாள் எனைம யக்கி
வந்தணைப்பாள் இன்பத்தைக் கண்டு ணர்ந்தேன்

## 3

உயிராகி உணர்வாகி என்ன கத்தே
ஊடாடிச் சொல்லரிய மகிழ்வ ளித்துச்
செயிரேதும் இல்லாத காதல் கொண்டு
சேர்ந்துறைந்தாள்; சின்னாளில் செம்பொற் றாலிக்
கயிறதுவால் பெண்ணொருத்தி மனைவி யானாள்
இல்லறத்துக் கடன்பலவும் முறையாய்ப் பேணி
வயிறுநிறை செயலொன்றே தலையாய் எண்ணி
வாழ்ந்தேன்நான் ஆயினுமோர் சுவையே யில்லை

## 4

மனஞ்சலித்துக் கடற்கரையிற் சோர்ந்து நின்றேன்
மனங்கவர்ந்த கவிதைப்பெண் வந்து நின்றாள்;
எனைமயக்கி ஏகிவிட்ட எழில ணங்கே
என்துயரம் அறியாயோ? மற்றொ ருத்தி
தனைமணந்தேன் எனநினைந்தோ சென்று விட்டாய்?
தவிக்கின்றேன் உனைக்காண அருகில் வாவா!
எனைமறத்தல் சரியாமோ? முறையோ? என்றேன்
"என்னன்பா! உனைமறவேன் உண்மை
சொல்வேன்

## 5

உன்மனைவி பணிவிடையில் உனக்குப் பாவை
உவந்தளிக்கும் இன்பமதில் மதலை நல்கும்
இன்னமுத மழலைதனில் விழியில் மெய்யில்
இற்கிழத்தி புலந்திருக்கும் விழியில் பேச்சில்
என்னையினிக் காண்பரிது; குடல்வ ளர்க்க
இரந்துண்போன் பொற்கரத்தில் உழைப்பால் ஓங்கும்
வன்புயத்தில் விதவையர்கண் சிந்தும் நீரில்
வாழ்கின்றேன் வாஅங்கே என்று சென்றாள்

# ஏன் மறந்தாள்?

மன்னவரே உம்மை யன்றி
மணந்திடேன் பிறரை என்றாள்;
கன்னலே நீர்தான் என்றன்
இட்படும் உலகம் என்றாள்;
முன்னவரே நமது நெஞ்சம்
முழுமையாய் கலந்த தென்றாள்;
சொன்னதைக் காற்றில் விட்டே
தோகை ஏன் மறந்தே போனாள்?

காதலை வளர்த்துக் கொட்டிக்
கடிதங்கள் எழுதி விட்டு
வேதனை தந்தா ளன்றி
விழிக்கடை தந்தாள் இல்லை;
மாதவள் மயங்க விட்டாள்
மடல்களை நாறு விட்டாள்;
சோதனை செய்து தேர்ந்தாள்
துறப்பரோ நெஞ்சின் காதல்?

# தொழில் உலகம்

# தொழிலாளி

### எண்சீர் விருத்தம்

1

மூச்சடக்கிக் கடலகத்தே மூழ்கி நல்ல
முத்தெடுக்கும் தொழிலாளி வாழ்க்கை தன்னில்
மூச்சிருக்க வேண்டியநல் வசதி இல்லை,
முதலாளி பஞ்சணையில் கொஞ்சும் மஞ்சள்
பூச்சுடைய மங்கையரை அழகு செய்யப்
பூமிக்குள் அஞ்சாது நுழைந்து மின்னைப்
பாய்ச்சுகின்ற தங்கத்தைக் கொடுக்கின் றானே
பாவம்அவன் அங்கத்தில் ஒன்றும் இல்லை!

2

ஆலையிலே ஆடைகளை ஆக்கு கின்றான்
ஆனாலும் அன்னவனுக் காடை இல்லை
காலையிலே உழைக்கின்றான் விதைக்கின் றான்நெற்
களஞ்சியத்தை நிறைக்கின்றான் உடல்வ ருந்தும்
வேலையிலே குறைவில்லை பசியை நீக்க
வேண்டியநல் உணவெதுவும் இல்லை! இல்லை!
மாலையிலே உளம்நொந்து செல்லு கின்றான்
மறமிக்க தொழிலாளி நிலைமை நன்றோ?

3

ஆடையிலே அழுக்ககற்றித் தூய்மை ஆக்கி
அழகுசெய்து தருகின்றேன், பொலிவு குன்றத்
தாடையிலே வளருமதை வழித்தெறிந்து
தளிர்க்கின்ற முடிவெட்டி அழகு செய்வோன்,
கோடையிலே வருந்தாமல் முள்ளால் கல்லால்
கொடுமையொன்றும் நேராமல் நடப்ப தற்குச்
சோடையின்றிச் செருப்பளிப்போன் இவர்க ளெல்லாம்
தொடக்கூடாச் சாதிஎன்றால் தொலைக வையம்!

4

வளமிக்க நாடென்பர் இந்த நாட்டில்
வாழஒரு வழியின்றி வறுமை தன்னால்
உளம்நொந்து கூலிகளாய்ச் செல்லு கின்றார்
ஒப்பற்ற என்னினத்தார்; வேற்று நாட்டார்
கிழங்கென்றும் கீரைஎன்றும் எண்ணி நம்மைக்
கீழாக்கி விட்டஇந்த நிலையொ ழிக்கக்
களங்காண வேண்டாவோ வீரம் மிக்க
காளைகளே எனின்னும் பாழு றக்கம்?

# கூண்டுக் கிளி

நேரிசை ஆசிரியப்பா

கனிமரப் பூம்பொழில் களிப்புடன் சேர்ந்தே
இனிதென வதிந்தேன், இடரொரு சிறிதும்
உற்றே னல்லேன், உரிமை யாவும்
பெற்றே வாழ்ந்தேன் பெரும்பகை யின்றி.
எங்கோ பிறந்தான் எங்கோ வளர்ந்தான்
இங்கே வந்தான் என்னையும் கண்டான்
வலையினை விரித்தான் வளத்துடன் வாழ்ந்த
நிலையினை இழந்தேன், நீள்சிறைக் கூண்டுள்
அடைத்தான் என்னை அஞ்சிறை வெட்டி;
அடைத்தனன் ஆயினும் அருங்கனி தருவான்
பாலுங் கொணர்வான் பசியே இல்லை.
ஆலும் வேம்பும் ஆமோ அச்சுகம்?
அடிமை வாழ்வு கொடிது! கொடிது!
விடியா தோநான் விடுதலை பெறவே?
துடையா ரோஎன் துயரினை? எனவே
துடியாய்த் துடித்தேன் துவண்டதென் உள்ளம்,
வடியாக் கிளவி வழங்கும் சிறுவன்
படியாப் பருவம் பழுதிலா உள்ளம்

கொண்டவன் ஓர்நாள் அண்டையில் வந்து
விளையாட் டுணர்வால் விடுதலை தந்தான்;
தலைகாட் டாமல் தப்பி ஓடிட
முனைந்தேன் சிறகோ முறிந்தது கண்டேன்.
நினைந்தேன் நடந்தே நெடுங்கான் ஏக;
பிதுங்கும் பெருவிழி அச்சங் காட்டப்
பதுங்கி வந்தது பாழும் பூனை;
ஒதுங்கி நடப்பினும் உயிர்பெறல் அரிதென
மீண்டும் சென்று கூண்டுள் நுழைந்தேன்
மீளா அடிமை நேர்ந்தது மேலும்;
என்னிலை தானே இந்நாட் டவர்க்கும்!
நன்னிலை தந்தான் நலமுயர் காந்தி
விடுதலை என்றே வெளியில் வந்தனர்;
கெடுதலை உள்ளம் கிடைத்ததைச் சுருட்டும்
சுரண்டல் பூனை துரத்தல் காணீர்!
இருண்ட வாழ்வு ஏகுவ தென்றோ?
பூனைகள் தொலையும் பொழுதுதான் என்றோ?
கொடுமை கொடுமை என்று
கூவிச் சலித்தது கூண்டுக் கிளியே!

# விறகு வெட்டி

அறுசீர் விருத்தம்

1

மனிதரின் நிலைமை கண்டு
　　மனத்தினில் கவலை கொண்டு
தனியிடம் சென்றேன் ஓர்நாள்;
　　'தடியனே மூடா!' என்று
முனியனை அடித்துக் கையை
　　முறுக்கியே இழுத்துச் சென்றார்,
'இனிஎனை அடிக்க வேண்டாம்
　　இமைப்பினில் இறப்பேன் ஐயோ!'

2

என்றவன் குரலைக் கேட்டேன்
　　இடிந்ததென் உள்ளம் ஆங்கே
கொன்றிடும் கூட்டத் தோடும்
　　கோட்டையுள் நுழைந்தேன்; நீதி
மன்றினில் தலைமை தாங்கும்
　　மனிதரும் வினவ, ஓய்ந்து
குன்றிய உயிரைத் தாங்கும்
　　கூலியும் வாய்திறந்தான்

3

'இரண்டுநாள் உண்டே னில்லை,
இருமலால் துடித்தாள் பெண்டு;
சுருண்டன பிள்ளை எல்லாம்
சோற்றுநீர் இன்மை யாலே,
இரந்துயிர் வாழ்வ தற்கும்
என்மனம் இடந்த ராமல்
விரைந்துநான் விறகு வெட்ட
வெளிப்புறக் காட்டில் சென்றேன்

4

காய்ந்தஓர் மரத்தில் ஏறிக்
கடிதினில் வெட்டும் போழ்து
தேய்ந்தஎன் உள்ளம் நோவத்
திட்டினார்; இறங்கி வந்தேன்;
ஓய்ந்தஎன் உடலில் குச்சி
ஒடிந்திட அடித்தார்; கீழே
சாய்ந்தபின் நடந்த தேதும்
சற்றுமே அறியேன்' என்றான்

5

'மற்றவர் காட்டிற் சென்று
மரத்தினை வெட்டி னேனென்
றுற்றதை உரைத்தாய்! சிறையில்
ஒன்றரை மாதம் தங்கு!
மற்றது மறுத்தா யாகில்
மரத்தினில் விறகு வெட்டி
விற்றதில் ஐந்து ரூபாய்
வைத்திடு வெளியில் செல்வாய்!'

6

என்றனர் அறத்தைக் காப்போர்;
இடிதலை வீழ்ந்த தென்ன
நின்றனன்; நிமிர்ந்து கண்ணில்
நீரினைச் சொரிந்தான்; 'ஐயோ!'
என்றனன், 'ஏழை காசுக்
கெவ்விடம் செல்வேன்; என்னைக்
கொன்றிடல் நன்றாம்; ஈசன்
கொடுத்ததிவ் விதியோ?' என்றான்.

7

விதிவிதி என்று மக்கள்
வீணினில் மாய்ந்து சூழ்ச்சிச்
சதியினில் சிக்கி அந்தோ!
சாய்ந்திடும் நிலைமை கண்டும்
மதியொரு சிறிது மின்றி
மாற்றிட மனமு மின்றி
வதிவது நன்றோ? நாட்டீர்!
வளமிகக் காண்போம் வாரீர்

# குதிரை நினைத்தால்...?

### எண்சீர் விருத்தம்

1

கத்திரியால் அழகுசெய்த பிடர்மி மிர்த்துக்
கடிவாளம் கவ்விச்செல் புரவி மீது
மெத்தையமைத் தோரிளைஞன் அமர்ந்தி ருந்தான்
மெதுவாகச் செல்லமனம் ஒருப்ப டாமல்
வித்தைபயில் குதிரையென விரைய வேண்டி
விரித்துவிட்டான் கைச்சவுக்கை; அடியும் பட்டுப்
பத்துமடங் கதிகமாக வேகங் கொண்டு
பறந்ததுவே அப்புரவி, செல்லுங் காலை

2

"தூக்குவது போதாதோ? இவனை நீண்ட
தொலைவுள்ள ஊருக்குச் சுமந்து வந்தேன்
தாக்குகிறான் கைச்சவுக்கால் கெடுவான் என்னை,
தருகின்ற உணவுக்கா இந்தத் தொல்லை?
போக்கற்ற உலகத்தில் குனிந்து தந்தால்
பொல்லாத மனிதரவர் எல்லாம் செய்வர்
காக்கின்ற உழைப்பாளி ஓட ஓடக்
கனவான்கள் விரட்டுகிறார்" என்ற எண்ணப்

3

உள்ளத்தை உறுத்தியதால் வேகங் குன்றி
ஊர்ந்துசெல மேலமர்ந்த காளை நன்றாய்ப்
பள்ளத்தை உண்டாக்கும் வண்ணம் காலைப்
பதித்துள்ள செருப்பாணி தாக்கச் செந்நீர்
வெள்ளத்தைப் பாய்ச்சியது புரவி மேனி;
விளையாட்டாய் அவனெண்ணி விட்டான்; மேலும்
மெள்ளத்தான் செல்கிறதென் றெண்ணிச் சாட்டை
மேன்மேலும் சுழற்றிவிட்டான் விரைந்து செல்ல

4

வில்விட்ட அம்பெனவே விரைந்த தாங்கே
வெலவெலத்துப் போனான்அப் புரவி மேலோன்;
பல்விட்ட கடிவாளம் இறுகப் பற்றிப்
படுத்துக்கொண் டகம்நடுங்கி அவனி ருந்த
வெல்வெட்டு மெத்தையுடன் உருண்டு ருண்டு
வீழ்ந்திடவே உதறிற்று; நெறிக்கி டந்த
கல்பட்டுச் சிதறுண்ட மண்டை செந்நீர்
கசிந்திடவே உலகிருந்து நீங்கி விட்டான்

5

பாட்டாளிக் கூட்டத்தைக் குதிரை யாக்கும்
பணக்காரர் வாழ்வுமிந்த நிலையே தானோ?
மாட்டோடு மனிதரையும் மதிக்கின் றார்கள்
மனம்நொந்து பொறுத்திருப்பர் அளவு மீறின்
காட்டாரோ தம்வலிமை? இங்கு வாழக்
கருதாரோ தொழிலாளர்? உரிமை கேட்க
மாட்டாரோ? அவரெல்லாம் உருத்தெ ழுந்தால்
மனம்புரவிச் செயல்தன்னைக் காட்டி டாதோ!

# உணர்வார் யாரோ?

நிலைமண்டில ஆசிரியப்பா

உழைத்தேன் நன்றாய், உணவே இல்லை;
திளைப்போன் ஒருவன் தீயன செய்தே;
என்னுடற் குருதி இறைத்து விளைந்த
பெரும்பயன் பெற்றே பெரியோன் ஆனான்;
அருமைத் தேனீ! அரிதின் ஓடிச்
சேர்த்தனை தேனை; சிதைத்தே ஒருவன்
உண்டான் அந்தோ! உன்போல் நானும்
உள்ளேன்; இதனை உணர்வார் யாரோ?
ஒருநாள் இங்கே திருநாள் என்றார்
ஆண்டவ னுடனே ஐயரும் இருந்தார்
அலுக்கத் தூக்கி அயர்ந்தேன்; பின்னர்
சோறு கேட்டேன் "சோம்பல் பயலே!
திமிரா உனக்கு? திருட்டுத் தடியா!
பொறுடா" என்றார் பூசுரர்; என்றன்
தோளை முறித்த தோடுடைச் செவியன்
அருகிற் சென்றே அப்பா! என்றேன்
"விதிவிதி" என்றான் குறைமதி யோனே.

# துன்பமடா துன்பம்!

துன்பமடா துன்பம்—வறுமைத்
துன்பமடா துன்பம்

பசித்துயரால் சிறுமகவு பால்சுவைக்கப் பாலின்றிப்
பரிந்தன்னை முகம்நோக்கப் பாவையவள் நீர்ததும்ப
நசித்துருகும் மனத்தோடு நயனத்தால் பேசுகின்றாள்
நானென்ன சொல்லிடுவேன்? மரமுண்டு கயிறுண்டு
(துன்)

எத்தனைநாள் பட்டினியால் இன்னலுற்று வாழ்ந்திடுவோம்
இன்னல்தரும் நோய்வந்தே இருவரையும் பற்றியது
பித்தனைப்போல் மருத்துவன்பால் சென்றுநிலை கூறியதும்
பணமிருந்தால் பேசென்றான் என்செய்வேன் பேருலகில்
(துன்)

மாள்வதற்கு விட்டாரா? மாட்டிவிட்டார் கைவிலங்கு
மனிதனுயிர் காப்பதற்கோர் வகையுண்டா?
நலிவுதுடைத்(து)
ஆள்வதற்கும் கற்றாரா? அதுவுமில்லை! இந்நிலையில்
அறமெங்கே? வாழ்வெங்கே அன்பூறும் வழியெங்கே
(துன்)

# பட்டண வாழ்வு

எண்சீர் விருத்தம்

1

பட்டணத்தைப் பார்ப்பதற்கு நீண்ட நாளாய்ப்
படிந்திருந்த ஆர்வந்தான் தூண்ட ஓர்நாள்
துட்டெடுத்துப் புகைவண்டி ஏறிச் சென்றேன்
சொல்லரிய காட்சிஎலாம் கண்டேன் கண்டேன்;
விட்டெரிக்கும் விளக்குண்டு, 'விர்'ரென் றோடும்
விசைவண்டி பலவுண்டு, கப்ப லோடு
கட்டுமரம் மிதந்தாடும் கடலும் உண்டு,
கரடிபுலி காட்டுகிற நிலையம் உண்டு,

2

மக்களுக்குச் சட்டத்தால் அறம்வ ழங்கும்
மாமன்றம் உண்டு,கடற் கரையின் ஓரம்
எக்களித்துத் திரிகின்ற பெண்கள் பள்ளி
எழில்காட்டி நிற்பதுண்டு, உயர்நூல் சேர்ந்த
தக்கஒரு நூல்நிலைய இருப்பும் உண்டு,
தனலால்கள் குழுவுண்டு, எழில்சேர் மாதர்
தொக்கிருக்கும் மயிலாப்பூர் அல்லிக் கேணி
தொடர்ந்திருக்கும் தியாகநகர் அதுவுங்கண்டேன்

3

இன்னும்பல் காட்சிகளைக் கண்ட பின்னும்
இன்பத்தைக் காணவில்லை, எனது நெஞ்சு
துன்புற்றுத் துன்புற்றுத் துடிக்கு தந்தோ
தொழிலாளர் நிலைகண்டு; மூச்சு வாங்க
இன்னலுற்றுச் சுமைவண்டி 'ரிக்ஷா' வண்டி
இழுக்கின்ற விலங்குநிலை மாந்தர் கண்டேன்,
துன்னுமழை வெய்யிலிலும் வழியின் ஓரம்
துணையோடு வாழ்கின்ற மக்கள் கண்டேன்

4

கடலுக்குள் வலைவீசும் மக்கள் கூட்டம்
கரையோரம் வாழ்கின்றார்; காற்ற டித்தால்
தடதடவென் றோடிவிடும் அவர்கள் வீடு;
தவறாமல் தெருத்தோறும் கோவி லுண்டு;
மடமையொடு சாதிபல உண்டு; பிச்சை
வாழ்வினரும் மிகவுண்டு; கண்டி வற்றைத்
திடமிக்க என்னுள்ளம் நொந்து சிற்றார்
திரும்பிவந்தேன்; சிறுமைஎலாம் அழிவ தென்றோ?

# பட்டிக்காட்டான்

நிலைமண்டில ஆசிரியப்பா

உழைப்பே என்னுயிர் களைப்பே யின்றி
உழுவேன், நடுவேன், உறுகளை எடுப்பேன்,
கண்ணெனக் காத்துக் கதிர்முற் றியபின்
அறுப்பேன், சுமப்பேன்; ஆண்டை வீட்டில்
நிறைப்பேன், மகிழ்வேன், நிலத்தவர் மகிழ்வார்
இல்லம் செல்வேன் என்மனை யாட்டி
எலும்புடன் தோலாய் இருக்கும் பிள்ளையை
அடித்திடல் கண்டதும் அடித்ததேன் ? என்பேன்
‘சோறு சோறெனச் சொல்லி அழுதால்
சோற்றுக் கெங்கே போவது? சொல்வீர்”
என்பாள் வல்லிடி இதயம் பாயும் ;
களஞ்சியம் நிறைத்தோம் கஞ்சி இல்லை
காலம் வருமெனக் கலங்கி இருந்தேன்;
இவ்வகை வாழ்நாள் இயங்க ஓர்நாள்
நோயுற் றுடலம் நொந்தேன் பின்னர்த்
தொடர்ந்தது நோய்தான் தொல்லைகள் உற்றேன்
உள்ளூர் மருத்துவர் உரைத்த மருந்துகள்
உண்டேன் பயனிலை ; ஒருவர் வந்தார்

'நகரம் சென்ருல் நன்மை பெறலாம்'
என்றனர் என்பால் இருப்பே இல்லை
உழன்றேன் உழன்றேன் உற்ருர் ஒருவர்
பார்க்க வந்தார் "பகவான் காப்பார்
திருப்பதி சென்று தீர்த்தம் ஆடி
முடிஎடுப் பேனென முடிவுசெய் தால்நோய்
விலகும்" என்று விளம்பினர் ; கையில்
இல்லை யாயினும் என்னுயிர் வேட்கையால்
வேண்டிக் கொண்டேன் விரைந்தன சின்னுள் ;
ஓய்ந்தது நோயும் உழைத்துழைத் தில்லாள்
ஊட்ட ஊட்ட உடலுரம் பெற்றேன் ;
உற்ருர் சொன்ன உரைதவ ருமல்
காளைகள் காட்டிக் கடன் பணம் பெற்றுத்
திருப்பதி சென்றேன் திருவருள் பெறவே ;
அருச்சனை செய்யவும் முடிஎடுப் பதற்கும்
இரண்டு சீட்டுகள் ஈந்தனர் அவற்றை
அன்பாய்ப் பணிவாய் அருச்சகர்க் களித்தேன்
இரண்டில் ஒன்றை என்கையிற் கொடுத்து
"முடிஎடுக்க அங்கே முதலிற் செல்வாய்"
என்ருேர் நாவிதர் இருக்கும் இடத்தைச்
சுட்டிக் காட்டச் சுருக்கெனச் சொன்னேன்
நாவிதர் எடுக்கவா நானிங்கு வந்தேன்?
உள்ளூர் நாவிதர் உண்டு பலபேர்
அவரை ஒதுக்கி ஆண்டவன் தனக்கே
வைத்துளேன் முடியை வம்புசெய் யாமல்
நீரே எடுத்தருள் புரிவதே நேர்மை
என்றேன் அருச்சகர் எரிந்து விழுந்தார்

"அற்பனே ! இவ்விடம் அருச்சனை மட்டும்
நடத்துவோம் நடந்திடு அங்கே" என்றார் ;
அருச்சனை மட்டும் ஆண்டவர் ஏற்பார்
முடிநீர் எடுத்தால் முகஞ்சுளிப் பாரோ ?
என்றேன் ; அங்கே இருந்த பட்டை
நாமம் போட்டவர் "நாயே பேயே"
என்றெலாம் பேசி இடித்தார் அடித்தார் ;
ஐயா என்னை அடிக்க வேண்டாம்
உயர்ந்த சாதியை உவப்பார் கடவுள்,
நாவிதன் தாழ்ந்தவன் நயவார் அவனை
என்றதால் இவரை என்முடி எடுக்க
வேண்டினேன் தவறோ ? விளம்புவீர் !' என்றேன் ;
"பட்டிக் காட்டான் பட்டிக் காட்டான்"
என்றெனை இகழ்ந்தார் அங்கிருந் தோரே.

# புலியேறென எழுவாய்

பதிறுசீர்ச் சந்த விருத்தம்

உழுவார்கரம் உயர்வாய்வர
உலகோர்முயல் திருநாள்
உனதாகிய திருநாடொரு
தமிழ்நாடென வருநாள்
குழுவார்கழை பிழிபாகுடன்
முறியாமுனை அரிசி
குழைவாயமு துணவாயதைக்
குலமாதர்கள் தருநாள்
எழுஞாயிறு புலர்காலையில்
எழில்வான்மிசை வருமே
இதுநாள்வரை துயராய்வரு
பனிநாள்இனி அறுமே
தொழுவாய்கதிர் தொழுவாய்கதிர்
சுடரால்நலந் தரலால்
சுடுவாய்பகை விடுவாய்மயல்
துணிவாயெழு தமிழா

புழுவாயுனை இகழ்வார்முனம்
புலியேஎன எழுவாய்
பொதுவாழ்வினில் நிலையாயிரு
புதுவாழ்வினை அடைவாய்
தொழுதேவளர் உடல்வாழ்வது
தொலையாயெனில் உனையே
தொழுநோயொடு திரிவாரினும்
இழிவாயிவண் நினைவார்
மொழிவாழவும் இனம்வாழவும்
முயல்வாய்தமிழ் மகனே
முரணுதொரு முகமாயெழு
முடியாததும் உளதோ?
இழிவாகிய நிலைஒடிட
எடுவாள்பகை மலையோ?
எழுவாய்தலை நிமிர்வாய்உனை
எதிர்வாரினி இலையே.

முடியரசன் கவிதைகள்

தமிழ் உலகம்

# மொழியுணர்ச்சி

எண்சீர் விருத்தம்

1

இலைபொறுக்கும் நாயுடன்தன் திறமை காட்டி
எச்சிலுணும் மனிதனெனும் உருவங் கண்டும்,
குலைநடுங்கப் பெண்ணினத்தை அடிமை யாக்கும்
கொடுமையினைக் கண்மூடிப் பழக்கந் தன்னை
நிலைநிறுத்தப் பாடுபடும் நிலைமை கண்டும்,
நேர்மைபகுத் துணரறிவு கல்வி இல்லா
நிலையிருக்கக் கண்டிருந்தும் உணர்ச்சி காணா
நெஞ்சத்தார் மிக்குவரும் நாளில் இங்கு

2

மொழியுணர்ச்சி பாடுகென்றீர் ! உணர்ச்சி கூர்ந்து
மொழியுங்கால் பிழைபொறுத்துச் சிந்தித் தாய்ந்தால்
பழியுணர்ச்சி தோன்றாது ; வருவோன் செல்வோன்
பழிக்கின்றான் நம்மொழியைச் செவிமடுத்தும்
எழுமுணர்ச்சி கண்டோமா? வடக்கு வேந்தன்
இழித்துரைத்தான் தமிழரசை எனுஞ்சொற் கேட்டு
முழுமூச்சாய் எதிர்த்தானே அவன்குலத்து
முளைத்துவரும் காளைகள்நாம் வெட்கம் வெட்கம்

*

3

ஆங்கிலமோ பிறமொழியோ பயின்று விட்டால்
அன்னைமொழி பேசுதற்கு நாணு கின்ற
தீங்குடைய மனப்போக்கர் வாழும் நாட்டில்
தென்படுமோ மொழியுணர்ச்சி? ஆட்சி மன்றில்
பாங்குடன்வீற் றிருக்குமொழி தமிழே என்று
பகர்நாளில் மொழியுணர்ச்சி தானே தோன்றும்;
ஈங்கதற்கா என்செய்யப் போகின் றீர்நீர்?
இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும்

4

ஆந்திரமும் கன்னடமும் சென்று வந்தேன்
அங்கெல்லாம் மொழியுணர்ச்சி விளங்கக் கண்டேன்;
மாந்தரெனத் திரிகின்றோம் உணர்ச்சி யற்று
வந்தவர்க்கும் போனவர்க்கும் பல்லைக் காட்டிச்
சாந்துணையும் காக்கைபிடித் தலைந்து சென்று
சாப்பாடே குறிக்கோளாய் மொழியைத் தாழ்த்தி
வாழ்ந்திருக்க நினைக்கின்றோம் படையெடுத்து
வந்தமொழி வாழவழி செய்து தந்தோம்

5

பிறமொழியை வெறுக்கின்றேன் என்று சொல்லிப்
பிழையாகக் கருதாதீர்! தமிழை யிங்கு
மறுவறநன் குணர்ந்ததற்பின் பயில்க என்பேன்;
மனைவியைமற் றொருவன்பால் அடகு வைத்துத்
துறவறமேற் கொளலாமோ? தாய்த விக்கத்
துடித்திருக்க அறஞ்செய்ய முனைதல் நன்றோ?
கறவையிடம் பால்கறந்து கன்றுக் கின்றிக்
கதறிவிழக் கடவுளென்று சிந்தல் நன்றோ?

## 6

மறுமலர்ச்சி எனும்பேரால் தமிழின் பண்பை
மாய்க்கின்றோம்; மொழியிருக்கப் 'பாஷை' என்போம்,
பெறுமகிழ்ச்சி 'சந்தோஷம்' ஆகும்; வேட்டி
'வேஷ்டி' எனப் பெயர்மாறும்; பதற்றம் என்னும்
மறுமொழிபோல் பதஷ்டமெனக் குதிப்போம்; தண்ணீர்
ஜலமாகும்; மறைக்காடு 'வேதா ரண்யப்'
பிறமொழியாய் மாறிவிடும்; மொழியு ணர்ச்சி
பிழைத்திருக்க இடமுண்டோ? புதைத்து விட்டோம்

## 7

வணக்கமெனச் சொல்பவரைக் கட்சி சார்த்தி
வாட்டுகின்றோம்; ''தாய்மொழியைப் புதைத்து விட்டுப்
பிணக்கல்லில் வரவேற்பு நல்கல் வேண்டேன்
பிறமொழியின் அடிமைகளே'' என்று சொன்ன
குணக்குன்றும் நம்காந்தி எந்தக் கட்சி?
குறிக்கோளாய் வங்கமொழி வளர்ப்பான் வேண்டிப்
பிணக்கின்றிப் பலநூல்கள் தந்த தாகூர்
பேணினரே மொழியுணர்ச்சி எந்தக் கட்சி?

## 8

தமிழ்மொழியை உயர்தனிச்செம் மொழியாம் என்று
தகுமுறையில் ஆராய்ந்து முடிவு சொன்ன
தமிழ்மகனார் பரிதிமாற் கலைஞன் என்று
தமிழ்மொழியிற் பெயர்கொண்டார் எந்தக் கட்சி?
''அமுதமெனத் தாய்மொழியைப் போற்றும் நாடு
வீழ்ந்ததில்லை, அதைத்தூற்றி வாழ்ந்த நாடும்
நமதறிவிற் கண்டதில்லை'' என்று ரைத்த
தமிழாசான் முத்துசிவன் எந்தக் கட்சி?

9

மணவினையில் தமிழுண்டா? பயின்றோர் தம்முள்
வாய்ப்பேச்சில் தமிழுண்டா? மாண்ட பின்னர்
பிணவினையில் தமிழுண்டா? ஆவணத்தில்
பிழையோடு தமிழுண்டு; கோவில் சென்றால்
கணகணவென் றொலியுண்டு; தமிழைக் கேட்கக்
கடவுளரும் கூசிடுவர்; அந்தோ! அந்தோ!
அணுவளவும் மொழியுணர்ச்சி இல்லா நாட்டில்
ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வ தெங்கே?

10

உடுக்கின்றார் உண்கின்றார் உயர்வுங் கொள்வார்
ஒப்பற்ற தமிழ்மொழியால்; நன்றி இன்றிக்
கெடுக்கின்றார் அதன்வளர்ச்சி நேராய்ச் சில்லோர்;
கேண்மைகொண்டு வளர்த்திடுவோம்என் றுசில்லோர்
கொடுக்கின்றார் நஞ்சுதனைக் கூசா திந்தக்
கொடுமைகளை நீக்கிடவே ஆவி தானும்
விடுக்கின்றோம் தாய்மொழிக்கே என்று சொல்லி
வீறுற்று நிமிர்ந்தெழுவீர் தமிழ்நாட் டீரே!

11

தமிழ்காக்கப் போர்செய்ய உணர்வு வேண்டும்
தமிழ்கொன்று வாழ்கின்ற கயமை வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யப் புலிகள் வேண்டும்
தடுமாறி ஓடிவிடும் எலிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்யச் சிங்கம் வேண்டும்
தாளமிடும் ஓலமிடும் நரிகள் வேண்டாம்
தமிழ்காக்கப் போர்செய்ய மானம் வேண்டும்
தாலமுத்து நடராசன் துணிவு வேண்டும்

# அவளும் நானும்

## எண்சீர் விருத்தம்

### 1

பொங்கிவரும் நிலவொளியில் மலர்ந்து நிற்கும்
	பூத்தோய்ந்து வருதென்றல் உடலை நீவ
சங்கொளிதோய் மாடத்துத் தங்கி இன்பம்
	தருகுடும்ப விளக்கெடுத்துச் சுவைத்திருந்தேன்
மங்கையவள் என்குடும்ப விளக்காம் நல்ல
	மனைவிவந்து 'யார்உரைத்த திந்நூல்?' என்றாள்;
'எங்கவிபா ரதிதாசன்' என்றேன்; 'அத்தான்!
	எனக்கவரை ஒருசிறிதும் பிடிக்கா' தென்றாள்

### 2

'உயர்கவிஞன் உணர்ச்சிமிக்கான் புரட்சிப் பாடல்
	உரைக்கின்றான் தமிழமிழ்து படைத்துக் காக்கும்
செயலினையே புரிகின்றான் இருந்தும் ஏனோ
	வெறுக்கின்றாய்? செவ்விதழாய்!' என்றேன்; அன்னாள்
மயல்புரியும் மங்கை தந்த இன்பம் என்றன்
	மாத்தமிழுக் கீடில்லை என்று சொன்னால்
வயிறெரிய மாட்டாதோ? பெண்கள் கூட்டம்
	வாழ்த்திடுமோ? விட்டுவிடும் கவிஞர் பேச்சை'

### 3

என்றுரைத்தாள்; 'பெண்மயிலே! தமிழில் ஊறும்
இன்பநிலை கண்டவர்கள் இந்த ஒன்றே
நன்றென்பர்; நான்கூட அப்ப டித்தான்
நடையழகி! நானுன்னை மணந்து கொண்ட
அன்றுன்பால் அழகிளமை நிறையக் கண்டேன்
ஆண்பிள்ளை ஒன்றுபெற்று விட்ட பின்னர்
இன்றுளதோ அவ்விளமை? ஆத லாலுன்
இன்பத்தும் சிறுகுறைவு இருத்தல் உண்மை

### 4

மனிதரினம் முதன்முதலில் பேசக் கற்ற
மாண்புயர்செந் தமிழணங்கோ என்றால், இன்பம்
கனிதெலுங்கு மலையாளம் துளுவம் இன்னும்
கன்னடமாம் எனுமக்கள் நான்கு பெற்றும்
தனியிளமை குன்றவில்லை தளர்வும் இல்லை
தலைச்சிந்தா மணிசிலம்பு மேக லைப்பூண்
நனியழகு பொலிவுபெற மனத்தை ஈர்க்க
நடக்கின்றாள் சிரிக்கின்றாள் அந்த நங்கை

### 5

ஆதலினால் தமிழின்பம் உயர்ந்த தென்றார்
அதற்கவரை வெறுத்துவிடல் அழகோ? என்றன்
மாதரசே எனவுரைத்தேன், 'போங்க ளத்தான்
மறைமொழியால் கேலிஉரைக் கின்றீர்!' என்றாள்;
'காதலியே கேலியில்லை தமிழ்சு வைத்தால்
கவலைஎலாம் பறக்குதடி! தளர்ச்சி நோயும்
ஏதடி?என் இன்னமுதே! என்றன் உள்ளம்
இன்பத்துள் மூழ்குதடி!' என்று சொன்னேன்;

6

'இலக்கணமாம் உலைக்கூடத் திருத்தி விட்டுத்
தனித்தமிழாம் இன்மொழியாம் என்று சொல்வீர்
கலைச்சங்க நூலென்பீர்! இரும்பாற் செய்த
கடலைகளே அவையெல்லாம்; தமிழை இந்த
நிலைக்காக்கி விட்டீரிங் கெப்ப டித்தான்
நிலைத்திடுமோ உமதுதமிழ்?' என்று கேட்டுக்
கலக்கிவிட்டாள் என்மனைவி; அன்புப் பேதாய்!
கண்டபடி உளறிவிட்டாய்! ஒன்று கேட்பாய்!

7

வயலுக்கு வரப்பொன்றும் வேண்டா மென்றால்
வளக்கரைகள் ஆற்றுக்கு வேண்டா மென்றால்
இயல்மொழிக்கும் இலக்கணமே வேண்டாம் பெண்ணே!
இயலறிவு மொழியறிவு இல்லார் சொல்லும்
மயல்உரையை நம்பாதே! மொழியைக் காக்கும்
வரம்பிலையேல் எம்மொழியும் அழிந்து போகும்
கயல்விழியே! சங்கத்து நூல்கள் எல்லாம்
கண்டதுபோல் வல்லிரும்புக் கடலை என்றாய்!

8

புரைபட்டுப் போகுதடி என்றன் உள்ளம்
பொல்லாத சொல்லினைத்தான் சொல்லி விட்டாய்!
நரைபட்டுப் பல்விழுந்தோன் முறுக்குத் தின்றால்
நலமென்றா சொல்லிடுவான்? இரும்பாம் என்பான்;
குறைபட்ட அரைகுறைகள் உணரும் ஆற்றல்
இன்மையினால் கூறுவதைக் கேட்டு விட்டு
நிறைவுற்ற புலவோரைச் சங்க நூலை
நிறுத்துரைக்கும் இலக்கணத்தைப் பழித்தல் நன்றோ

9

'வானொலியில் நேற்றொருவர் பேசக் கேட்டேன்
வந்தசில ஐயங்கள் நும்பால் சொன்னேன்
தேனொழுகும் மொழிபுகல்வீர் என்றி ருந்தேன்
திட்டுகின்றீர் மன்னியுங்கள் அத்தான்!' என்றாள்;
நானெதுவும் திட்டவில்லை, தமிழால் வாழ்வோர்
நன்றிகொன்று திரிவதைத்தான் ஒப்ப வில்லை
ஏனொதுக்கம்? இப்படிவா! எனக்கை பற்றி
'எழுகின்ற ஐயங்கள் புகல்க' என்றேன்

10

'கேட்கின்றேன் என்மீது சினங்கொள் ளாதீர்?
கிளர்மூச்சும் உடல்பொருளும் தமிழே, வாழும்
நாட்களுமென் தமிழ்மொழிக்கே என்று சொல்வீர்!
'நன்றுநன்று; நாம்மணந்த திருநாள் தன்னில்
கேட்கவில்லை தமிழ்ஒலியே எதையோ கேட்டோம்
கிடக்கட்டும் நாம்வணங்கும் கோவி லுள்ளே
கேட்கிறதா அவ்வொலிதான்? பிள்ளை பெற்றோம்
கிறுக்கரைப்போல் பிறமொழியில்பெயரும்வைத்தோம்

11

இந்நிலைதான் போகட்டும் இந்த நாட்டில்
எங்கிருந்தோ வந்தமொழி நம்மை ஆளல்
நன்னிலைஎன் றெண்ணிவிட்டோம் உணர்வும் அற்றோம்
நலம்பெறுமா உருப்படுமா தமிழ்தான்?' என்றாள்;
என்னுளத்தே சுருக்கென்று தைத்த(து) ஆம்ஆம்
எழுச்சியுரை முழக்குகிறோம் செயலிற் காட்ட
முன்வருதல் சிறிதுமில்லை அந்தோ! என்று
முணுமுணுத்தேன் பேசவில்லை வெட்கம்! வெட்கம்!

12

'கொஞ்சுமொழி வஞ்சி! எனைத் திருத்தி விட்டாய்
கூறுவதைச் செயலுக்குக் கொணர்வேன்; நம்பால்
தஞ்சமென வந்தவரின் சூழ்ச்சி யாலே
தமிழ்வழங்காக் கோவிலுள்ளே தலையைக் காட்டேன்
எஞ்சியுள குழந்தைக்குத் தமிழ்ப்பேர் வைப்பேன்
இப்படியே என்வீட்டைத் தமிழ்வீ டாக்க
வஞ்சினமும் கொள்கின்றேன்' என்று சொன்னேன்,
வாய்விட்டுச் சிரித்துவிட்டாள்; 'ஏன்சி ரித்தாய்?'

13

என்றேன்நான்; கோவிலுக்குப் போகா விட்டால்
இனியதமிழ் எழுச்சிபெற்று விடுமா என்ன?
நன்றத்தான்! தமிழ்நாடும் கோவில் மன்றும்
நாதியற்ற சொத்தா? உம் சொந்த மன்றோ?
வென்றந்த உரிமை பெற வீரம் இல்லை?
ஏனத்தான் வீண்பேச்சு? போதும் போதும்!'
என்றுரைத்தாள்; தோழர்களே! உம்பாற் சொன்னேன்
என்செய்யப் போகின்றீர்? ஆய்ந்து சொல்லும்!

# தூயில் கலந்தது

### நிலைமண்டில ஆசிரியப்பா

பாண்டியர்க் குரியதாய்ப் பாடும் பெருமை
பூண்டிடும் நல்ல பூம்புனல் வையைக்
கரைமிசை அமர்ந்தேன், கற்றவர் இருவர்
உரைபல நிகழ்த்தினர் உறுபயன் தருமெனச்
செவிகொடுத் திருந்தேன்; சிவநெறிச் செல்வர்
நவையறு தமிழ்நயம் நவிலத் தொடங்கினர்;
"ஓதிய மொழிகள் பலவுளும் உயர்ந்திடும்
ஆதி சிவன்தரும் அருமைத் தமிழை
ஏட்டில் எழுதி எரிதனில் இட்டோம்
பாட்டின் ஓலை பசுமையோ டிருந்தது;
விரைபுனல் ஆற்றில் விடுத்தனம் அதனை;
கரையவர் வியந்திடத் திரைபிளந் தெதிர்த்து
நீந்தும் மீனென நீள்கரை சேர்ந்தது;
வேந்தனும் கண்டனன்; விளைபுகழ்த் தமிழின்
பெருமையை விளக்கும் பெற்றியன் றோ?" என,
"அருமை! அருமை!" என்றனர் அருகர்;
"நீவிர் புகன்ற நெருப்பிலும் நீரிலும்
பாவுடன் தமிழைப் பாங்குடன் எழுதி

இட்டோம் நாங்களும் எரிந்தன அழிந்தன!
சிட்டரே தமிழின் சிறுமையைப் பாரீர்!"
சமணர் இங்ஙனம் சாற்றினர்; "உங்கள்
சமயச் சிறுமையைச் சாற்றுவ ததுவே
தமிழின் குறையெனல் சரியிலை" எனமன
அமைதி குலைந்திட அறைந்தனர் சைவர்;
"இருப்பினும் அழிந்தவை இன்தமிழ்ப் பாட்டே
நட்டமும் நமக்"கென நவின்றனர் சமணர்;
"ஆமாம் உண்மை அறிந்திலோம் முன்னாள்
சமயப் போரிற் சாய்த்தனம் பலநூல்
கட்சி சமயம் கடந்தது தாய்மொழி
எச்சார் பினர்க்கும் இருந்திடத் தகுவது
மொழியுணர் வொன்றே, முன்னுதல் வேண்டும்"
என்றனர்; மற்றவர் "இவ்வுணர் வந்நாள்
ஒன்றிடின் உயரிய நூலெலாம் நிலைக்கும்
கூத்தும் இசையும் கூறிய நூற்கள்
வேத்தவை விரும்பிட விறல்படப் பாடிய
கருவூ லங்கள் எத்தனை காண்கிலேம்!
எங்கே எங்கே எம்முடைச் செல்வம்?
இனவுணர் வின்றி இடையில் வந்தவை
மனமதில் நிலைத்தல் மாண்பிலை" என்றனர்;
பள்ளி எழுச்சி பாடினள் பாவை
துள்ளி எழுந்தேன் துயிலுங் கலைந்ததே!

# தமிழ்க்காதலி

எண்சீர் விருத்தம்

1

தென்னகத்துத் திருமகளே! கனியே! நெஞ்சில்
தித்திக்கும் கனிச்சாறே! சுளையே! தேனே!
என்னகத்து நின்றுநடம் ஆடும் பாவாய்!
எழிலரசி! எஞ்ஞான்றும் இளமைத் தோற்றம்
நின்முகத்துக் காண்கின்றேன் களிப்பில் மூழ்கி
நிகரில்லை நினக்கென்றே நிமிர்ந்து நோக்கி
உன்னலத்தைக் காதலித்தேன் உயிர்மூச் செல்லாம்
உனக்கென்றே வாழ்கின்றேன் தமிழ ணங்கே

2

உனையீன்ற நாட்டுக்கு நன்றி சொல்வேன்
உனைவளர்த்த பெரியோர்க்கும் சொல்வேன் நன்றி
சுனையீன்ற நாண்மலரே! நின்னெ ழிற்குச்
சூட்டிமகிழ் அணிகலன்தாம் கணக்கில் உண்டோ?
நனியிகந்த செல்வமகள் என்ற றிந்தும்
நானொருவன் ஏழையுனை நாடு கின்றேன்
எனையிகழேல் நீயின்றேல் நானும் இல்லை
என்னுயிரும் நினக்கென்றே இருக்கின் றேனே

3

அரசனிடம் பெற்றபெருஞ் சிலம்பை நின்றன்
அடிமலரில் அணிவித்துக் கண்க ளித்தார்,
முரசுகெழு முந்நாட்டுக் கலையின் சாயல்
முழுமையொடு விளங்குவதைக் காணு கின்றேன்
பரல்விலையோ மதிப்பரிதாம், அவைதாம் வைரப்
பன்மணியோ நன்முத்தோ பவழந் தாமோ?
திருவடியில் அணிந்துநடை பயிலும் போழ்து
தித்திக்கும் எழில்கண்டேன் ஒயிலும் கண்டேன்

4

ஒருமகளே! நுண்ணியநின் இடையில் சுற்ற
ஒப்பரிய நன்மணிமே கலையைக் கூடற்
பெருவணிகன் சீத்தலையூர்ச் சாத்தன் றன்பால்
பெற்றுனக்குப் பெருமையுடன் அணிவித் தார்கள்
திருவுயர்ந்த மார்பகத்தில் கலையால் வல்லான்
திருத்தக்கன் தருசிந்தா மணியை வைத்தார்
அரசியென நீவிளங்க உன்வீட் டார்கள்
அணிவித்த பொற்கலன்கள் நூறு நூறும்

5

இளையவளே! உயிரே!நின் காதல் வேண்டி
ஏங்குகிறேன் கைகொடுப்பாய்! கையில் கோல
வளையங்கே? நலங்காணத் துடித்தே நின்றேன்
வாயிதழைத் தாராயோ? என்மெய்க் காதல்
தளையவிழ உதவாயோ? குண்ட லந்தான்
தயங்குசெவி வெறுஞ்செவியாய் இருத்தல் ஏனோ?
ஒளிமிகுந்த நின்னெழிற்குக் களங்க மென்ன
உணர்கின்றேன் அவைஎங்கே? அவைதாம் எங்கே?

6

தென்னாட்டுத் திறன்முழுதும் பொருந்தக் கண்டு
திருடினரோ வடக்கத்தித் திருடர் தாமும்!
நின்வீட்டுப் புறக்கணிப்பால் இங்கு வந்தோர்
நிகழ்த்தியபொய்ச் சதியோஎன் அகத்து வாழ்வாய்!
என்பாட்டுக் குரியவளே! கவலை கொள்ளேல்
எழில்மிகுத்துக் காண்பதற்கு நான்மு யன்று
பொன்காட்டும் அப்பணிபோல் பலவும் செய்து
பூட்டுகிறேன் பூட்டுகிறேன் காதல் நல்லாய்!

# தமிழ்தான் என்பேர்

அறுசீர் விருத்தம்

1

தேனினும் இனிய என்றன்
தெளிதமிழ் தாழ்ந்த தேனோ?
மீன்புலி வில்லால் காத்த
வேந்தர்தம் மரபில் வந்தோர்
ஊனின்நல் உயிரின் மானம்
உயர்வெனுங் குறிக்கோள் கொண்டோர்
ஏனினும் ஊமை போல
இருக்கின்றார் என்ற எண்ணம்

2

உள்ளத்தைக் கொள்ளை கொள்ள
உடலினை நீவி இன்ப
வெள்ளத்தில் தென்றல் தள்ளி
மெல்லெனச் செல்லத் திங்கள்
கள்ளனை நிகர்த்து மேகக்
காவினுள் நுழைந்து செல்ல
நள்ளிராப் போதில் தூக்கம்
நண்ணிடக் கனவிற் சென்றேன்

3

சென்றனன் முன்ஓர் நங்கை
செயல்மறந் தழுதல் கண்டு
கன்றின முகத்தாய்! ஏனோ
கலங்கிய விழியோ டிங்கே
நின்றிடு கின்றாய்? அம்மா!
நிலைஎனக் குரைப்பாய் நீயார்?
என்றலும் அவளும் ஒப்பி
இயம்பினள் கண்ணீர் வார

4

"வேங்கடம் குமரி நாப்பண்
வெற்றியின் கொடிப றக்க
யாங்கணும் பகையே யின்றி
யான்அர சோச்சி வந்தேன்
தீங்கென எவருஞ் செய்யின்
தீயென வெகுண்டெ ழுந்து
பாங்குடன் வேந்தர் காக்கப்
புலவர்கள் பாட வாழ்ந்தேன்

5

மலைகடல் ஆறு வானம்
மாலையில் கதிரோன் காட்சி
அலைவுறும் மேகம் காதல்
அகப்பொருள் அஞ்சா வீரம்
கலைமதி என்னும் இன்ன
காசினி இயற்கை எல்லாம்
நிலைபுகழ்ப் பாட லாக்கி
நின்றடி பணிய வாழ்ந்தேன்

6

இவ்வணம் வாழ்ந்த என்னை
ஏளனப் பொருளாய் வைத்தார்
உய்வகை உண்டோ என்ற
நினைவென்னை உறுத்த லாலே
செய்வகை யின்றிக் கண்ணீர்
சிந்தினேன் தமிழ்தான் என்பேர்
வெவ்வினை மாக்கள் என்ன
விளைப்பரோ அறியேன்'' என்றாள்

7

"அரசியல் மன்றில் ஏற
ஆண்டவன் திருமுன் நிற்க
உரிமையோ சற்று மில்லேன்
உணர்வொரு சிறிது மின்றி
வருபவள் தனக்கே வாழ்வு
வழங்கினர் என்றன் மக்கள்
எரிஎனக் குமுற நெஞ்சம்
ஏங்கினேன்'' என்றாள் அன்னை

# துறைதோறும் தமிழே காண்பீர்

அறுசீர் விருத்தம்

1

பொறுப்பற்றுக் கிடந்தார் முன்னாள்
புகுந்தபுன் மொழிகட் கெல்லாம்
விருப்புற்றுத் தாழ்ந்து நின்று
வேலையில் அமர்தல் ஒன்றே
குறிக்கொண்டு வாழ்ந்தார் தாய்க்குக்
கொடுமைகள் செய்து வந்தார்
வெறுப்புற்று நின்றா ரெல்லாம்
விழைந்தனர் தமிழை இந்நாள்

2

தாய்மொழிப் பற்று நெஞ்சில்
தளிர்த்ததா என்றால் இல்லை
ஆய்முறை அறிஞ ரெல்லாம்
அன்புடன் அறைந்த நாளில்
வாய்புகாச் சொல்லால் வைதே
வயிற்றினை வளர்த்தார் அந்தத்
தூயவர் முதலில் நின்று
தொழுதகை காட்டு கின்றார்

3

ஆட்சியில் தமிழாம் என்றே
அரசினர் ஒருசொல் சொன்னார்
காட்சியைக் 'காக்ஷி' என்னும்
கயவரும் தொழுது நின்றார்
மாட்சிமை என்று சொல்லி
மயங்கிடேல் தமிழ நாட்டீர்!
தோட்சுமை இறங்க வில்லை
தொழுதகை அனைத்தும் நன்றே?

4

அரியணை தமிழுக் கென்றே
அரசினர் புகன்றா ரேனும்
புரிமொழி என்று சொல்லிப்
பிறமொழி புகுத்தல் காணின்
சரிஎன ஒப்பேல்! தக்க
சான்றவர் புலத்தால் ஆய்ந்த
முறையினால் கலைச்சொல் ஆக்க
முனைந்திடச் செய்தல் வேண்டும்

5

அரியணை ஏற்றி வைத்த
அரசுக்கு நன்றி சொல்லித்
திருமண நிகழ்ச்சி யாவும்
தெளிதமிழ் கேட்கச் செய்வீர்!
இறைமுனும் தமிழே கேட்க
இணைந்துநீர் தொண்டு செய்வீர்!
துறைதொறும் தமிழே காணின்
தாய்தமிழ் ஆட்சி என்போம்

# உறுதி கொள்வீர்

எண்சீர் விருத்தம்

1

முதலோடு முடிவில்லாப் பெருமை, நான்கு
மொழிபெற்றும் மூப்பில்லா இளமைத் தன்மை,
அதனோடு மிகுமினிமை காலஞ் சொல்ல
அமையாத பழந்தொன்மை, தனித்தி யங்கி
உதவுநிலை, வளர்பண்பும், எளிமை யாவும்
உயர்தனிச்செந் தமிழுக்கே உண்டாம்; மேலும்
புதுமைபெற முடிசூடி அரசு தாங்கப்
புலவரெலாம் இளைஞரெலாம் உறுதி கொள்வீர்!

2

தெலுங்குமொழி பிறமொழிகள் உயர்தல் காண்பார்
தேன்மொழியாம் தமிழ்மொழியை வாழ்க என்றால்
கலங்குகின்றார் ஒருசிலர்தாம்; உயிரா போகும்?
கலங்கற்க! தமிழ்வாழ்ந்தால் யாரும் வாழ்வர்;
புலங்கெட்டுப் போகாதீர்! ஆட்சி செய்யப்
புன்மொழிகள் வேண்டாதீர்! தமிழின் மானம்
நலங்கெட்டுப் போவதுவோ? தமிழே இந்த
நாடாள வேண்டுமென உறுதி கொள்வீர்!

# மனத் தூய்மை

## எண்சீர் விருத்தம்

1

நினைக்கின்ற உளத்தாலும் அவ்வெண் ணத்தால்
நிகழ்கின்ற சொல்லாலும் செயலி னாலும்
அனைத்தாலும் மாசின்றி இருத்தல் ஒன்றே
அறமாகும்; அழகுதரும் தூய்மை யாகும்;
தினைத்தேனும் தூய்மையின்றிச் செய்யும் சேவை,
திருக்கோவில் பலஎழுப்பல் வீணே யாகும்;
மனத்துக்கண் மாசின்மை அறமென் றோதும்
மறைமொழியை வள்ளுவனை மறத்தல் வேண்டா.

2

துப்பாக்கி கொலைக்கருவி அகழி கோட்டை
துணைநின்று காக்கின்ற பொருள்கள் ஆகா
தப்பாக்கிப் பகைசெய்யும்; மனத்தின் தூய்மை
தற்காப்புப் படையாகும் அன்பு சேர்க்கும்,
எப்பார்க்கும் நல்லவனும் பெரியோன் காந்தி
இக்கருத்தை எடுத்துரைத்துச் செயலிற் காட்டிச்
செப்பரிய புகழ்காத்து மக்கள் எல்லாம்
செம்மைநெறி செல்லவழி காட்டி நின்றான்

*

3

அழுக்காறு வெகுளியவா இய சொற்கள்
அழித்தொழித்துக் கனிவுடைய அன்பி னின்றும்
வழுக்காது செல்கின்ற நெஞ்சம் கொண்டோர்
வாழ்கின்ற நாட்டினையே அறிவு மிக்கோர்
இழுக்கில்லா நாகரிக நாடாம் என்பர்,
இந்நாட்டைப் பிறநாட்டார் புகழ்தல் எல்லாம்
ஒழுக்கத்தால் உயர்காந்தி தூய வாழ்க்கை
உண்மையினால் அன்றோநீர் உணர்தல் வேண்டும்

4

என்றென்றும் கெடுவதிலை தூய்மை யுள்ளோன்
இறந்தாலும் புகழொன்று நிலைத்து நிற்கும்;
அன்றிருந்த தமிழருளம் தூய்மை மேவி
அன்பொழுக்கம் அமைந்திருந்த ஒன்று லன்றோ
இன்றுபல துறைகளிலும் அடிமை யாகி
இருந்தாலும் தமிழகத்தின் சீர்த்தி மட்டும்
நின்றிருக்கக் காண்கின்றோம்; ஆத லால்நாம்
நிலைபெற்ற தூய்மைபெற்று வாழ்தல் வேண்டும்

# கவிமணி

நேரிசை வெண்பா

1

செந்தமிழ்க்கு வாழ்வளித்தோன்
சேர்ந்தோர்க்கு நண்பளித்தோன்
சிந்தையினைச் செம்மைக்கே
தந்துவந்தோன்-உந்திஎழும்
செய்யுளுக்கு வாயளித்தோன்
தேசிகவி நாயகனை
உய்யவரு வள்ளலென
ஓது

2

ஒன்றிரண்டு கற்றவுடன்
ஒப்புண்டோ இங்கெமக்
கென்றலைவோர் மிக்குவரும்
இந்நாளில்-துன்றியநல்
நூலுணர்வும் நுண்மாண்
நுழைபுலமும் வாய்த்தும் எப்
பாலும் பணிவதவர்
பண்பு.

3

ஆத்தங் குடியூரில்
அண்ணு மலையரசர்
போர்த்திப் புகழ்செய்தார்
பொன்னுடை-ஏத்தெல்லாம்
எற்கன்று தாய்த்தமிழுக்
கென்ற கவிமணியார்
நிற்கின்ருர் என்னுள்
நிறைந்து.

❖

# திரு. வி. க.

## எண்சீர் விருத்தம்

1

சமயங்கள் எத்துணையோ அனைத்தும் கற்றுச்
சமத்துவமே கண்டுணர்ந்தார் ; சைவர் புத்தர்
சமணரென்றும் கிறித்துமக முதிய ரென்றும்
சச்சரவேன் ? இறைஒன்றே உணர்க என்றார்
தமரென்றும் பிறரென்றும் காணார் ; நல்ல
தமிழ்நாடும் திராவிடமும் இந்தியாவும்
நமதென்பார் ; உலகம்நம தென்றும் சொல்வார் ;
நாகாக்கும் நாகரிகம் அமையப் பெற்றார்

2

காந்தீய நெறிநிற்பார், கடவுட் கொள்கை
கனிந்திருப்பார், பொதுவுடைமைக் கொள்கை ஒன்றே
சாந்தியினை அமைதியினை நல்கும் என்று
சமரசமே வேண்டிடுவார் ; எந்த நாளும்
தாந்தீமை கருதலிலார், எவரை யேனும்
தாழ்ச்சியுரை செப்பறியார், இனிய சொல்லே
ஈந்திடுவார் ; வேறுபடு கருத்துக் கொண்ட
எவரையுமே பகைத்தறியார், நண்பே காண்பார்

3

சமயமென்றும் தொழிலாளர் இயக்க மென்றும்
சார்ந்தோருள் எவரைவிரும் பிடுவீர் என்றால்,
சமயமுறின் பின்னவர்க்கே என்வி ருப்பைத்
தருவேன்என் றறுதியிட்டுச் சொன்ன சொல்லில்
இமயமலை பெயர்ந்தாலும் பெயரா வுள்ளம்
எதிர்ப்புக்கும் கொடுஞ்சிறைக்கும் அஞ்சா வூக்கம்
அமைய்வரு பெற்றியினர்; மார்க்சு சொன்ன
அறவுரையைத் தெளிவாக உணர்ந்த சான்றோர்

4

பெண்ணினமும் ஆணினமும் சமுதாயத்தின்
பெருமைமிகும் இருகண்கள்; பெண்மை என்னும்
கண்ணொளியைக் கெடுத்தனரே உலகோர் அந்தோ!
கருணைஒளிர் தாயினத்தைத் தாழ்த்தல் நன்றோ?
எண்ணிவிடின் நோகின்ற தென்றன் நெஞ்சம்
ஏனிந்த ஓரவஞ்சம்? நேர்மை வேண்டும்;
பெண்மைஇன்றி ஆணில்லை அதனால் பெண்மை
பேணிடுக சமுதாயம் தழைக்க என்றார்

5

பெற்றெடுத்த தமிழ்த்தாயின் பாலை உண்டோன்
பெறுமின்பம் உயிரின்பம்; வீடு பேற்றை
எற்றுக்காம் எனக்கருதச் செய்யும் அந்த
இன்பமது என்றார்;தாய் மொழியை நன்கு
கற்றபிற கயல்மொழியைக் கற்றல் வேண்டும்
கனித்தமிழை உயிர்த்தாயைத் தவிக்க விட்டு
நிற்றல்பெரும் பிழைஎன்றார்! தாய்த விக்க
நினைப்பாரோ எவரேனும் அறமே செய்ய?

## 6

அன்புமிக்கார் ஆனாலும் அடிமை ஆகார்,
அறிவுமிக்கார் ஆயினுமே செருக்குக் கொள்ளார்,
பின்புமவர் பணிவுமிக்கார் இருந்தும் அன்னார்
பெருமிதத்திற் கடுகளவும் குன்றார், எங்கும்
இன்புமொழி பேசினுமே கருத்து வேறு
காணுங்கால் இடித்துரைக்கத் தவறார், நெஞ்சில்
வன்பில்லார் எனினும்நல்ல உறுதி கொண்டார்,
வரும்ஆசை அற்றார்தாம் துறவி அல்லர்

## 7

தொண்டுள்ளம் பழமைஒளிர் புதுமை உண்மை
தூய்மைஅன்பு தமிழ்நெஞ்சம் பொதுமை பெண்மை
கண்டன்ன இனியமொழி எளிமை நண்பு
கருத்தீர்க்கும் சொல்வன்மை அறிவு கல்வி
விண்டுரைக்க இயலாத அமைதி வீரம்
வினைஇன்னா செய்யாமை ஆன்ற விந்து
கண்டடங்கு கொள்கைஎன அறமாம் என்று
காணுகின்ற அத்தனையும் அமைந்த சான்றோர்

# மணிவிழா வாழ்த்து

### எண்சீர் விருத்தம்

**1**

தமிழுருவே! தமிழ்காக்கும் போர்க்க ளத்தே
தலைநிமிர்ந்து முன்னிற்கும் இளைஞ ரேறே!
தமருடனே மலர்முகத்துத் தமக்கை சேர்த்துப்
பொதுப்பணியே தம்பணிஎன் றுற்றும் செம்மால்!
இமையளவும் ஓய்வின்றி உடல்பே ணமல்
இரவுபகல் உழைக்கின்ற தாத்தா! இந்நாள்
உமையனுக்கும் நலமிக்க அறுபான் ஆண்டு
நிறைவினைக்கண் டுளம்நிறையஉவப்புக்கொண்டேன்

**2**

போர்வாளும் விடுதலையும் விகடன் கல்கி
பொதிந்துள்ள பையொன்று கையில் உண்டு
சேர்வாரும் சேராரும் வேறு கொள்கை
செல்வாரும் நும்சொல்லில் அடங்கி நின்று
நேர்வருவார் எனுமுண்மை காட்டும் அப்பை;
நெடுஞ்சூழ்ச்சி நம்மொழிமேல் போர்தொ டுத்தால்
நேர்நிற்க உரமுண்டென் றெடுத்துக் காட்ட
நிலத்தூன்றுத் தடியுண்டு மற்றோர் கையில்

3

இந்நாட்டுத் தமிழ்ப்புலவர் உரிமை யின்றி
இழிநிலையில் உள்ளநிலை கண்டு வெம்பி
என்னுட்டுத் தமிழ்ப்புலவர் ஒன்று சேர
ஏற்றமுற உரிமைபெறக் கழகம் கண்டீர்!
தென்னாட்டு மொழியறியா நிலையில் இங்கே
திணித்துவிட்ட முதலிந்திப் போரில் இந்தி
வெங்காட்டச் செய்தசெயல் எண்ணிப் பார்ப்பின்
விசையொடிந்த உள்ளத்தே வீரம் தோன்றும்

4

சிறியர்க்கும் தமைமதித்தால் பணிவு காட்டிச்
செல்வத்தால் மற்றவற்றுல் பெரிய ரேனும்
சிறிதளவு தருக்குற்றுல் மதித்தி டாமல்
செம்மாந்து செல்சங்கப் புலவர் தம்பால்
நிறைந்திருந்த தன்மதிப்பு நும்பால் கண்டேன்
நேராரும் வயமாகும் இன்சொல் கொண்டீர்!
நெறிபிறழாத் தகவுடையீர்! அறுபான் ஆண்டு
நிறைவுபெறும் நன்னுளில் வாழ்த்து கின்றேன்

5

எனதுதிரு மணம்நடத்தித் தந்த தன்மை,
என்கவிதை சிறுகதையை நோக்கி உண்மை
மனமுடனே பாராட்டும் பெருமை தன்னை,
மாணவர்க்குத் தமிழ்சொல்லி அயர்ந்து வந்தால்
கனிவுடனே "முடியரசன்!" என்று தோள்மேல்
கையிட்டுச் சிற்றுண்டிக் கடைக்குச் செல்லும்
இனியன்பை, நான்துணைவி பிரிவால் வாடி
நலிந்திருக்க அக்குறிப்பை முகத்தால் நோக்கி

6

பொருள்தந்து போய்வாவென் றென்னைப் போக்கிப்
பூரித்த தகவும்"சிங் கார வேலன்
பொரிநெருப்பு முடியரசன் குளிர்நீர்" என்ற
பொன்னுரையும், எம்மிடத்துக் குறைகள் காணின்
கருவிழியும் செவ்விழியாய்ச் சினந்தும் அந்தக்
கணப்பொழுதேஅருள்பொழிந்தும் பொதுப்பணிக்கே
இரவுபல விழித்தெம்மை ஏவும் ஏவல்
இத்தனையும் தாத்தா!நான் மறத்தல் ஆமோ?

7

உழைப்பவர்க்கே உரித்தாய பொங்கல் நாளில்
உயர்தமிழைத் தமிழினத்தை ஓங்கச் செய்ய
உழைப்பதற்கே உரம்பெற்று வாழ்க! என்றென்
றுமையின்று முழுமனத்தால் வாழ்த்து கின்றேன்
குழைத்தெடுத்த தேன்பொங்கல் உண்ணும் போழ்து
கூறுகிறேன் வாழ்த்துரையை மயிலை முத்தே!
மழைத்துளியால் வளர்பயிர்போல் நும்மு ழைப்பால்
வாழ்கதமிழ் ஆட்சிபெற்று வாழ்க! வாழ்க!

# பாரதிதாசன்

அறுசீர் விருத்தம்

1

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையினன்
பாழான பழமை வேண்டான்
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வான்
மனத்தில்எழும் புதுக்க ருத்தை
வேண்டியமட் டுங்கொடுப்பான் வீரத்தை
ஊட்டிடுவான் ஊழிக் காலம்
தாண்டியநல் தமிழ்மொழிமேல் மீசையின்மேல்
தணியாத காதல் கொண்டான்

2

இனிஅஞ்சார் தமிழ்மக்கள் தமிழுக்கோர்
இடுக்கண்இனி வருதல் இல்லை
கனிமொழியில் காதலைத்தான் பகுத்தறிவுக்
கதிரைத்தான் காட்டி விட்டான்
நனிமகிழ்ந்து தமிழரெல்லாம் போற்றுகிறார்
நம்மினத்தார் விளங்கப் பாண்டி
இனிதளித்த பரிசிலவன் எதிர்ப்பஞ்சா
இயற்கவிஞன் ஏறு போல்வான்

3

கடவுளரைப் பாடிமகிழ்ந் ததன்பிறகு
காலத்தை எதிர்த்து நின்று
மடமையினை மாய்த்திட்டான் பாரதியின்
தாசனென மதிப்பும் பெற்றான்
திடமுடனே அவன்கருத்தைச் செப்புகிறான்
தீந்தமிழின் உரிமை காக்க
உடல்கொடுப்பேன் என்கின்றான் அவனளிக்கும்
ஓவியங்கள் வாழ்க நன்றே!

4

எண்சீர் விருத்தம்

கலைப்பெயரால் கதைகட்டிப் பாழ்ப டுத்தும்
கருத்தொதுக்கிப் புதுநெறியிற் சென்ற போதும்
இலக்கணத்தைப் புறக்கணியான் தமிழி யக்கம்
எனச்சொல்லி மொழிவளர வழிகள் தந்தான்
மலைப்பெய்தா எளியநடைக் கவிகள் தந்தான்
மனம்கவரக் 'குயில்'இதழால் இசைத்த பாடல்
கலைக்கடலாம் அவன்தந்த நாட்டு வாழ்த்து
கருத்துக்கு நல்விருந்தாம் இசைப்பெ ருக்காம்

5

இனத்திற்குள் பகைகொண்டு சாதிச் சேற்றில்
இணைந்திருந்த நானதனை மறக்க ஊக்கம்
எனக்கூட்டிக் கரைசேரச் செய்த தந்த
இயற்கவிஞன் பாடலொன்றே! மணந்த பின்னர்
மனக்கவலை ஒழித்துவளர் இன்பம் பொங்க
வாழ்வதற்குக் குடும்பவிளக் களித்தான் அன்னான்;
வனப்புடைய கவியுலகைக் காண எற்கு
வழிகாட்டித் திருப்புமுனை ஆகி நின்றான்

# தமிழர் தந்தை

## எண்சீர் விருத்தம்

1

தீமைதரும் தமிழ்ப்பகைவர் தம்மைச் சார்ந்து
திருநாட்டின் பெருமையினை, தமிழ்ப்பண் பாட்டை
ஏமமுறும் இலக்கியமாம் செல்வந் தன்னை
இத்தனையும் அழித்தொழித்தோம்; அந்த நாளில்
ஊமையென இருந்தானா? இல்லை இல்லை;
உயர்தந்தை கடமைகளை உணர்ந்த மேலோன்
தீமையென இடித்துரைத்தான் பகைவர் தம்மைச்
சேராதீர் எனப்புகன்றான் எங்கள் தந்தை

2

இனிமைமிகு தமிழ்மொழியைப் படித்தல் இன்றி
இங்குவந்த சழக்கரையே கூடி நின்று
கனிவுதரும் அவர்பஞ்சப் பேச்சில் சிக்கிக்
கண்கலங்கி நின்றிருந்தோம், அந்த நாளில்
நனியன்பு மிக்கநல்லான் "மக்காள்! அந்தப்
புல்லுருவி நாடாதீர்! உறிஞ்சித் தீர்ப்பர்
இனிஉங்கள் தமிழ்பயில்வீர்" என்றே எம்மை
இடித்துரைத்துத் திருத்தினன்காண் எங்கள் தந்தை

3

புதுமைமிகு இலக்கியமாம் செல்வம் தந்தான்,
 புரட்சிசெய வீரரென ஆக்கி விட்டான்,
பதுமையென வாழாமல் தமிழ மக்கள்
 பகுத்தறிவால் அவைமுன்பில் இருக்கச் செய்தான்
எதுகையுடன் மோனைபெறும் கவிதை யாக்கும்
 இளங்கவிஞர் பரம்பரையைத் தோற்று வித்தான்,
அதுவன்றித் தமிழ்நலமே நாடு கின்றான்
 அக்கவிபாரதிதாசன் தந்தை யன்றோ?

# வாழ்த்துகிறார்

எண்சீர் விருத்தம்

1

பின்னணியில் நின்றஒரு சமுதா யத்தைப்
பிறரோடு சமமாகக் கொணர்வான் வேண்டி
முன்னணியில் நின்றமையால் வெற்றி பெற்றான்,
முற்போக்குக் கொள்கைகளை முரசங் கொட்டிச்
சொன்னபடி வாழ்க்கையிலும் செய்து காட்டிச்
சுயநலத்தார் வகுத்தமைத்த சாதிச் சூழ்ச்சி
பின்னடையச் செய்தானென் றிளைஞர் எல்லாம்
பெருமகிழ்வால் வாழ்த்துகிறார் வாழ்க என்றே

2

பெண்ணினத்தை அச்சுறுத்தி விதவை என்ற
பெருங்கொடுமை வழக்கத்தைப் பழக்க மாக்கிக்
கண்விழித்துப் பாராமல் தாழ்த்தி வந்தோம்;
கண்சிவக்க மனம்பதறத் துடித்தெ ழுந்தான்,
எண்ணியிவண் மறுமணத்துக் கழகம் கண்டான்,
எத்தனையோ மகளிர்க்கு வாழ்வு தந்து
கண்ணிறங்கும் நீர்த்துடைத்தான் ஆத லாலக்
காரிகையார் வாழ்த்துகிறார் வாழ்க என்றே

### 3

நகைமுகத்தன், இன்சொல்லன், குறைகள் காணின்
நாகரிக வன்சொல்லன், தமிழிற் பாடாப்
பகையுளத்தார் நாணும்வகை பேசும் ஆற்றல்
படைத்தவன்நம் தமிழிசையே தமிழர் நாட்டில்
மிகப்பெருகப் பணிபுரிந்தான், சமயப் பேரால்
மிகைசெய்தோர் மறைந்தொதுங்கச் செய்தான், நல்ல
தகையுளத்தன், சீர்திருத்த நோக்கங் கொண்டான்
ஆதலினால் தமிழரெலாம் வாழ்த்து கின்றார்

### 4

நேரிசை வெண்பா

ஆண்டறுப தானாலும்
அன்றேபோல் இன்றளவும்
காண்டகுநல் தோற்றத்தன்
காசினியில் - மீண்டும்பல்
ஆண்டாண்டு வாழ்ந்திடுக
அண்ணன் முருகப்பன்
ஈண்டும் புகழோ
டிருந்து

### 5

கம்பன் புகன்றதெனக்
கட்டுரைத்த பாக்கடலுள்
நம்பிக் குளித்து
நலங்கண்டான் - அம்புவிக்கு
முத்தெடுத்துக் கோத்து
முழுநூலில் தந்திட்டான்
நத்துதமிழ்ப் பாவை
நயந்து

6

முத்தெடுக்க மூழ்கி
முருகப்பா பட்டதுயர்
தித்திக்கும் செந்தமிழே
தேர்ந்துணரும்-வைத்திருந்த
தஞ்சைமன்னன் ஏடுரைக்கும்
தக்கபுல வோர்குழுவின்
நெஞ்சுரைக்கும் இவ்வுலகில்
நின்று.

# வாயுறை வாழ்த்து

எண்சீர் விருத்தம்

1

திருத்தக்கன் தருசிந்தா மணியில் இன்பத்
தேனுண்டு சங்கத்து நூல்தி ளைத்துச்
சிரித்துவரும் தமிழண்ணல்! நாச்சி யப்பத்
திருவாளர் தருசிந்தா மணியை இல்லின்
பொறுப்பேற்கும் காதலியாய்ப் பெறுதல் கண்டு
பூரிப்புக் கொள்கின்றேன்; உங்கள் வாழ்வு
கருத்துவளர் காவியமும் புலவ னும்மாம்,
கவிநயமாம் பெறுமக்கள் என்ன வாழ்க

2

தான்சமைத்த சுவையுணவை இனிதென் றுண்ணும்
தலைவனைக்கண் டுளமகிழ்ந்தாள் தலைவி என்று
நான்சுவைத்த குறுந்தொகைப்பாட் டுரைக்கும் அந்த
நலமேபோல் சுவைவாழ்வு வாழ்க தோழி!
தேன்பழுத்த தமிழ்மொழிக்கே ஆக்கந் தேடும்
தெளிவுரைகள் ஆய்வுரைகள் எழுத வல்லான்
மேன்மக்கள் குழுவில்இவன் அறிஞன் என்ன
மிளிர்வதுநின் கையில்தான் உணர்தல் வேண்டும்

3

அனிச்சத்தின் மலர்மோப்பக் குழையும் என்பர்
அன்பன்முகம், உளம்திரிந்து நினைத்தால் வாடும்
மனத்திருக்கும் உண்மையினை நின்பால் சொன்னேன்
மாதரசே! அடைக்கம்மை நல்லாய்! என்றன்
இனித்திருக்கும் நண்பன்முகம் சுருங்கா வண்ணம்
இல்லறத்தைப் பேணிடுக இனிய பேசி
மனக்கினிய செய்திடுக குறிப் பறிந்து
மனைவிளக்காய் அவன்மகிழ வாழ்க வாழ்க

4

ஒருவர்பிழை பொறுத்திடுதல் இருவர் நட்பாம்
உயர்நூல்கள் பயின்றாலும் வாழ்க்கை ஏட்டில்
ஒருவருளம் பிறர்பயில வேண்டும்; வேண்டின்
உண்மைநிலை இன்பநிலை காணல் வாய்க்கும்;
பெருகிடுநல் வாழ்வுக்கு மனைவி மக்கள்
பேரணியாம் மங்கலமாம் என்பர் ஆன்றோர்;
அருகிருந்து திறந்துள்ளம் அளவ ளாவும்
அன்புளத்தன் உயிர்நண்பன் ஒளிவி ளக்காம்

5

உளமொத்த இரட்டையராய் உடன்பி றப்பாய்
உணர்வொன்றாய்ப் பழகிவரும் நண்பன் தன்னை
உளமொத்த துணையாகக் கொள்க என்றே
உன்கையில் அடைக்கலமாத் தந்தேன்; எங்கள்
உளமொத்த வாழ்வேபோல் வாழ்க அன்பை
உயிரென்று போற்றிடுக; இன்பம் பொங்க
வளமிக்க தமிழ்பாடும் என்றன் நாவால்
வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன் வாழ்த்துகின்றேன்

# கா அப்பா

எண்சீர் விருத்தம்

1

செந்தமிழைப் பயின்றமையால் தலைமை பெற்ற
சிலரிங்குத் தமிழுக்கே ஊறு தேடி
வந்ததுண்டு; தமிழ்வாழ முயல்வா ராயின்
வாழ்வுகெடும் புகழில்லை பொருளும் இல்லை
இந்தநிலை இருந்தமையால் அஞ்சி யஞ்சி
இருந்தார்கள் ; ஆனால்நீ தமிழைக் காக்க
எந்தநிலை நிகழ்ந்தாலும் தயங்க வில்லை
எவருக்கும் அஞ்சவில்லை துணிந்து நின்றாய்

2

பன்மொழிகள் பயின்றவர்கள் நமது நாட்டில்
பலர்பலராய் இருக்கின்றார்; தமிழைக் காக்க
நன்முயற்சி அவரெல்லாம் செய்த துண்டா ?
நாமுண்டு சோறுண்டென் றிருந்து விட்டார்;
முன்வந்து முயல்பவரைக் குறையும் சொல்வார்
முத்தமிழைச் செந்தமிழைப் பழித்துக் கூறும்
புன்மொழியும் புகன்றிடுவார் இவர்கள் எல்லாம்
புலவரெனத் தமிழகத்தில் திரியக் கண்டோம்

3

நுண்ணறிவுத் திறமுடையாய்! நீயும் இங்கு
　　நுனித்துணர்ந்தாய் பலமொழியும்; ஆயி னும்நம்
பண்ணுயர்ந்த தமிழ்மொழிக்கே நின்றன் நெஞ்சைப்
　　பரிசளித்தாய்! தமிழ்ப்பற்றே மிக்கு நின்றாய்!
அண்ணலுன்போல் பன்மொழியிற் புலவர் என்போர்
　　ஆருள்ளார் தமிழ்காக்க? அதனா லன்றோ
கண்ணியத்தால் உயர்தமிழ்த்தாய் தீங்கு வந்தால்
　　கா அப்பா துரைமகனே என்று சொன்னாள்

4

அன்றொருநாள் தலைநகரில் ஒன்று கூடி
　　அறப்போரைத் தொடுத்தார்கள் நமது வீரர்
நின்றனை நீ முன்னணியில் நாட்டுப் பற்றால்
　　நிலைமறந்து துணிந்தங்கு நிற்கும் போழ்து
நன்றுடையாய்! பன்மொழியில் புலமை மிக்காய்!
　　நடமாடும் நூல்நிலையம் போன்றாய்! பண்புக்
குன்றனையாய்! தரமறியா அரசு செய்த
　　கொடுமைகளை நினைந்துவிடின் கொதிக்கும் நெஞ்சம்

5

பெற்றெடுத்த தாய்நாட்டைக் காத லித்தாய்
　　பேசுகின்ற செந்தமிழைக் காத லித்தாய்
பற்றெதற்குக் கொண்டனை நீ பாழும் நாட்டில்?
　　பன்மொழிகள் கற்றனையே யாது கண்டாய்?
பெற்றிருக்கும் திறமெல்லாம் புலமை எல்லாம்
　　பிழைப்புக்கு வழியாக்க முயன்றா யல்லை;
கற்றவனே! ஒருசிறிது தமிழைத் தாழ்த்திக்
　　கழறுவையேல் வளமெல்லாம் உனக்கே யன்றோ?

6

நின்வாழ்வு கருதுகிலே தமிழின் வாழ்வே
நிலையாக்கக் கருதுகின்ருய் மொழியும் நாடும்
பொன்வாழ்வு பெறுவதற்கே முயல்வோய்! நின்னைப்
போற்றுகின்றேன்; வாழ்த்துகின்றேன்; மானங் [கெட்ட
புன்வாழ்வு வாழ்பவர்கள் வாழட்டும்;நீ
புதுவாழ்வு தமிழ்வாழ்வு வாழ்க! நாளைத்
தென்னுடு வாழ்த்துவது நின்போல் வாழ்ந்த
தெள்ளியரை நல்லவரை யன்ருே? ஆம்ஆம்

7

உலகத்தில் முதன்மைபெறும் ருசிய நாட்டுக்
குடியமைத்தல் கண்டுவகை கொண்டோம்; முன்பு
பலகணவர்க் கொருமனைவி யாகி நின்ற
பாஞ்சாலி கதையுடனே இராம காதை
குலவியங்குக் குடிபோகக் கண்டோம்; நம்மோர்
குலப்பெருமை கூறுகதை நுழைய வில்லை;
நிலவுபுகழ் நம்பெருமை அனைத்துங் கொண்டு
நீதூது செல்கின்ருய் வாழ்த்து கின்ருேம்

8

நின்புலமைத் திறங்கண்டு மகிழ்ந்து போற்றி
நிலைத்தபுகழ்ப் பல்கலைசேர் கழகம் தானே
முன்வந்து பேரறிஞர் என்னும் பட்டம்
முறிஎழுதித் தந்திருக்க வேண்டும்; இன்னும்
அன்பதற்கு வரவில்லை யேனும் அங்கே
அமர்ந்துபணி ஆற்றுதற்கோர் பதவி தந்து
நன்மதிப்பைப் பெற்றதற்கு நன்றி சொல்வோம்
நாளைக்கே அப்பெயரும் வந்து சேரும்

9

மயலறுக்கும் நெறிமுறைகள் எழுதிக் காட்டி
மாந்தருக்கு வழிகாட்டி விளங்கும் நாட்டில்
இயலறிவு மொழியறிவு கல்வி கேள்வி
இத்தனையும் பெற்றிருப்பர் எழுத்தர் என்போர்;
பயனளிக்கும் இவ்வொன்றும் இல்லா ராகிப்
பாழ்பட்ட கதைகளையே எழுதிக் கொட்டிக்
கயிறுதிரிக் கின்றதிருக் கூட்டத் தாரே
காசுமிகும் எழுத்தாளர் இந்த நாட்டில்!

10

இவரெல்லாம் கூடியொரு சங்கம் கூட்டி
எழுத்தாளர் சங்கமெனப் பெயரும் சூட்டித்
தவறான வழியினிலே தமிழைக் காட்டித்
தந்நலமே வளர்த்தார்கள் பிழைத்தா ரன்றி
அவராலே தமிழுக்கோர் ஆக்கம் இல்லை
ஆணவத்தால் தீமனத்தால் தமிழில் நஞ்சைத்
தவறாமல் கலந்தார்கள்; சங்கந் தன்னில்
தமிழ்மரபில் பனிமூடிக் கிடக்கக் கண்டோம்

11

விடிபொழுதில் கீழ்வானில் சிவந்து காட்டி
விரிகதிர்கள் பரப்புமிளங் கதிரோன் தோன்றப்
படிமுழுதும் பரவிநிலம் மூடி நிற்கும்
பனிப்படலம் கரைந்துருகி மாய்தல் போல
முடிவில்லை என்றெண்ணிச் சங்கந் தன்னில்
மூடுபனி நின்வரவால் விலகக் கண்டோம்
விடிவுண்டு தமிழுக்கு நின்னால் என்று
மேலவனே பாடுகின்றோம் வாழ்த்து கின்றோம்

12

அன்றுமுதல் இன்றுவரை கொள்கைப் பற்றில்
அணுவளவும் பிறழாது நிலைத்து நிற்போய்!
என்றுமுள தென்றமிழ்க்குத் தொண்டு செய்ய
இடுக்கணுனைத் தொடர்ந்திடினும் கலங்கா நெஞ்சாற்
குன்றனையாய்! பொதுவாழ்வுக் குறிக்கோள் கொண்டாய்!
கூர்த்துணர்ந்து முன்னேற்றக் கருத்துங் கொண்டாய்!
இன்றுனை நான் வாழ்த்துவதாற் பெருமை கொண்டேன்
என்மனமும் நின்மனமும் ஒன்றாய்க் கண்டேன்

# பல்வகை உலகம்

# தூயில்

எண்சீர் விருத்தம்

1

*தொழிலாளி :*

காலையிலே துயிலெழுந்து நீரைப் பாய்ச்சிக்
களையெடுத்துக் கதிர்காத்துப் புவியைக் காத்தோம்
ஆலையிலே நூல்நூற்றோம் அவற்றால் நல்ல
ஆடைகளை ஆக்கிஉயர் மானங் காத்தோம்
மாலைவரை வீடுகட்டி மரமும் ஏறி
மடவாரை நகர்க்கனுப்பி உடல்அலுக்க
வேலைசெய்தோம் உணவில்லை, உறங்கச் சென்றோம்
வேதனையை மறந்திருக்கத் துயிலே! வாவா!

2

*முதலாளி :*

பெட்டகத்துப் பணம்நிறைத்துப் பூட்டி வைத்த
பெருஞ்சாவிக் கொத்தின்மேல் திண்டு வைத்துக்
கட்டில்மேல் விரித்திருக்கும் மெத்தை மீது
கண்ணயரச் சென்றேன்நான் கடைக் கணக்கும்
வட்டிவயல் வரவிருப்பும் செல்வம் இன்னும்
வரும்வழியும் எண்ணுவதால் உறக்கம் இல்லை
கட்டிவைத்த பொருள்கொண்டு வாங்கு தற்குக்
கடைச்சரக்கா அவ்வுறக்கம்? என்ன செய்வேன்!

3

**காதலன் :**

புத்தகங்கள் படித்துணர விரித்த போதும்
புதுக்கவிகள் எழுதிடநான் எண்ணும் போதும்
புத்தம்புதுப் படங்காணச் சென்ற போதும்
பொல்லாத துயிலே ! நீ தொல்லை தந்தாய் !
கத்துகுரல் புள்ளொடுங்க வருவேன் என்றாள்
கடையாமம் வந்துமவள் வந்தாள் இல்லை ;
இத்தனைபோழ் தாகியும்கண் மூட வில்லை
இரிந்தோடி மறைந்தாயோ காதல் முன்னே !

4

**காதலி :**

ாயொலியால் பெற்றோரும் விழித்து விட்டார்
நான்வருவேன் என்றவரும் காத்து நிற்பார்
தாயுள்ளம் காட்டாத தலையன் பைத்தான்
தந்திடுவார் என்றிருந்த எண்ணம் வீணாய்ப்
போயிற்றே ! எனைத்துயிலே நீயும் வஞ்சம்
புரிகின்றாய் ! நீவந்தால் கனவி லேனும்
போய்அவரைத் தழுவிடுவேன் அவரும் நானும்
புதுவுலகம் சென்றிடுவோம் நீவா ராயோ ?

5

**ஆசிரியன் :**

கண்ணிதழ்கள் அறியாமல் குவியப் பெற்றுக்
கைப்பொருள்கள் நழுவிவிழக் குறித்த ஒன்றைப்
பண்ணுங்கால் மெய்சோரக் கையும் சோரப்
பாதியிலே அச்செயல்தான் சோர்ந்து நிற்க
எண்ணங்கள் ஓடாமல் நிலைத்து நிற்க
இருக்கின்ற கடன்துயரும் வறுமை நோயும்
மண்ணகத்தில் மறந்திருக்க அமைதி எங்கும்
மருவிடநின் றுடுகின்ற துயிலே! வாழ்க!

## 6

**மாணவன் :**

நாடகங்கள் நிழற்படங்கள் காணும் போதும்
நண்பருடன் அரட்டையடித் திருக்கும் போதும்
ஊடகத்தே வாராமல் உதவி செய்தாய்!
உவகையுற்றேன் ; தேர்வென்னும் கூற்றுக் கஞ்சிப்
பாடங்கள் படிப்பதற்குத் தேநீர் மாந்திப்
பாடுபட்டுப் புத்தகத்தை விரித்து வைத்தால்
ஆடகத்தாள் பெயர்த்துநடம் செய்கின் றாயே!
ஐயையோ என்செய்வேன் ! துயிலே ! போபோ!

## 7

**திருடன் :**

எங்கள்குலம் காக்கின்ற துயில ணங்கே !
என்னகைம்மா றுனக்களிக்க வல்லோம் நாங்கள் ?
வெங்கொடுமை செய்துபணம் சேர்த்து வைத்தோன்
வெளிமாடிக் கட்டிலிலே உறங்கு கின்றான்
பொங்கிருட்டில் உழைப்பாலே சோர்ந்து மற்றோர்
புரளாமல் கண்ணயர்ந்தார் ; கன்னக் கோலைத்
தங்குதடை இல்லாமல் சாத்து கின்றோம்
தாயே ! நீ இல்லைஎனில் ஏது வாழ்வு ?

## 8

**துறவி :**

எனையாளும் இறைவா ! உன் அடியைப் போற்ற
இளங்காலை நீராடிப் பூசை செய்வேன்
வினையாளர் பரிமாறச் சுவைசேர் உண்டி
விதவிதமாய் உண்பேன்பின் பழமும் பாலும்
நினையாத போதெல்லாம் முன்னே நிற்கும்
நிறைபணமும் வசதிகளும் நிறையப் பெற்றும்
மனையாளாய்ப் பெண்ணொருத்தி இல்லை என்ற
மனக்கவலை கௌவியதால் உறக்கம் இல்லை.

# ஏது வாழ்வு ?

எண்சீர் விருத்தம்

1

ஈன்புற்றுப் பசிப்பிணியாற் கிடைத்த சோற்றைத்
துடிதுடித்து விழுங்குகிறான் அந்தச் சோற்றில்
மென்புழுவோ பிறபொருளோ கிடப்ப தோரான்
மேதினியில் இயற்கைஎழில் காணா கில்லான்
கன்னெறியிற் கோலூன்றி நடக்கும் போழ்து
காலிடறி வீழ்கின்றான் பெற்ற கண்கள்
நன்னிலையில் இல்லாத தாலே இந்த
நானிலத்திற் பிச்சையலால் ஏது வாழ்வு ?

2

காலொன்றும் கையொன்றும் அற்றான், மானம்
கந்தல்மிகு துணிகொண்டு காப்பான், மூங்கிற்
கோலொன்றின் துணைகொண்டு நகர்வான், பற்றுக்
கோடொன்றும் வாழ்வதற்கிங் கில்லான், அன்னான்
மேலொன்றும் பெருநோயின் கொடுமை தாங்கி
வெளியிடத்தே வாழ்கின்றான்; அந்த வாழ்வு
மேலென்று காக்கஉயிர் விழைந்தால் வாழ
விழைந்தவற்குப் பிச்சையலால் ஏது வாழ்வு ?

3

உறுதுணையாய் வேறெவரும் இல்லான், உண்ண
ஒருவழியும் அறியாதான், எழுத்தும் எண்ணும்
பெருவகையும் காணுதான், கோவில் வாயில்
பெரியவர்கள் சிதறவிடும் தெங்கின் காயை
மறுசிறுவர் பொறுக்குதற்கு மனமில் லாமல்
மல்லுக்கு நிற்பான், அவ் வாயில் ஒன்றே
உறுமனையாய் வாழ்சிறுவன் பிச்சை யின்றி
உயிர்வாழ எண்ணினவற் கேது வாழ்வு?

❖

# மாதவி

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆரிய மாக்கள் அவர்நிலம் விட்டுச்
சீரிய உயர்தனிச் செம்மொழி வழங்கும்
தமிழகம் புகுந்து தறுகண் அருள்நிறை
தமிழர்க் கெல்லாம் தகுநிறை கற்பினைச்
சொற்றனர் எனச்சில கற்றோர் செப்பினர்;
நற்றகு மரபினர் கற்பறி யாரோ?
நன்றோ இதுவென நானயர்ந் திருந்தேன்;
துன்றிய அரசினைத் துறந்திடு தூயோன்
இளங்கோ என்முன் தோன்றி "மனத்தைத்
துளங்க விட்டாய் துயருனக் கேனோ?
என்றனர்; என்துயர் இதுவெனச் சொன்னேன்;
"மதியிலி கேட்பாய்! மாதவி வாழ்வு
புதுவ தன்றே புகல்வதை யறியாய்!
ஆட்டம் பயின்றாள், அரசனும் விரும்பும்
கோட்டமில் குணத்தாள், கோவலன் றன்மேல்
நாட்டங் கொண்டாள், நல்லற மென்னும்
இல்லறம் பூண்டாள், எழில்மணி மேகலைப்
பேறும் பெற்றாள்இப் பெரிய வாழ்வு
மாறுமோர் நாளென மனத்திலும் நினையாள்

ஆயினும் அந்தோ அரசன் பிழையால்
ஆயினன் பிணமென அறைந்தனர் அறிந்தோர்;
தீதிலாக் கோவலன் தீர்ந்தனன் என்ற
தீமொழி கேட்டுத் திகைத்தனள், பதைத்தனள்;
போம்வழி யாதெனப் புலம்பினள், அன்புடைக்
கொழுநன் மாண்டான் குவலய வாழ்வு
தழுவுதல் வேண்டாள், தன்பொருள் யாவும்
அறத்திற் காக்கி அறவணர்ச் சார்ந்து
புறச்செல வொழிந்து புகுந்தனள் பள்ளி.
இன்பந் துறந்தாள், இசைநடந் துறந்தாள்,
என்பும் அன்பால் இளகிடப் பெற்றாள்,
அதனுடன் அமையா தருள்மணி மேகலை
பித்துல கறுத்துப் பெருநிலை பெறவே
துறவு பூணத் தூய்மை யாக்கினள்.
மறமனத் தாயின் மாற்றம் வெறுத்தாள்
இனையள் அன்னை என்னுயிர் மாதவி
அனையள் பிறந்த அருமை நாட்டில்
மானமே மதிக்கும் மாந்தர் வாழ்ந்தனர்
இங்கோ வந்தவர் இசைத்தனர் கற்பை?
ஆரிய இலக்கியம் அரிவையர் பண்பைச்
சீரிய முறையில் செப்பிய துண்டோ?
இழிவாம் இழிவாம்" என்றவர் மறைந்தார்
நன்றவர் மொழியே வாழிய கற்பே.

# உள்ளம்

## எண்சீர் விருத்தம்

1

இல்லாத பொல்லாத செயல்கள் கூறி
இதற்கென்றே வாழ்கின்ற உள்ளம் உண்டு;
நல்லவரைக் கெடுத்தொழிக்கும் அன்பைத் தீய்க்கும்
நாயகற்கும் மனைவிக்கும் பகையை ஆக்கும்
கொல்லவரும் பாம்பென்னக் கொடுமை செய்யும்
குடும்பத்தில் உடன்பிறப்பில் பிளவுண் டாக்கும்
சொல்லரிய போர்மூட்டும் தீமை செய்யத்
துணிவுதரும் அவ்வுள்ளம் கூனல் உள்ளம்

2

முடிச்சுள்ளம் எனும்பேரே இதற்குச் சாலும்;
முதலில்ஒரு நண்பரிடம் குறைகள் சொல்லும்
அடுத்தகணம் ஓடோடி மற்றோர் தம்மை
அடுத்திருந்து முதலவரைத் தாழ்த்திக் கூறும்
படித்தவரைப் பழித்துரைக்கும் கட்சி பேசிப்
பாழ்படுத்த முனைந்துநிற்கும் இந்த ஒன்றே
தடித்திருக்கும் கூனுள்ளம் வாழும் மட்டும்
தரணியிலோர் அமைதியிலை பகையே மூளும்

3

அமைச்சர் உறுப் பினர்முதலாம் பதவிக் காக
அலைபவரைக் காண்கின்றோம், நகரின் ஆட்சி
அமைக்கின்ற உறுப்பினராய் வெற்றி பெற்றால்
அருச்சனைகள் எத்தனையோ செய்வர்; ஆட்சி
சுமக்கின்ற பொறுப்பிருந்தால் போதும் என்று
சூழ்ச்சிகளை வகைவகையாய் இழைப்பர் அந்தோ!
இமைப்பொழுதும் சுகம்காணு ஆசை யுள்ளம்
இளிவந்த செயல்நாணுப் பதவி உள்ளம்

4

வீட்டுரிமை சொத்துரிமை பிரிக்கும் போழ்து
வியனுக ஒன்றிருந்தால் பொறுத்தி ருக்க
மாட்டார்கள் உடன்பிறப்பென் றெண்ணுர் ஓடி
வழக்குரைக்கும் அறமன்றம் ஏறி அங்குக்
காட்டிடுவர் தம்திறமை, எஞ்சி யுள்ள
கைப்பொருளை மன்ருடி காலில் வைத்துப்
போட்டழுவர் பயனென்றும் காணு கில்லார்
பொருமையுளம் இவருள்ளம் பொக்கை யுள்ளம்

# வளரக் கெடும்!

நிலைமண்டில ஆசிரியப்பா

கூறுநடை நடந்து கூடி ஒன்றாய்க்
கோழியின் குஞ்சுகள் குலவி யிருந்தன ;
எச்சில் இலைகள் இன்னும் பற்பல
மிச்சில் எல்லாம் மிதந்து கிடக்கும்
குப்பைக் கோட்டில் கூர்உகிர் விரலால்
கிளறிக் கிளறிக் கிடைத்ததைக் கோழி
குஞ்சுகட் களிக்கக் கொக்கரித் ததுவே;
பறந்து வந்தன பச்சிளங் குஞ்சுகள்,
மொய்த்திடும் அவற்றுள் முந்தித் திறக்கும்
மென்சிறு வாயுள் வன்பெரு மூக்கால்
கொஞ்சிக் கொஞ்சிக் கொடுத்தது கண்டேன்;
அடடா அடடா! அன்னையின் அன்புக்
கேதடா உலகில் ஈடும் எடுப்பும் ?
அஃறிணைப் பிறப்பும் அன்னையின் அன்பால்
பின்னிக் கிடக்கும் பெருநிலை உணர்ந்தேன்;
அவைகள் யாவும் அஞ்சிட ஓர்குரல்
வானிற் கேட்டது; வட்ட மிட்ட
பருந்து வந்து பாய்ந்தது; கோழி
தன்முழு வலியால் தாக்கி விரட்டும்

தகவு கண்டு தாய்மைப் பண்பை
மேலும் வியந்தேன், சின்னுட் சென்றன
குஞ்சுகள் பெரிய கோழிகள் ஆயின;
குப்பையை அன்னைக் கோழி கிளற
இரைபெறும் நோக்கால் இளைய கோழிகள்
ஓடி வந்தன; உடனே இரைதனைக்
கொடுக்க மறுத்துக் கொத்தி விரட்டிய(து)
ஒற்றுமை காணேன், உயர்ந்த அன்பைக்
காணேன், பகைமை கண்டேன் அந்தப்
பேதைக் கோழியின் பிழையினைக் கண்டதும்
உலகில் நடக்கும் ஒன்றனை யுணர்ந்தேன்;
ஈயும் எறும்பும் இருந்திடப் பொறுஅள்
தன்மகன் நோயுறின் தான்மருந் துண்பாள்.
அன்பின் உச்சியில் அமர்ந்திருப் பாள்தாய்
பெரியோன் ஆன பின்னர்த் திருமணம்
நடத்தி மகிழ்வாள் நாட்கள் சென்ருல்
அன்பை மறப்பாள் அருமை மகனென
எண்ணவும் செய்யாள் எழுப்புவள் பகையை
பூனையும் எலியும் போல நடப்பாள்
என்னே உலகம்! என்னே தாய்மை!
தாயும் கோழியும் தம்முள் ஒன்றென
வாழ்தல் நன்ருே? வாழின் இழிவே.

❖

# கம்பன் குரல்

வெண்கலிப்பா

கனவோடு துயில்கவ்வக் கண்மூடி நானிருந்தேன்
புனலோடி வளஞ்சேர்க்கும் பொன்னித் திருநாட்டில்

வருவிருந்து பார்த்திருக்கும் வாழ்வுடையார் சேர்ந்துறையும்
திருவழுந்தூர் எனப்புகலும் சிற்றூர் தனையடைந்தேன்

கம்பன் இருக்குமிடம் காட்டிடுவீர்! எனவினவ
அம்பொன் மணிமாடம் ஆய்கின்ற கலைக்கூடம்

மிகவுடைய, பொருள்அள்ளி மேலோர்க்குத் தருகின்ற
தகவுடைய, வள்ளன்மைத் தனவணிகர் நாடேகின்

காணலாம் எனப்புகன்றார் கண்டவர்கள் ; வந்ததிங்கே
வீணதுவோ எனக்கலங்கி விரைந்தேன் மிகவிரைந்தேன்

நாட்டரசன் கோட்டை நகரடைந்தேன் கம்பன்
கூட்டை மறைத்திருக்கும் கோவிலினை நான்கண்டேன்

வணங்கிமுகம் மேல்நிமிர்த்தேன் வானக் குடுமிதொடும்
மணங்கமழும் வெண்புகையின் மண்டலத்துள் ஒருருவம்

வந்துநின்று நின்விருப்பம் வாய்விட்டுக் கூறெனலும்
நொந்திருக்கும்என் மனத்துள் நுழைந்ததுகாண்பெருமகிழ்வு

ஐயாநீ வளர்கதையை அறிவிக்க வேண்டுமென்றேன்
பையாநான் வளர்கதையைப் பாவலர்கள் திரித்துவிட்ட

சரடு மிகவுண்டே என்னைஏன் சார்ந்துநின்ருய்?
கரடு முரடாகக் கட்டிவிட்டார் கவிவாணர்

உண்மைஎது பொய்மைஎது உணர்வதற்கோர் வழியில்லை
கண்மயங்கி நிற்கின்றேன் கதைகூறி அருளென்றேன்

முப்பொருளைச் செப்புகிற முதுமைப் பெருநூலாம்
முப்பாலை நன்கருந்தி, முச்சங்கக் கனிபிழிந்த

சாறருந்தி, காப்பியமாய்ச் சான்ருேர்கள் சமைத்துவைத்த
சோறருந்தி, நோய்நொடியின் சோர்வகற்ற மாமுனிவர்

தேடிவைத்த இலக்கணமாம் சிறந்த மருந்துண்டு
ஓடி விளையாடி உயரணிகள் பலபூண்டு

நான்வளர்ந்தேன்: இப்புவியோர் நாலுபேர் கூடிநின்று
தேன்வளர்ந்த தமிழ்மொழியைத் தெரியாத ஏழையிவன்

என்றுரைத்தார், என்நாவில் எழுதிவிட்டாள் காளிஎன்று
கொன்றுவிட்டார்என்னறிவைக்கூறுகிறேனின்னுங்கேள்

பொன்ரூ வளஞ்சுரந்து பொன்னி புனலூட்டிக்
கன்ருவின் அருளேபோல் காத்தருள நான்வளர்ந்தேன்

எனைக்காத்த தாய்நாட்டை எழில்கொழிக்கும்புனலாற்றை
நினைக்காத நாளெல்லாம் நீரருந்தா நாளாகும்

போற்றற் குரிய பொன்னிக்(கு) அடிமைஎன்றேன்
மாற்றலர்கள் கூடிநின்று மாற்றிவிட்டார் என்கதையை

காசுக்குக் கூடும் கணிகைஎனும் பொன்னிக்குப்
பேசும் அடிமைஎன மாசுபடப் பேசிவிட்டார்!

பாராளும் வேந்தர் பலபேர் எனைவளர்த்தார்
ஊராளும் குறுமன்னர் ஊட்டி வளர்த்தோர்கள்

ஏராளம், இருந்தாலும் இவ்வுலகைக் காப்பதற்கே
ஏர்ஆளும் வேளாளர் என்னை வளர்த்தவிதம்

ஓர்நாளும் நான்மறவேன் உப்பிட்ட என்தோழன்
காராளும் கையுடையான் காத்தான் சடையப்பன்

அன்னைக் குழைத்தெடுத்(து) ஆர அருத்திஉயிர்
என்பும் எனக்காக்கி இருந்தான் அவன்துணையால்

வறுமைத் துயரறியேன் வாட்டம் சிறிதுமிலேன்
அருமைக் கலையுணர்வும் ஆன்று மிகக்களித்தேன்

களிப்புணர்வு பொங்கிஎழக் காவியம் ஒன்றுகண்டேன்
அளிக்கருணை காட்டியதால் அந்நன்றி மறக்காமல்

உள்ளம் மிகவிரும்பி ஓவ்வோர் இடங்களிலே
வள்ளல் சடையப்பன் வளர்பெயரைப் பொறித்திருந்தேன்

பொறித்திருந்த காவியத்தைப் பூவுலகோர் ஏற்பதற்கு
நெறித்துறையில் அலைமோதும் ஸ்ரீரங்கத் தலத்துறையும்

முக்கோட்டு நாமத்தார் முன்வைத்தேன் அரங்கேற்றும்
சொற்கேட்டு மதவெறியால் சூழ்ச்சிபல செய்தார்கள்

இன்றென்றார் நாளை என்றார் இடுப்பொடிய வைத்தார்கள்
என்றென்றும் அவரிழைத்த இடுக்கண் மறப்பதில்லை

அவ்வளவில் விட்டாரா? ஆய்ந்துரைத்த என்கவியைச்
செவ்விய நன்முறையில் சேர்ந்துபலர் கற்றார்கள்

நன்மைக்கோ தீமைக்கோ நம்பும் படியாகப்
புன்மைக் கவிபலவும் புகுத்திவிட்டார் பெருத்துவிட்டேன்

அழுக்காறு கொண்டனரோ ஆசைமிகக் கொண்டனரோ?
இழுக்கான பலபாடல் இடைச்செருகி விட்டார்கள்

ஏடெழுதும் தேட்டாளர் எழுத்தாணி தவறியதால்
பாடங்கள் மிகப்பலவாய்ப் பல்கினவே படிப்பவர்கள்

உறும்பாடு கணக்கில்லை உரைஎழுதும் பேரறிஞா
கரும்பான தமிழ்விடுத்துக் கற்றவித்தை காட்டிவிட்டார்
என்பேரால் திருநாளென் றேறியவர் மேடைமிசை
என்பேரை ஒதுக்கிவன வான்மீகி ஏற்றத்தை
விளம்பினுர் அவன்பேரை விளம்பரங்கள் செய்தார்கள்
களம்புகுதற் கென்பேரைக் காட்டுகிருர் அவ்வளவே
நயவஞ்சர் சூழ்நிலையில் நான்வளர வழியில்லை
பயனென்றும் காணுமல் பதைபதைத்து நானிருந்தேன்
இந்நிலையில் என்நண்பர் எழுந்தார் உலகிற்கு
நன்னிலையில் என்கவியை நயமாக எடுத்துரைத்தார்
புயல்வண்ணத் தழகனையே புகழ்உயிராக் கொண்டுநின்ற
தயரதன்போல் என்கவியே தம்முயிராக் கொண்டிருந்தார்
நாடெல்லாம் என்பேரே நவின்றுவந்தார் அதன்பிறகே
கேடின்றி நான்வளர்ந்தேன் கேளென்ற தவ்வுருவம்
உன்புகழைப் பரப்பியஅவ் வுத்தமர்தாம் யாரென்றேன்
தென்பொதியக் குற்ருல டி.கே.சி நீயறிவாய்
இன்னுமொருஇளைஞருளார்எனைவளர்க்கும்கடம்பூண்டார்
பன்னும் புகழ்காரைப் பதியுடையார் மதியுடையார்
சொல்வேந்திச் சீதையுடன் சுரம்சென்ற முன்னவனை
வில்லேந்தி நின்று விழித்திமையாக் காத்ததுபோல்
விழிப்போடு காத்து வளர்க்கின்ற வீரரவர்
பழிப்பில்லாத் தொண்டுசெயும் பண்பார் கணேசனெனும்
நண்பரவர் ; அங்கேயே நாடறிந்த மற்ருெருவர்
நண்பருண்டு சுமந்திரன்போல்நல்லமைச்சர்எனைவளர்க்கும்
கருத்துடையார்நான்சொன்னகவியுணர்வார்
என்னுளத்தின்
கருத்தறிவார் உரைஎழுதிக் காக்கின்ருர் அன்னவர்தாம்

முருகப்பர் அருகிருப்பர் முத்தமிழின் சுவைசொல்லி
உருகவைப்பர் இத்தகைய உத்தமரால் வளர்கின்றேன்

இன்னுமோர் உயிர்நண்பர் இங்குண்டு யாரென்று
சொன்னவுடன் திகைக்காதே உண்மையினைச்
சொல்கின்றேன்

கண்மூடி வழக்கத்தைக் கடும்புயலே போலெதிர்த்து
மண்மூடச் செய்ய மனங்கொண்டார் திடங்கொண்டார்

கற்றறிந்த சொல்வல்லார் காஞ்சி புரத்துறைவார்
நற்செயல்கள் பலசெய்வார் நாடறியும் அவர்என்றன்

உயிர்த்தோழர் என்றந்த உருவம் புகன்றதும்நான்
அயிர்த்தேன்பின் அண்ணா துரையா எனக்கேட்டேன்

ஆமாம் அவரேதான்; அவர்வளர்த்த கதைசொல்வேன்;
ராமா எனச்சொல்வர் ராமன்பேர் தானறிவர்

காவிய நலனறியார் கவிதையின் சுவையறியார்
மேவிய கதையையெங்கும் மேலாகப் பேசிடுவர்

கதைகாலட் சேபம்என்று காணும் இடமெல்லாம்
கதைகதைப்பர் பக்திஎன்பர் கம்பன்யார் எனஅறியார்

எனைமறந்தார் எனைமறைத்தார் இராமனையேவளர்த்தார்கள்
நினைவிழந்தார் இவ்வண்ணம் நின்னாட்டு மக்களெல்லாம்;

அறியாமை இருளகற்ற ஆர்த்தெழுந்த ஈவேரா
பெரியார் எனைப்பற்றிப் பேசிவந்தார் அவர்படையில்

அப்போது தான்எழுந்தார் அண்ணா துரைநண்பர்
தப்பாக நடந்துவந்த தமிழகத்தார் விழித்துணர்ந்தார்

இப்போது தான்மக்கள் என்னை வளர்க்கின்றார்
தப்பேதும் உண்டோ? தமிழ்க்கவியின் சுவையென்றும்

கம்பன் கவிஎன்றும் காவியத்தின் பெருமைஎன்றும்
இம்பர் நலம்பயக்கும் எழில்ஓ வியம்என்றும்

பேசுகின்றூர் பாடுகின்றூர் பிறநாடர் போற்றும்வண்ணம்
தேசமெங்கும் என்புகழே செப்புகின்றூர் பூரித்து

வளர்கின்றேன் ஈதென் வளர்கதையாம் போய்வருவேன்
தளர்கின்ற நிலையின்றித் தாய்மொழியைப் பேணிடுக

தீமை படியவிட்டால் தீயில்தான் வீழ்ந்திடுவேன்
ஊமை எனநீங்கள் உம்மென் றிருக்காதீர் !

கன்னித் தமிழ்வாழக் காவியச் சுவைவாழ
உன்னிப்பாய் இருந்திடுக ஊறுசெய்வார் பலருண்டே

என்றுரைத்துப் புகையோ டேகிவிட்ட தவ்வுருவம்
நின்றிருந்த நான்வணங்கி நிமிர்கையிலே கைநழுவிப்

பொத்தென்று வீழ்ந்து புரண்டதுகைப் புத்தகந்தான்
மெத்தென்றபடுக்கைமிசைவிதிர்ப்புற்றுக்கண்விழித்தேன

கம்பன் புகன்றகதை கவிபாட உதவுமென்று
நம்பிக் கவிபுனைந்தேன் நான்

# இறப்பே வா!

எண்சீர் விருத்தம்

1

கனிந்தபழச் சுவைமொழியைக் கழறி நல்ல
களிப்பூட்டும் சிறுமகவு, தண்டெடுத்துக்
குனிந்துநடை தளர்கின்ற மூத்தோர், வீரம்
கொண்டஇளங் காளையர்கள், உலக இன்பம்
முனிந்தவர்கள், பிணியுற்றோர், அரசர், ஏழை
முதலாக உள்ளோரைப் பரத்தை போல
மனமுவந்து மருவுகின்றாய் என்னுரைக்கு
மறுப்புண்டோ இறப்பென்னும் எழிலணங்கே!

2

உன்னைக்கண் டஞ்சுகிறார் கோழை மாந்தர்;
உவக்கின்றேன் உனைத்தழுவ வருக மாதே!
பொன்னைப்போல் புழுவைப்போல் வருத்து நோய்போல்
பொல்லாத பாம்பினைப்போல் வந்தால் ஏலேன்
தன்னைப்போல் மாந்தரெலாம் எண்ணச் செய்யும்
தனிப்புரட்சி யுருவில்வரின் அணைத்துக்கொள்வேன்
மின்னைப்போல் வருபவளே இதழ்தா ராயோ?
மிடிபட்ட என்னினத்தை வெறுத்து விட்டேன்

3

மக்களபடும் இன்னல்கண் டஞ்சி நீக்க
மனம்வைத்துப் பாடுபடும் தொண்டர் தம்மை
மிக்குவரு காதலினால் அணைத்துக் கொள்ள
மிகக்கொடிய துப்பாக்கிக் குண்டாய் நஞ்சாய்க்
கொக்கரித்து வருகின்றாய் அதனைக் கண்டு
கொடியவள்நீ என்கின்றார்; புரட்சி என்னும்
மக்களைநீ பெற்றெடுக்க மருவு கின்றாய்
ஆதலினால் மதிக்கின்றேன் உன்னை நன்றே

# கண்ணீர்

எண்சீர் விருத்தம்

1

***காதல் உலகில்***

*கவலற்க தைத்திங்கள் வருவேன் என்று*
*காதலிபால் இனிதுரைத்துத் தேற்றிச் சென்றான்*
*அவளதற்கு மனமொப்பி ஆற்றி நின்றாள்;*
*அறுவடைகள் புரிந்துவளம் பொங்கும் தையை*
*உவகைத்தேன் பெருக்கெடுக்கத் தையல் கண்டாள்;*
*உளங்கவர்ந்து பிரிந்தவன்றன் வரவு நோக்கிக்*
*குவளைக்கண், நனிசிவந்து துயிலும் இன்றிக்*
*குளமாயிற் றவன்வாரா திருந்த தாலே*

2

*இடியிடித்து மின்வெட்டிக் குளிர்ந டுக்க*
*இருகையால் உடல்பொத்தி ஒடுங்கும் வண்ணம்*
*கொடிபிடித்து மழைபெய்யப் பிரிந்த காதற்*
*கொழுநன்இனும் வந்திலனே என்று சோர்ந்து*
*துடிபிடித்த இடையுடையாள் துவளும் போது*
*துணைவனங்குத் தோன்றியதும் புதையல் கண்ட*
*மிடிபிடித்தோன் உள்ளம்போல் துள்ளித் தாவும்*
*மிளிர்விழியில் மெருகிட்டுத் ததும்பும் கண்ணீர்*

3

**குழந்தை உலகில்**

அன்னையிடம் தின்பண்டம் கேட்டுப் பிள்ளை
அடுத்தடுத்து நச்சரிக்க, அச்சம் காட்டி
உன்னையிதோ கட்டுகிறேன் என்று கையை
ஓங்கிஒரு கயிறெடுக்க மிகச்சி வந்து
கன்னமதில் முத்துதிர்க்கும் அழகுக் கண்கள்;
கஞ்சிக்கும் வகையின்றித் தெருவில் சுற்றிச்
சின்னவர்கை யேந்துகையில் இல்லை என்று
சினந்துரைக்க நீர்சிந்தும் பசித்த கண்கள்

4

**குடும்பத்தில்**

நோய்வந்து மிகவருத்த உடல்மெ லிந்து
நொந்துழலும் சிறுமகவு துயரம் கண்ட
தாய்வருந்தி மனமுடைந்து பெற்ற நெஞ்சு
தாளாமல் சிந்துகிருள் கண்ணீர், அந்தச்
சேய்நிலையும் தாய்நிலையும் காணும் தந்தை
செயலற்று வழியற்று வறுமை அம்பு
பாய்ந்திருக்கும் மனப்புண்ணின் செந்நீர் போலப்
பாவமவன் விழிசிந்தும் கண்ணீர் வெள்ளம்

5

“திருமணமேன் செயத்துணிந்தேன்? பின்பு பிள்ளைச்
செல்வங்கள் பெற்றெடுக்கும் பிழையேன் செய்தேன்?
வறுமையுறும் மாந்தருக்கு வாழ்வும் உண்டோ?
வளர்செல்வம் பெற்றவர்க்கே வாழ்வாம்” என்று
பொறுமிமனம் வெம்பிஉல கோர்செய் கேலி
பொறுக்கஉளம் ஆற்ருமல் விம்மு கின்ருன்
குறுமனமும் இழிசெயலும் நிறைந்த பாரில்
கொட்டுகிருன் கண்ணீரை அந்தோ! அந்தோ!

6

*விதவை உலகில்*

வெண்மதியில் தண்மையுண்டு; வீசும் தென்றல்
விளைவிக்கும் நல்லின்பம்; அவளி டத்தும்
பெண்மையுண்டு, பருவஎழில் நிறைய உண்டு.
பேசுமொழி கிள்ளைஎன்பர், இருந்தும் அன்னுள்
பெண்மைநலம் காணுகிலாள், விதவை என்று
பெயர்வைத்துக் கொல்லுகின்ருர், உலகைக் காணக்
கண்ணிருந்தும் குருடாகிக் கண்ணீர் சிந்திக்
கயிறில்லாப் பம்பரம்போல் பாழாய் நின்ருள்

7

*தொழில் உலகில்*

வித்திட்டுப் பயிர்செய்து விளைச்சல் கண்டான்,
விதவிதமா ளிகைபலவும் ஆக்கித் தந்தான்,
முத்துக்குக் கடல்மூழ்கிப் பிழைத்து வந்து
முதலாளி உலகுக்கே ஒளியைத் தந்தான்.
புத்துக்குள் கைநீட்டும் செயல்போல் மண்ணுள்
பொன்னுக்கு நுழைகின்ருன், அவர்கள் எல்லாம்
மத்திட்ட தயிர்போல நெஞ்சு டைந்து
வாழ்வின்றிக் கண்ணீரைச் சிந்து கின்ருர்

8

*பொதுவாழ்வில்*

இவ்வண்ணம் மக்கள்படும் துயரம் நோக்கி
இவைநீக்கி நலங்கண்டு வாழ்வ தற்குச்
செய்வண்ணம் யாதென்று சிந்தித் தாய்ந்து
செயல்செய்ய அல்லலுற்று, மக்கள் இன்னும்
உய்வண்ணம் உணர்ந்திலரே என்று கண்ணீர்
உகுக்கின்ருர் நல்லறிஞர்; இன்னும் சில்லோர்
கைவண்ணம் பலகாட்டித் தாமே வாழக்
காசினியில் வடிக்கின்ருர் முதலைக் கண்ணீர்

# மாணவர் மன்றம்

### நிலைமண்டில ஆசிரியப்பா

நாட்டிற் பற்பல நலிவுகள் கண்டோர்
ஓட்டிட வேண்டி உயர்பணி செய்தனர்;
தாய்மொழி நாட்டம் தவிர்ந்தனர் தமிழரென்
றுய்முறை பலகண் டரசியற் போரிடச்
சான்றோர் பலராய்ச் சார்ந்தனர்; சிந்தனை
தோன்றுதல் இலராய்ச் சொல்வதே கேட்டு
மாய்ந்தனர் மக்களென் றுய்ந்தனர் மேலோர்;
சாய்ந்திடும் தமிழகம் தழைத்திட விரும்பி
அல்லும் பகலும் அலைந்து திரிந்து
சொல்லினர் சொல்லினர் சொற்பொழி வாற்றினர்
பெரும்பயன் கண்டிலோம்; பெய்மழை இருந்தும்
அரும்பு தளிருடன் அரும்பும் காயும்
கருகிடல் ஏனெனக் கருதினர் ஒருவர்
துருவினர்; உண்மை தோன்றிய பயனால்
வேரில் தீமை விளைத்திடும் புழுக்கள்
பாரித் திருக்கப் பார்த்தனர்; அவற்றை
நீக்கிடின் நாட்டில் நிலைபெறு நன்மை
ஆக்கிடும் அறிவு வளர்ந்திடும் எனக்கொண்
டன்றே தொடங்கினர் ஆர்வந் துணையாய்

நன்றே செய்தனர், நாடும் திருந்தும்
மாணவர் திருந்தின் மாநிலம் தெளியும்
காணலாம் நலமெனக் கருதிய பெரியார்
மனத்தகத் தெழுந்தது மாணவர் மன்றம்;
நினைத்தவர் யாரெனின் நிகழ்த்துவன் கேண்மின்!
உழைப்பின் உருவம், உள்ளம் விரிகடல்,
களைப்பும் சலிப்பும் காணாச் செம்மல்
நடுநிலை பிறழா நல்லவர், நாட்டில்
கெடுநிலை காணிற் கிளர்ந்தெழு வீரர்,
மனிதருள் முத்து, மயிலை முத்து
எனும்பெயர்க் கிழவர், எமக்கும் கிழவர்.
நிறுவிய மன்றம் நெடுநாள் வாழிய!
பெறுமுயர் தாயெனப் பேணுக இதனை!
தொடர்புறும் மாணவர் தூயவ ராகி
அடலே றென்ன ஆண்மைமீக் கூர்ந்து
மொழியும் நாடும் முந்துறக் கண்டு
வாழ்க வாழ்கென வாழ்த்துதும் யாமே.

# வேண்டுவன

எண்சீர் விருத்தம்

குணத்தாலும் உடலாலும்
அழகு மிக்க
குமரிஎனை மணந்தின்பம்
கொடுக்க வேண்டும்;
கணக்கோடு மகப்பேறு
நிகழ வேண்டும்
கள்ளமிலா நண்டர்களின்
தொடர்பு வேண்டும்;
மணத்தோடு தென்றல்வந்
துலவு கின்ற
மாடியுள்ள வீடொன்று •
வேண்டும்; வாழ்வு
பணத்தாலே இடரின்றி
நடத்துதல் வேண்டும்;
பகையில்லா அருளுள்ளம்
இருத்தல் வேண்டும்.

# மணமகனுக்கு

### நிலைமண்டில ஆசிரியப்பா

மணமகள் நயந்திட மற்றுளோர் மகிழ்ந்திடப்
புதுமணக் கோலம் பூண்டிடும் நினக்குப்
புகல்வதொன் றுளது புந்தியிற் கொள்க!
தேன்மலர் இதழில் தென்றல் வருடத்
தோன்றுமோர் நறுமணம்; துளிர்அரும் பாயினும்
அழிவுறு மலரே ஆயினும் அவற்றுள்
நறுமணம் தோன்றாது நாடுநன் குணரும்;
மக்கள் மணமும் அத்தகு சிறப்பே,
மணம்பெறு பருவம் வந்துள பெண்பால்
பூவின் தன்மை பொலிவதால் அவளைப்
பூப்படைந் தனளெனப் புகன்றிடும் உலகம்;
மலரும் தென்றலும் மணந்திடத் தரகர்
எவரும் இல்லை; இதுவே தமிழர்
மணமுறை யாகும்; மற்றைய எல்லாம்
தமிழ்மணம் அல்ல வந்தவர் தந்தன;
இதனை உணர்ந்துநீ இனிய தமிழால்
மணம்பெறும் அன்ப! வாழ்க! வாழ்க!
பெண்மைக் குயர்வு பேணுக! உடல்நலம்
காத்துக் குழந்தைகள் கணக்கொடு பெறுக!

இன்பங் காணுக! துன்பம் நேரின்
துணிவுடன் அதனைத் துணையுடன் எதிர்க்க!
அன்பைப் பாய்ச்சி இன்முகங் காட்டி
வாழ்முறை தெரிந்து வாழ்க! ஒருவர்
குற்றம் புரியின் மற்றவர் பொறுக்க!
இதுவே வாழ்க்கை இதுவே மணமாம்
உலகில் ஒருவர் மற்றவர்க் குறுதுணை
ஆமெனும் உண்மை அறியச் செய்வது
திருமண மேயிதைத் தெரிந்து வாழ்க!
சமத்துவம் நும்பால் தழைத்திடச் செய்தே
எடுத்துக் காட்டென இலங்குக இனிதே!

# குடும்பம் ஒரு காவியம்

எண்சீர் விருத்தம்

1

அன்பினுக்கோர் எல்லையெனும் அன்னை தந்தை
அறவுரைகள் எடுத்துரைக்கும் ஏடாம், இல்லாள்
இன்பமெனும் சுவையுணர்த்தும் ஏடாம் உள்ளம்
ஈர்க்கின்ற மழலைமொழிப் பிள்ளை நெஞ்சத்
துன்பறுக்கும் இசைச்சுரங்கம், உடன்பி றந்த
துணைவர்களோ தோள்வலிமை காட்டும் ஏடாம்,
வன்புரைக்கும் நாத்தியவள் அவலம் என்னும்
சுவையினையே வடிகட்டி உணர்த்தும் ஏடாம்

2

ஆதலினால் குடும்பமது சுவையால் நெஞ்சை
அள்ளுமொரு காவியமென் றறைதல் சாலும்,
மோதலிலாக் குடும்பத்தில் பகைக்கு ணத்தை
மூட்டிவிடும் ஊராரோ காவி யத்தைத்
தீதுறவே அரித்தொழிக்கும் அந்துப் பூச்சி
செல்கரையான் இவைபோல்வர், அவர்கள் பேச்சைக்
காதுமடுத் திடவேண்டா, ஒதுக்கிவிட்டுக்
காவியத்தைக் காத்திடுக வாழ்வீர் நன்றே!

# இளமையில் நரை

நிலைமண்டில ஆசிரியப்பா

யாண்டுசில வாக நரைபல வாகுதல்
யாங்ஙனம் உற்றீர் என்பீ ராயின்
பெற்றஎன் தாயோ பேசியும் ஏசியும்
ஒருமகன் என்னை உறுதுயர்க் காக்கி
மருமகள் என்னும் மாபெரும் பகையால்
மனைக்கினி யாளைஎன் மனக்கினி யாளைக்
குணத்துயர் வாளைக் கொடுந்துயர்ப் படுத்தி
இல்லின் உயர்வும் என்புகழ் உயர்வும்
கருதில ளாகிக் கடும்போர் தொடுத்தனள்;
ஆளும் அரசோ அயலவர்க் காகி
நாளும் தமிழ்க்கு நலிவே தந்து
நெஞ்சிற் கவலை விஞ்சிடச் செய்தது;
தமிழராய்ப் பிறந்தும் தாய்மொழி தமிழென
நினையார் அதனைத் தாழ்த்த நினைத்து
வயிறு வளர்ப்போர் வதிவதிந் நாடே;
நச்செனும் பொறாமை நயமிலாப் புறஞ்சொல்
இச்சகம் பேசல் இளிவரல் புரிதல்
மிக்கிடக் கண்டு மெலிந்ததென் உளனே
ஓரிரு நண்பர் உயிரெனப் பழகினும்
பலகால் என்னைப் பகைத்துப் பேசிச்
சிலகால் பழகும் சீரியோர் பலரே

# பிரியா நண்பன்

## எண்சீர் விருத்தம்

1

எப்பொழுதும் அவன்முகத்திற் சிரிப்பி ருக்கும்
　　ஏதனுலோ சிலநாளாய் மலர்ச்சி இல்லை;
எய்ப்பின்றிப் பறவையெனத் திரிவான் எங்கும்;
　　இன்றவனே வெளிவருதல் காணேம்; இல்லாள்
தப்பெதுவும் புரியவிலை யேனும் சீறித்
　　தணலெனவே பேசுகின்றுன்; குழந்தை ஒன்றே
இப்புவியில் அவன்தெய்வம் அதனி டத்தும்
　　இடியொலியைக் காட்டுகிறுன் ஏனே? ஏனே?

2

அருள்சிந்தும் விழியிணையில் ஒளியே இல்லை;
　　ஆரிடத்தும் கலகலவென் றுரத்துப் பேசி
வருபவன்றுன் ஊமையெனக் காணு கின்றுன்;
　　வருபுதிய படங்காண முதலில் நிற்போன்
வெறுவெளியில் தனிநிற்கும் தென்னங் கீற்று
　　விளக்குமெழில் அவன்காட்சி என்று கொண்டான்;
பெருமழைபோற் கவிபொழிவான் எழுது கோலும்
　　பேசாமல் இருப்பதுவும் ஏனே? ஏனே?

3

இனிமைமிகு தமிழ்மொழியைத் தாழ்த்திப் பேசின்
எதிர்த்தழிக்கும் அவன்கவிதை; காதற் பாட்டும்
கனிந்திருக்கும்; பகையஞ்சா வீரங் காட்டும்;
கலப்பைஎனும்படையுடையார்உழைப்பில்லார்க்குக்
குனிந்துதரும் நிலையொழிக்கும்; உணர்ச்சி ஏற்றிக்
கொடுஞ்செயலை மடமையினைத் தூள்தூள் ஆக்கும்
பனிமழையிற் குயில்போல வாயடைத்துப்
பாடாமல் இருக்கின்றான் ஏனோ? ஏனோ?

4

சிந்தனையைக் கூர்விழியிற் றேக்கிக் கையிற்
செவிபொருந்தக் கன்னத்தைச் சேர்த்து நெஞ்சம்
நொந்திருக்கும் எண்ணமெலாம் கவிதை யாக்கி
நோவொழிந்தான்; கவிதையினைச் சட்டைப் பையில்
தந்துவைத்தான்; அவன்மனையாள் நோக்கி அந்தத்
தாள்விரித்து மலர்விழியின் இதழ்விரித்து
வெந்திருக்கும் மனம்விரித்த பாடல் தன்னை
விளம்புதற்குச் செவ்வாயின் இதழ்விரித்தாள்

5

"மனையாளைப் பிரிந்திருப்பேன் உன்னை ஓர்நாள்
மறந்தறியேன் அன்றிலென நாமிருந்தோம்
எனைமறந்து பிரிந்தனையே! காண்போர் எல்லாம்
இரட்டையரென்றெடுத்துரைக்கஇணைந்திருந்தோம்
தினையளவும் தீதறியேன் உன்றன் வாழ்வே
தினமுநினைந் திருக்கின்றேன் என்பால் நீதான்
மனமுறிய என்னகுறை கண்டாய் தோழா!
மாய்கின்றேன் மாய்கின்றேன் அறிவாய் நண்பா!

6

நண்பருனக் கெத்தனையோ பேர்கள் உள்ளார்;
நல்லவராய் உண்மையராய் நின்றன் சீரும்
எண்ணுவராய் இருந்திடுவோர் எத்து ணைப்பேர்?
என்னுளத்தை இத்தனைநாள் உணர்ந்தா யல்லை!
கண்கலங்க முகஞ்சுருங்க நீயி ருப்பின்
கண்டிருக்க நெஞ்சுபொறேன் அப்பொ ருமை
எண்ணுவதல் லால்வேறு கெடுபொ ருமைக்
கிடங்கொடுத்து நானறியேன் அறிவாய் நண்பா!

7

என்காதல் மனைவியிடம் சொலம றைப்பேன்;
எச்செயலும் நினைமறையேன்; எனது நெஞ்சம்
அன்பால்நெக் குருகுமடா! என்னு ளத்தை
அறுத்தெடுத்துப் பார்த்தாலுன் னுருவ மொன்றே
முன்பாகத் தோன்றுமடா! கவலைக் கெல்லாம்
முறிமருந்தாம் என்மகவு பின்னர்த் தோன்றும்
என்போடும் குருதியிடை உயர்ந்த நட்பே
இயங்குவதை உணராயோ இனிய நண்பா!"

# எவர்சொற் கேட்பது?

எண்சீர் விருத்தம்

1

கடவுளரைப் பாடென்றான் ஒருவன்; மாந்தர்
கண்ணீரைச் சிந்துகிறார் அதனைப் பாராய்
மடமைக்குப் பாடியவை போதும் போதும்
மனிதனை நீ பாடிடுக என்றான் மற்றோன்;
கடலிடையே எழும்பரிதி சிவந்து காட்டிக்
கவிதைக்கு நான்பொருளாய் அமைவேன் என்றான்;
படரிருளை ஓட்டுகின்ற மதியோ காதற்
பாட்டுக்கு நானின்றேல் யாரே என்றாள்

2

பசும்புல்லின் நுனிப்பனிநான் உன்வி ழிக்குப்
படவிலையோ? எனநகைக்க உருத்து மேகம்
விசும்பிருக்கும் எனைவிடுத்துப் பாடு தற்கு
வேறுளதோ என்றதட்டச் செய்கை தோறும்
குசும்பிருக்கும் பிள்ளைமொழி பாடி விட்டால்
குறைந்தாபோம்? எனமனைவி புலந்து சொல்ல
உசும்புகின்ற உணர்வொடுங்கிப் பாட்டில் நெஞ்சம்
ஓடாமற் செயலின்றிக் கவிஞன் நின்றான்

3

கார்வரவும் நான்வருவேன் என்றார் இன்னும்
காணவில்லை மழையேபோ என்றொரு ருத்தி
போர்புரிவாள்; காதலர்என் னருகில் உள்ளார்
பொழிகமழை பொழிகஎன இன்பம் பொங்க
மார்பகங்கள் பூரிப்பாள் மற்றொரு ருத்தி;
மழைபெய்யின் நல்விளைச்சல் காண்பேன் என்பான்
ஏர்புரிவோன்; மற்றொருவன் இன்று பெய்தால்
எள்முதிர்ந்து நிற்பதெலாம் பாழே என்பான்

4

தண்முகிலே நீபொழிந்தாற் சோறே யில்லை
தயைசெய்வாய் என்றுழைப்பால் உண்போன்
சொல்வான்;
கண்மறையப் போர்வைக்குள் சுகமே காண்போன்
களித்திருப்பான்; இரப்பாளன் வசவு சொல்வான்;
விண்மழைக்கு வரவுரைத்து மயில்கள் ஆடும்;
வேறொருபாற் குயில்வருந்தி வாய டங்கும்;
பண்ணிசைக்கும் கவிஞனுடன் காள மேகம்
பாரிலெவர் உரைகேட்டு நடத்தல் ஆகும்?

# மன்னர் ஆட்சி

எண்சீர் விருத்தம்

1

மன்னாட்சி என்னுஞ்சொற் கேட்டாற் போதும்
மனங்குமம்பி வாய்பிதற்றி வெறுத்துச் சொல்வோர்
என்னாட்டில் இருக்கின்றார் அவர்க்குச் சொல்வேன்;
எங்கெங்கோ கொடுங்கோலர் ஆட்சி செய்தார்
அந்நாட்டார் வெறுத்துரைத்தல் இயல்பே யாகும்;
ஆருயிராய்ச் செங்கோன்மை புரிந்து வந்த
இந்நாட்டில் தமிழகத்தில் மன்னர் ஆட்சி
இகழ்ந்துரைப்போர்க் கெஞ்சுவது பழியே யாகும்

2

குடிபுரக்கும் படியிருக்கும் மன்னர் ஆட்சி
கொடுங்கோன்மை கண்டறியா நிலையி ருக்கும்;
மடிசுரக்கும் ஆவினைப்போல் மக்கள் வாழ்வில்
வளஞ்சுரக்க அருள்சுரக்கும் அவர்தம் நெஞ்சம்;
முடியிருக்கும் வாளிருக்கும் வெற்றி கூறும்
முரசிருக்கும்; குடியாட்சிப் பண்பே அங்குக்
குடியிருக்கும்; இவ்வுண்மை அறிய கில்லார்
குறைகூறின் அவர்மதியில் பழுதி ருக்கும்

3

மொழிவளர்த்தார் கலைவளர்த்தார் அறம்வ ளர்த்தார்
　　முறைபிறழும் நிலைவருமேல் அறிஞர் நல்ல
மொழியுரைக்கச் செவிகொடுத்தார்; கற்பின் செல்வி
　　மூண்டெழுந்த சீற்றத்தால் கடிந்து ரைத்துப்
பழியுரைத்தாள் உயிர்கொடுத்தான் பாண்டி மன்னன்;
　　பார்த்ததுண்டோ குடியரசில் இதுபோல் மேன்மை
இழிவுரைக்க முயலாதீர்! உயர்ந்த தென்றே
　　இயம்பிடுக சங்கத்து மன்னர் ஆட்சி

# காவலும் களவும்

நேரிசை ஆசிரியப்பா

'வணக்கம் நண்பா வா'என, அவனும்
வணக்கம் கூறி, ''வாடிய நிலையில்
கவலை நோக்கும் கலங்கிய கண்ணும்
சிவணிய தென்னை? செப்புதி'' என்றனன்;
இருளகல் வைகறை என்மனை அழுகுரல்
விரவிடப் பதறி விரைந்தெனை எழுப்பினள்
துள்ளி எழுந்தேன் ''தொலைந்தது சொத்தெலாம்
அள்ளிப் போயினன் திருடன் ஐயகோ''
என்றென் றிறைந்தனள்; என்மனம் சுழன்ற(து)
இன்றோ நேற்றோ என்உழைப் பதனால்
வந்த பொருளோ? வாழ்ந்தஎன் முன்னோர்
தந்த பொருளாம் தரணியில் அவர்தம்
தாளாண் மைக்கொரு சின்னம்! மலைநிகர்
தோளால் காத்தருள் தூயநற் பொருளாம்!
அந்தோ அந்தோ அதனை இழந்தேன்
எனநான் உரைத்தேன்; எள்ளி நகைத்தவன்
''முனம்நீ நம்நகர்க் காப்பகம் முந்துற
ஓடி உரையா திருந்தனை ஊமையாய்!
முன்னோர் சொத்தென முணுமுணுக் கின்றனை

முன்னோர் சொத்தாம் முத்தமிழ் நாட்டின்
எல்லைகள் போயின ஏன்எனக் கேட்டிலை!
இல்லை உரிமை எனஎண் ணினையோ?
பகலிற் கொள்ளை பாராய்! உலகம்
நகுதற் பொருட்டோ நற்றமிழ் மகனே!
மொழியும் நாடும் முன்னோர் சொத்தாம்
அழியா வண்ணம் அவர்வழி வந்தோர்
காத்தல் வேண்டும்; காக்கும் உரிமை
மூத்தஇம் மண்ணில் முளைத்தோர் யார்க்கும்
உண்டென உணரின் ஒழியும் தீமை
பண்டைய நிலைமை பாரில் வாய்க்கும்;
நிற்கஎன் தோழா! வாயிலில் நின்நாய்
நிற்க எவ்வணம் நிகழ்ந்தது திருட்டு?
மொழிக" என்று மொழிந்தனன் நண்பன்;
ஒழிகஅந் நாயே ஒழிகஅந் நாயே
நன்றி மறந்தது நன்றி கொன்றது
காட்டிக் கொடுக்கும் கயமை மிகுந்தது
வீட்டின் ஒருபுறம் விரும்பும் உணவைப்
போட்டுளார் திருடர் புசித்தது நாய்தான்
கடமை மறந்தது களவும் நிகழ்ந்த(து)
உடைமை யிழந்தேன் எனநான் உரைத்தேன்
"நாயினைத் திட்டினை நம்மவர் பண்பும்
ஆயின் அன்னதே! அதற்கென் செய்குவை?
பதவி யுணர்வைப் பார்த்ததும் குழைந்து
சதமென எண்ணிச் சார்ந்து திருடர்க்கு
வழிவகை செய்வர் பழிஎன நாணார்
இழிதொழில் புரிந்தும் ஏற்றம் பெறுவர்
தாயைப் பழிப்பர் தருக்குடன் நிற்பர்
நாடும் மொழியும் நமதென எண்ணார்

ஆடி வருமவர் அடியிணை வருடிச்
சூடி மகிழ்வர் சொல்லவும் வெட்கம்;
தீநாய்த் துணையால் திருடர் கவர்ந்தது
தோளால் காத்த சொத்தெனப் புகன்றனை;
வாளால் காத்த நாட்டினை வருவோர்
கவர்ந்திட இங்கே காவல் புரிந்திடும்
அவர்மதி என்னே! என்னே!''
என்றுரை கூறி ஏகினன் அவனே

# இளஞாயிறு

### நிலைமண்டில ஆசிரியப்பா

விரிநில மாந்தர் நிறைமட மென்னும்
இருளில் மூழ்கி இடர்பல வெய்தித்
துயருறுங் காலைச் சுடரொளி பரப்பி
மயல்இரிந் தோட வருமிள ஞாயிறாய்த்
தோன்றினை ஏசெனும் தோன்றலே! உலகில்
நினக்கென முயன்றிலை பிறர்க்கென முயன்றனை
குணக்குன் றென்னக் கூற நின்றனை
அழுக்கா றொடுமடம் அவாவுடன் வெகுளி
குழுக்கொண் டெழுந்து குமுறும் முகிலென
நின்னொளி மறைக்க நிமிர்ந்தன வாயினும்
பொன்னுடல் மறைத்தன மின்னொளி மறைத்தில
பொன்முடி சூட்டப் புரியா மாந்தர்
முண்முடி சூட்டி முடித்தனர் என்னே!
இருள்நீக்க வந்த இளஞாயிறு நின்றன்
அருள்காக்கும் வாழ்வை இரவாக்க எண்ணிச்
சிலுவை கண்டனர் சிறியர்; நீயோ
குலுவுமவ் விரவிலும் நிலவிய கதிரொளி
பாரெலாம் பரப்பும் பாங்கு பெற்றனை
தொண்டுளம் கொண்ட தூயவர் தம்மை

மண்டிணி ஞாலம் மறப்பினும் உண்மை
கண்டுளம் களிக்கப் போற்றுதல் கண்டோம்;
பின்னர் வந்தவர் நின்பெயர் சொல்லிப்
பண்ணும் இழிசெயல் பகர்தலோ அரிதே!
பொன்மொழி புகுதா வன்செவி மாக்கள்
அன்பை மறந்தனர் அறிவை இகழ்ந்தனர்
வன்பே புரிந்து வாழ்தல் விழைந்தனர்
புறத்துறுப் பெல்லாம் போற்றி வளர்த்தனர்
அகத்துறுப் பொன்றே அகற்றினர் உள்ளார்
புறத்தில் தூய்மை சிறப்புடன் ஏற்றினர்
அகத்தில் அழுக்கும் அவ்வணம் ஏற்றினர்
ஆகுல நீரன ஆற்றினர் சாற்றினர்
ஆகும் நெறியதும் ஆகா நெறியதும்
காணும் அறிவினைக் காணார் நின்னைப்
பேணும் முறையிற் பிழைபா டுற்றனர்
என்னே இவர்தம் இயல்பே! இனியும்
கொன்னே புரிவினை கொள்ளா ராகி
நீநயந் துரைத்த நெறியினிற் செல்க!
நாநயங் கூறி நல்லன நினைந்து
மாநிலம் அன்பால் மலர்க! போரின்
தீங்கெலாம் நீங்கித் தெளிகநல் லமைதி!
யாங்கணும் தொண்டுளம் ஓங்குக பெரிதே!

# மறைந்தாரோ ?

## எண்சீர் விருத்தம்

1

ஐயையோ திரு.வி.க. மறைந்தார் கொல்லோ!
ஐம்புலனும் ஒடுங்கியதே! தமிழி னத்தார்
செய்வதென்ன? தமிழ்பேசும் செவ்வாய் எங்கே?
செம்மையுறு தொண்டெங்கே? சமயம் சார்ந்த
பொய்மைஎலாம் அழித்தாரே! புதுமை வாழப்
பொதுமைநெறி கண்டாரே! அவர்ந மக்குக்
கைமாறு கருதாமல் உழைத்தா ரந்தோ!
கதறுகிறேன் அவர்மறைவு கேட்ட தாலே

2

தாழ்ந்தநிலைத் தமிழகமே! நின்வாழ் வுக்கே
தந்நலத்தை மறுத்தெழுந்த தூயர் தம்மை
ஆழ்ந்தநிலைக் காக்கிவிட்டாய்! ஈது மாறு
அவமானம்! அவமானம்! வறுமைப் பாட்டில்
வீழ்ந்திருந்தும் வாழ்வாங்கு வாழ்ந்து நின்றார்;
வீரமுடன் இருந்தாரே அவரை இங்கு
வாழ்ந்திருக்க விட்டாயா? நன்றி யீதோ?
வீணருக்கு வாழ்வுதந்தாய் அந்தோ! அந்தோ!

# எங்கே சென்றீரோ ?

## பஃறொடை வெண்பா

அஞ்சுகிலா நெஞ்சாய்! அறிவாய்ந்து கூர்காட்டும்
செஞ்சொல்லாய்! சீர்திருத்தத் தென்னாட்டு மோகன்ராய்!

எங்கள் முருகப்ப! எம்போல்வார்க் கோர்துணையே!
இங்கிருந்து சென்னைநகர் ஏகியநீ மீளவில்லை

என்னுஞ்சொல் அம்பாய் இதயத்துத் தைத்ததுவே
என்னஇனிச் செய்வோம் இரங்கலன்றி அந்தோநின்

தோழர் திரு.வி.க. தூய கவிமணியார்
வீழ நமக்கினிமேல் வேலைஎன்ன என்றுணர்ந்தோ?

கம்பனிடம் சென்று கருத்தறிய வேண்டுமென்றோ?
வெம்பும் அழுக்காற்று வீணுலகம் ஈதென்றோ?

நீயெம்மை நீத்தனையே! நிற்கின்றோம் இவ்வுலகில்
தாயில்லாச் சேய்போல் தவித்து

❋

# ஆறாத் துயரம்

எண்சீர் விருத்தம்

1

வல்லீட்டி பாய்ந்ததுவே எனது நெஞ்சில்
மாணவர்காள் எவ்வண்ணம் வாய்தி றந்து
சொல்லூட்டித் தமிழ்சொல்வேன்! சோர்வு பெற்றேன்
துடித்துமனம் வெந்துழலத் துயரங் கொண்டேன்
வில்லோட்டும் கூரம்போ கொடிய வாளோ
வெள்வேலோ நகைமன்னர் மாய்ந்தார் என்ற
சொல்லீட்டி பாய்ந்ததுவே! இனிமேல் நாமும்
சுவையாக நகைச்சுவையைக் காண்ப தென்றோ!

2

கடுந்துன்பம் எத்துணைதான் வரினும் நெஞ்சம்
கலங்கலிலான்; சிரிப்பொன்றே துயரை நீக்கி
விடுமென்பான்; மன்பதைக்கும் அந்த வுண்மை
விளக்கிநின்றான்; கண்புதைத்து நாமெல் லோரும்
படுந்துயரம் தனைமறப்ப தெவ்வா றந்தோ!
பகர்ந்துவந்த அச்சிரிப்பு மருந்தாய் ஆமோ?
நெடுங்கடலே! வான்பரப்பே! சுடுநெ ருப்பே!
நீணிலமே! பெருங்காற்றே! அழுதீர் கொல்லோ?

3

திரையுலகில் மன்னனவன்; தமிழ கத்துச்
சீர்திருத்த நல்லுலகில் மன்னன்; தீய
குறையொழியப் பகுத்தறிவைச் சுவையாய் ஆக்கிக்
குழைத்தெடுத்துக் கொடுக்கின்ற மன்னன்; வெய்ய
சிறைஎனினும் அஞ்சலிலான் அங்கி ருந்தும்
சிந்திக்கும் மன்னனவன் கொடுமைச் சாக்கா(டு)
இரையெனவே கொண்டதுவோ அந்தோ! அந்தோ!
இவனை அலால் கிடைத்திலரோ உலகில் எங்கும்!

4

கிந்தனெனும் புதுமைதரும் கதையைப் பாடக்
கேட்பதினி எந்நாளோ? பொங்கல் நாளில்
எந்தவிதம் வானொலிதான் அவன்க ருத்துக்
கோவைகளை எடுத்தியம்பும்? நடிகர் யார்க்கும்
பந்தமுடன் அறிவுறுத்தி வழியும் காட்டிப்
பாங்குறுத்தத் தலைவரினி யாரே உள்ளார்?
சிந்தைஎலாம் தேள்கொட்டிக் கிடந்து வாடும்
குடும்பமதைச் செயற்படுத்த வல்லார் யாரே?

5

நின்வாழ்வின் மதுரந்தான் பிரிவை அந்தோ
நினைந்தாற்ற வல்லாரோ? கொடுமை வந்து
பொன்வாழ்விற் புகுந்ததுவே! நினக்க மைந்த
புதுநடையைக் கனிமொழியைப் பெருஞ்சி ரிப்பைத்
தம்வாழ்வில் எவ்வண்ணம் மறந்தி ருப்பார்?
தவிக்கின்ற பல்குடும்பம் யாது செய்யும்?
மின்வாழ்வாய் அமைந்ததுவே நின்றன் வாழ்வு!
மேலவனே! பிரிந்தாலும் நிறைந்தாய் நெஞ்சில்

# நெஞ்சம் கலந்த தாய்

அறுசீர் விருத்தம்

1

பெயருடன் தருமம் சேர்ந்த
பேருளத் தம்மா! நின்றன்
செயலிலும் தருமம் கண்டோம்
செம்மையின் திறமும் கண்டோம்
மயலுறும் இளைஞர் மாதர்
வாழ்வினில் உய்தல் வேண்டி
முயன்றதும் கண்டோம்; நாளை
அவர்க்கென முயல்வார் யாரே?

2

மாணவர் மன்ற மென்னும்
வளரிளங் குழந்தை யின்று
காணெழில் கூர்ந்து காளைப்
பருவமாய் நிற்குங் காலை,
பேணிய செவிலித் தாயே!
பெருமுது கிழவன் நற்றாய்
காணவன் மயிலை முத்து
கலங்கிடப் பிரிந்தாய் அந்தோ!

3

புலவராம் எம்ம ஞேரைப்
புன்மொழி புகன்று திட்ட,
அலமரும் பொழுதத் தந்த
அமைச்சவை நடுங்கப் பேசும்
கலகல என்னும் பேச்சைக்
காதினுற் கேட்ப தென்ருே!
புலவரை இகழ்வார்க் காணின்
புலியென எழும்தாய் யாரே?

4

பண்புறும் தமிழர் நாட்டைப்
பாழ்செய இந்தி வந்து
புண்படச் செய்த போது
பொங்கியே சினந்து பாயும்
பெண்புலி ஒன்று கண்டோம்;
பேதையர் கூண்டி விட்டும்
கண்படை கொள்ள வில்லை
அப்புலி காண்ப தென்ருே!

5

மறக்குல மகளே! நாட்டின்
மானமே பெரிதென் றெண்ணித்
திறத்துடன் அறப்போர் ஆற்றும்
தீரர்தம் கைவேல் ஆனாய்
புறப்படும் பெண்ப டைக்குப்
புத்துணர் வூட்டி நிற்கும்
அறப்படைத் தலைவி யானாய்!
எமக்கெலாம் அன்னை யானாய்

அன்னையே உன்போல் மாதர்
ஆயிரம் ஆயி ரம்பேர்
பின்னரும் உள்ளார் என்று
பேசிட வாழ்த்துக் கூறி,
இன்னலும் சிறையும் எங்கட்
கினிமையாய்த் தோன்ற நெஞ்சில்
மன்னுக நீயே உன்றன்
மலரடி வாழ்த்து கின்றோம்

# குறிப்பு

## காதற் சிலை

பழமைச் சிறப்பு வாய்ந்த இலக்கிய வளங்கொண்ட பாரசிகம், என்றென்றும் நிலைத்து வாழும் உயிர்க் கவிஞர் பலரைத் தந்துள்ளது. அக்கவிகளுள் நிஜாமி என்பவரும் ஒருவர். அவர் படைத்த காவியங்கள் உணர்ச்சி வேகம் மிக்கவை. கோசுரு சிரீன் என்னும் பெருங்காப்பியம் அவர் தம் படைப்புக்களுள் ஒன்றாகும். அக் காவியக் கதையைத் தழுவி எழுதப்பட்டது இந்நெடும் பாட்டு.

## சுதமதி

இஃது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலை தரும் செய்தியாகும். மணிமேகலையின் தோழி சுதமதி. இவள் வரலாறு மலர்வனம்புக்க காதையில் 29 முதல் 41 வரையிலுள்ள வரிகளில் காணப்படுகிறது. அதனை விரிவு படுத்தி, வேத நெறியால் சமணநெறிக்கும் புத்த நெறிக்கும் நேர்ந்த விளைவுகளையும் கூறுகிறது இந்தப் பாட்டு.

## அழகின் சிரிப்பு

கோவையில் 1950 மே 27, 28 தேதிகளில் கவியரசர் பாரதிதாசனார் தலைமையில் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு நடைபெற்றது; கவியரங்கமும் நிகழ்ந்தது; அவ்வரங்கில் முதற் பரிசில் பெற்றது இக்கவிதை.

## இயற்கைத் தாய்

குன்றக்குடி விசாகத் திருநாள் கவியரங்கில் 'முருகன் என் தாய்' என்ற தலைப்பில் பாடப் பெற்றது இது.

## எழில்

காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் திரு. சா. கணேசன் தலைமையில் பாடப் பெற்றது இது.

## ஆறு

காரைக்குடி, கம்பன் திருநாள் கவியரங்கில் திருப் பெருந்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பாடப் பெற்றது.

## இயற்கையின் எழுச்சி

இது, 1955-ம் ஆண்டில் தமிழகம் எங்கும் வீசிய பெரும் புயலால் நேர்ந்த விளைவுகளைக் கண்டு பாடப் பெற்றது.

## முகிலிடை நிலா

இது, பொன்னி இதழில் 'பாரதிதாசன் பரம்பரை' என்ற தலைப்பில் வந்தது.

## ஊரார்

இது, காரைக்குடி, கம்பன் திருநாள் கவியரங்கில் திரு. நாமக்கல் கவிஞர் தலைமையில் பாடப் பெற்றது.

## விறகுவெட்டி

ஊர்ப்புறத்தே விறகு வெட்டிக் கொண்டிருந்த ஒருவனை அடித்துத் துன்புறுத்திய கொடுமையை நேரிற் கண்டு மனம் நொந்து பாடியது.

## பட்டண வாழ்வு

முதன் முதலாகச் சென்னைப் பட்டணத்தைக் கண்டு பாடியது இது.

## மொழியுணர்ச்சி

காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற கவியரங்கில், திரு, ப. துரைக்கண்ணு முதலியார் தலைமையில் பாடப்பெற்றது.

## மணிவிழா வாழ்த்து

பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் மணிவிழாவுக்காகப் பாடப்பெற்றது.

## தமிழர் தந்தை

கவியரசர் பாரதிதாசனார் மணிவிழா மலரில் வெளியிடப் 'பொன்னி' இதழார், 'பாரதிதாசன் தமிழர்களின் தந்தை' என்னுந் தலைப்பைத் தந்தனர்; அப்பொழுது பாடப்பெற்றது.

## வாழ்த்துகிறார்

அமராவதி புதூர் மகளிர் இல்லம் கண்ட திரு சொ. முருகப்பனார் மணிவிழாவுக்காகப் பாடப்பெற்றது.

## வாயுறை வாழ்த்து

கவிஞரின் உயிர் நண்பரான திரு தமிழண்ணலுக்கும் அடைக்கம்மை என்ற சிந்தாமணிக்கும் நடைபெற்ற திருமணத்தில் பாடப்பெற்றது.

## கா அப்பா

திரு கா. அப்பாதுரையார், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றமைக்காகத் திருச்சிராப் பள்ளியில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பாடப்பெற்றது.

## கம்பன் குரல்

தஞ்சை, கம்பன் திருநாள் கவியரங்கில் திரு சா. கணேசன் தலைமையில் பாடப்பெற்றது.

## மாணவர் மன்றம்

சென்னையிலுள்ள மாணவர் மன்றத்தை வாழ்த்திப் பாடியது.

## பிரியா நண்பன்

கவிஞரின் நண்பரொருவர் தவருன கருத்துக் கொண்டிருந்தபொழுது அதனை நீக்கப் பாடியது.

## எவர்சொற் கேட்பது?

பலரும் கவிஞரிடம் வந்து 'அதைப் பாடு' இதைப் பாடு' என்று தொல்லை தந்தபொழுது பாடியது.

❖

*சாகித்திய அகாடமியால் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்க எடுத்துக் கொள்ளப்பட்ட பாடல்கள் :—*

| | | |
|---|---|---|
| 1. | தென்றலெனும் தொட்டிலிலே | (இயற்கைத் தாய்) |
| 2. | பொதுவுடமை ஆட்சியினை | (நிலவு) |
| 3. | இதழ் விரித்து நகைகாட்டி | (காற்று) |
| 4. | ஊர் மக்கள் வெறுத்தொதுக்கும் | (ஆறு) |
| 5. | விளங்காத மொழிபேசும் | (கடல்) |
| 6. | நினைக்கின்ற உளத்தாலும் | (மனத்தூய்மை) |
| 7. | துப்பாக்கி கொலைக்கருவி | (மனத்தூய்மை) |
| 8. | அழுக்காறு வெகுளியவா | ( ,, ) |
| 9. | என்றென்றும் கெடுவதில்லை | ( ,, ) |

10. குதிரை நினைத்தால் →

கவிமணி

# தேசிக விநாயகம் பிள்ளை நூல்கள்

| | | ரூ. ந.பை. |
|---|---|---|
| குழந்தைச் செல்வம் | ... | 0–75 |
| மலரும் மாலையும் | ... | 5-00 |
| மருமக்கள் வழி மான்மியம் (அச்சில்) | ... | 2-00 |
| உமார்கய்யாம் பாடல்கள் | ... | 1-25 |
| ஆசிய ஜோதி | ... | 1-50 |
| தே. வி. யின் கீர்த்தனங்கள் | ... | 1-75 |
| கவிமணியின் உரைமணிகள் (அச்சில்) | ... | 3-00 |

★

பாரி நிலையம்

59, பிராட்வே · சென்னை 1



Jacket Printed at Neo Art Press, Madras-2